www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 18 | ஒக்ரோபர் 2011 | பக்கம் 16 | விலை 20/= | சுழற்சி 138

# மகிந்த சிந்தனையால் மறுக்கப்படும் அரசியல் தீர்வு



தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை வழிநடத்துவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான "மஹிந்த சிந்தனை" வேலைத் திட்டமாகும். அதன் கீழேயே பொருளாதார, அரசியல், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எனப்படுபவை முன்னெடுக்கப்படுகின்றன. அந்த மகிந்த சிந்தனையின் கீழேயே கொடிய யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது. ஜனாதிபதியின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொன்றிலும் மஹிந்த சிந்தனை இருப்பதாகவே பிரச்சாரங்களும் பரப்புரைகளும் செய்யப்படுகின்றன. அதேவேளை நாட்டின் பிரதான பிரச்சினையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது என்பது இழுத்தடிக்கப்படுகிறது அல்லது மறுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு அடிப்படைக் காரணமாக இருந்து வருவது மஹிந்த சிந்தனையேயாகும். அச் சிந்தனைக்குள் பேரினவாத கருத்தியலும் அதன் வழியிலான சிந்தனை நடைமுறைகளும் நிறைந்திருக்கின்றன என்பது அப்பட்டமான உண்மையாகும்.

யுத்தம் முடிவுற்று இரண்டரை வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் இது வரை அக்கொடிய யுத்தத் திற்கு வழிவகுத்த தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அதற்குரிய எந்தவொரு நேர்மையான முயற்சியும் மேற்கொள்ளப்பட வில்லை. அதற்கு பதிலாக வெறும் இழுத்தடிப்பும் ஏமாற்றுத்தனமான செயற்பாடுகளுமே முன்னெடுக்கப்படுகின்றன. அவை எதுவும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாகே உள்ளது. இதனால் அரசினதும் ஜனாதிபதியினதும் உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாட்டைப் புரிந்துக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

தொடர்ச்சி 3ம் பக்கம்




நியூயோக்கில வோல் ஸ்ரீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கனக்கான அமெரிக்க மக்கள் தொடர்ந்து வீதிப் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

## அமெரிக்காவின் அழைப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்.

ஐக்கிய அமெரிக்காவின் ஆளும் அரசாங்கத் தலைமையகமான வெள்ளை மாளிகையில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அங்கு வருமாறு அழைப்புக் கிடைத்திருக்கின்றது. இம் மாதம் 25ம் திகதி இரா.சம்பந்தன் தலைமையில் நால்வர் கொண்ட குழு அங்கு செல்லவிருக்கின்றது. இது நல்ல தருணமெனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் குதூகலிக்கன்றன. யுத்த வெற்றிக்கும் புலிகளின் தோல்விக்கும் பின்பான இரண்டரை வருட காலத்தில் வடக்கு கிழக்கின் தமிழர் சமூக அரசியல் பரப்பில் வாக்குகள் பெறும் அரசியலைத் தவிர வேறு எதையும் கூட்டமைப்பால் செய்ய இயலவில்லை அதேவேளை அரசாங்கத்துடன் பதினொரு தடவைகள்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## காணிப் பதிவும், எல்லைகள் மாற்றமும் திட்டமிட்ட பேரினவாத செயற்பாடு.

வடக்குக் கிழக்கில் உள்ள காணிகள், அவற்றின் உரிமையாளர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் ஒரு திடீர் பதிவுமுறையை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. அதற்கான அமைச்சு மட்ட உயர் அதிகாரிகள் களத்தில் இறங்கி மாவட்டச் செயலகங்களூடாக படிவங்களை விநியோகித்து வருகின்றனர். கிராம சேவையாளர்களுக்கு வழிகாட்டும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை வடக்கில் அரசாங்கம் மற்றொரு செயற்பாட்டிலும் தீவிரமாக இறங்கியுள்ளது. அதாவது வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில கிராம சேவையாளர் பிரிவுகள் அடங்கிய கிராமங்களே சிங்கள எல்லைக் கிராமங்களுடன் இணைத்து வெலிஓயா பிரதேச செயலர் பிரிவொன்றை ஏற்படுத்துவதாகும். இது ஏற்கனவே திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தினால் உருவாக்கப்பட்ட வெலிஓயாவையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கொண்ட புதிய பிரிவாக்கப்படும். அது வெலிஓயா பிரதேசச் செயலர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச் செயற்படும். அதற்கான எல்லைகள் புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ளன. ஏற்கனவே திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தால் உருவாக்கப்பட்ட பதவியா முன்பே அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்குக் கிழக்கின் காணிகள் பதியப்படுவதில் அரசாங்கத்திற்கு பலநிலை உள்நோக்கங்கள் உண்டு. அதில் ஒன்று புலம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளைப் பற்றிய விபரங்களை உத்தியோக பூர்வமாகத்

தொடர்ச்சி 2ம் பக்கம்







## மலையக டெவன் தோட்ட மக்கள் மீண்டும் மண்ணை மீட்கப் போராட்டம்

1977 மே மாதம் 07 ஆம் திகதி டெவன் தோட்டத்தின் 7000 ஏக்கர் காணியைப் பெரும் பான்மையின மக்களுக்குப் பிரித்து கொடுப்பதற்கு அன்றைய அரசாங்கம் செய்த சதி திட்டத்திற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் வெகுண்டு எழுந்த போது துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி தன்னுயிர் நீத்த தியாகி சிவனு லெச்சுமனன் மீட்டு கொடுத்த தமது மண் மீண்டும் கபடமாக பணக்காரர்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்கு எதிராக டெவன் தோட்ட தொழிலாளர்கள் கடந்த நான்கு நாட்களாக வீதியில் அமர்ந்து பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மஸ்கெலியா பிலான்டேசன் நிறுவனத்திற்கு சொந்தமான டெவன் தோட்டத்தின் அழகிய டெவன் நீர் வீழ்ச்சிக்கு பக்கத்தில் அமைந்துள்ள டெவன் தோட்டத்திற்கு சொந்தமான காணியே சில பணக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது இது தொடர்பாக நாங்கள் ஏதும் அறியோம் என கூறுகின்றனர்

தோட்டமுகாமையாளர் அமன்பொலவிடம் வினவிய போது தான் இது தொடர்பாக கம்பனிக்கு அறிவித்திருப்பதாகவும் அவர்கள் இந்த காணி விற்பனை தொடர்பாக மேலதிக விசாரணை செய்வதாகவும் கூறினார் மக்களின் போராட்டம் தொடர்பக தான் கருத்து கூற இயலாது என்றும் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள மேற்படி காணி தோட்ட நீர்வாகத்திற்கு சொந்தமானது எனவும் தெரிவித்தார்.

போராட்டத்திற்கு தலைமை தாங்கும் தொழிலாளர்களில் ஒருவரான சிவகுமார் கருத்து தெரிவிக்கையில், காடுகளை களனியாக்கி எமது முதாதையர் பணத்தினை அள்ளித்தரும் பசுஞ்

### சிவனு லட்சுமனனின் தியாகம் வீண்போகக்கூடாது

சோலையாய் மாற்றினார்கள். ஆனால் காணிகளை சுவீகரித்துள்ளவர்களில் ஒருவன் 22 ஏக்கர் காணி தனக்கு சொந்தம் என்றும் மற்றும் ஒருவன் 50 ஏக்கர் காணி தனக்கு சொந்தம் என்றும் கூறுகின்றனர். உழைப்பாளர்கள் நாங்கள் 8 அடி லயத்தில் சிறை வாழ்க்கை வாழ்கிறோம் எங்களுக்கும் காணி வேண்டும் எங்களுக்கும் காணிகளை பிரித்து தாருங்கள் என்று கூறினார்.தோட்டத்தின் மாதர் சங்க தலைவி நிர்மலாவிடம் வினவிய போது சிவனு லெச்சுமணன் மீட்டுத் தந்த இரத்தம் தோய்ந்த இந்த மண்ணை மீண்டும் சூறையாட விட முடியாது எங்களுக்கு நடப்பதற்குக் கூட பாதை இல்லாமல் போகக் கூடிய நிலை உருவாகியிருப்பதாகவும் உல்லாச விடுதிகள் கட்டப்பட்டு வருவதனால் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் அச்சத்திற்கிடமாகி இருப்பதாகவும் கூறினார்.

காணியில் உல்லாச விடுதி ஒன்றை கட்டிக் கொண்டிருக்கும் பெயர் சொல்ல விரும்பாத பிரதேச தனவந்தர் ஒருவர் கூறும் போது தான் சட்ட ரீதியாகவே இந்தக் காணியைப் பெற்றுக் கொண்டதாகவும் நீதி மன்றத்தில் தான் தீர்த்துக் கொள்வதாககவும் கூறினார்.

உல்லாசப் பிரயாணிகளின் கண்கவர் பிரதேசமான இந்த இடத்தில் அழகான நீர் விழ்ச்சியும் பசுமையான இயற்கையும் ஊசியிலைக் காடுகளும் நாசம் செய்யப் பட்டு உல்லாச விடுதிகளை அமைத்து வரும் இந்த பணக்காரர்களுக்குபின்னால் பல அரசியல் சக்திகள் செயல்படுவதாக கூறப்படுகின்றது .

சிவனு லெச்சுமணன் பெற்றுக் கொடுத்த இடத்தை மக்களு

தொடர்ச்சி 2ம் பக்கம்

www.padippakam.com



# தோழர் சுகேசனனை விடுதலை செய்!



**பு.ஜ.மா.லெ கட்சியின் முன்னிலைத் தோழர் சுகேசன் கடந்த நாலரை வருடங்களாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் கட்சியின் ஐந்து தோழர்கள் ஏற்கனவே இரண்டரை, மூன்றரை வருடங்களுக்கு பின் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் தோழர் சுகேசன் மட்டும் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. இது ஏன்? என்றே கேள்வி எழுப்புகின்றோம். எனவே தோழர் சுகேசனனையும் அவரைப் போன்று வீசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு மக்களோடு இனைந்து குரல் கொடுக்கின்றோம்**

**அமெரிக்க அழைப்பும்**
**1ம் பக்க தொடர்ச்சி**

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோதும் எதனையும் அரசாங்கத் தரப்பிலிருந்து பெறவும் முடியவில்லை. ஏனெனில் மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாத நிகழ்ச்சி நிரல் மிகவும் வேகமாக முன்னெடுக்கப்படும் இச்சூழலில் கூட்டமைப்பு இயலாமை அரசியலையே பற்றி நிற்கின்றது. இந்நிலையில் அமெரிக்காவின் அழைப்பு கைகளில் பற்றிக் கொள்ளக்கூடிய ஒரு கயிறாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு அமெரிக்க அழைப்பு கூட்டமைப்புக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தாலும் தமிழ் மக்கள் இதனால் மகிழ்ச்சி கொள்ளவியலாது. ஏனெனில் அமெரிக்கா ஒருபோதும் தமிழ் மக்களின் நண்பனாகவோ அல்லது இரட்சகனாகவோ இருக்கப்போவதில்லை. இந்தியாவிடம் முறையிட்டு முறையிட்டு களைத்த நிலையிலேயே அமெரிக்க அழைப்பு வந்து அவர்களுக்கு ஆறுதல் கொடுத்துள்ளது. ஆனால் அந்த அழைப்பிற்குள் எத்தகைய உள்நோக்கங்கள் நிறைந்திருக்கின்றன என்பதை தமிழ் மக்கள் பார்க்க வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்கு முரண்பாடுண்டு. மகிந்தவா னவர் முற்றுமுழுதாக அமெரிக்காவின் மகுடிக்கு ஆடாதவராக இருப்பது காணக்கூடிய தேயாகும். அவர் சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுடனும் இந்தியாவின் நெருக்கத்துடனும் இருந்து வருகிறார். இவற்றால் அமெரிக்காவும் மேற் குலகும் மிகக் கடுப்பாக இருந்து வருகின்றன.

எனவே எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போன்று ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் மத்தியிலிருந்து தனக்கு நண்பர்களை அமெரிக்கா தேடி நிற்கின்றது. ஏற்கனவே புலிகள் இயக்கத்தை பல்வேறு உள்ளார்ந்த தொடர்புகள் மூலமும் நோர்வேயின் ஊடாகவும் தனது பக்கத்திற்கு நெருக்கமாக்கி வைத்திருந்தது. இப்போது அந்நிலை இல்லாத சூழலில் தற்காலிகமாகவேனும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் நெருக்கமாகி தனது இலங்கை மீதான அழுத்தத்தை பயன்படுத்த முன்வந்துள்ளது. உலகக் கொலைகார அமெரிக்காவை நம்பும்படி நற்சாட்சிப்பத்திரம் வழங்க களத்திலும் பலத்திலும் மேட்டுக்குடித் தமிழ்ர் ஏற்கனவே சேகரித்துக் கொடுத்த திழ்ர்கள் ஏபாமாவுக்கான தமிழர் என்லெல்லாம் அமெரிக்காவில் மேட்டுக்குடித் தமிழர்கள் இருக்கும் போது கூட்டமைப்பு மிகக் குறியாகவே அங்கு செல்கிறார்.

**1ம் பக்க தொடர்ச்சி**
**காணியை**

திரட்டுவது. அத்தகைய காணிகளைக் கையகப்படுத்தவோ அல்லது வரிகள் விதிக்கவோ அல்லது குறைந்த தொகையுடன் விலைகொடுத்து வாங்கவோ, வேறு மாகாணத்தவர்களுக்குச் சொந்தமாக்கவோ கூடியதொரு புதிய சூழலை ஏற்படுத்துவதாகும். இவ்விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்காணிகளுக்கான புதிய சட்டவிதிகளையும் கொண்டுவரவும் அரசாங்கம் முற்படவே செய்யும்.

மேற்குறித்த இரண்டு செயற்பாடுகளும் மகிந்த சிந்தனையின் பேரினவாத ஆளும் வர்க்கத்தின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளே ஆகும். யுத்தத்தால் அழிந்து போன வடக்குக் கிழக்கில் ஒரு அரசாங்கம் என்ற அடிப்படையில் ஆற்ற வேண்டிய பொறுப்பான பணிகள் பலவுண்டு. ஆனால் அவற்றை முன்னெடுப்பதில் அக்கறையற்று நிற்கும் அரசாங்கம் தனது பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் மட்டும் மும்முரமாகி நிற்கின்றது. இவ்வாறு செயற்படுவதன் மூலம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்ற வரலாற்று தனித்துவத் தொடர்ச்சியை சிதைத்து பல்லின மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசமாக மாற்றியமைப்பதாகும். அரசாங்கத்தின் இவ்விரண்டு விடயங்களும் வடக்கு கிழக்கு மக்களை இனத்துவ அடையாளத்துடனும் தமக்குரிய தனித்துவங்களுடனும் வாழும் உரிமையை சின்னாபின்னப்படுத்துவதேயாகும். இவற்றுக்கு எதிராக பரந்துபட்ட தமிழ் மக்கள் வெகுஜன ரீதியில் அணி திரண்டு தமக்கான வழிகளில் உறுதியான போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**1ம் பக்க தொடர்ச்சி**
**மலையக டெவன் தோட்ட மக்கள்**

க்கு திருப்பிக் கொடு டெவன் தோட்டத்து பொது மக்களுக்கு பாதகம் விளைவிக்காதே தனி நபர் ஒருவருக்கு 50 ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது தோட்டத் தொழிலாளர்களுக்கும் காணி பிரித்துக் கொடு என்னும் சுலோகங்களை ஏந்திய வாறு தொழிலாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்றனர்.

எந்த வித அரசியல் தலையீடும் இல்லாமல் சுயமாக பேராடி வரும் மக்களுக்க மலையகத்தின் பல அமைப்புகளும் ஆதரவுகளை வழங்கிவருவது பாராட்டக் கூடிய விடயமாகும் மலையகத்தின் பிரபல தொழிற்சங்கங்கள் மேற்படி போராட்டத்தில் தலையிடாமல் இருப்பதன் காரணம் குறித்து மக்கள் தங்களின் அதிருப்தியையும் தெரிவித்தனர் மலையக வரலாற்றில் அந்த இடத்தில் மேற்படி போராட்டம் மூன்றாவது போராட்டம் எனவும்1977ல் சிவனுலெச்சுமணன் உயிர் தியாகம் செய்த காணி மீட்பு போராட்டத்தை தொடர்ந்து 2003 ஆம் ஆண்டு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரனி தோழர் இ.தம்பையாவின் தலைமையில் மலையகத்தின் சில முற்போக்கு சிந்தனையாளர்களின் ஒத்துழைப்புடன் மேல் கொத்மலை நீர்த் தேக்கத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் மேற்கொண்ட மாபெரும் கடையடைப்புப் போராட்டமும் மறியல் போராட்டத்தையும் தொடர்ந்து டெவன் தோட்டத்து பொது மக்கள் முன்னெடுக்கும் காணிமீட்பு போராட்டமும் அதே இடத்தில் நடைப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

டெவன் தோட்டத்து பொது மக்கள் முன்னெடுக்கும் காணிமீட்பு போராட்டத்தினை திசைத்திருப்ப சிலர் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும் போராட்டத்தை தங்களின் சுயநலனுக்காய் பயன்படுத்த சிலர் முனைவதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

டெவன் தோட்டத்து பொது மக்கள் முன்னெடுக்கும் காணிமீட்பு போராட்டம் மலையக பிரதேசத்தின் தேயிலைத் தோட்டங்களை சிறு முதலாளிகளுக்க பிரித்து கொடுக்க செய்திருக்கும் திட்டத்திற்கு எதிராய் ஆரம்பித்திருக்கும் முதலாவது போராட்டம் என்பதுடன் தேயிலை தோட்டத்து தொழிற்சாலைகளை உல்லாச விடுதிகளாக மாற்ற முனைந்து வரும் சதிதிட்டங்களுக்கு எதிரான போராட்டமாகவும் காணப்படுகின்றது. போராட்ட கலாசாரமும் பண்பாடும் தொலைந்து போயிருக்கும் இந்தக் காலக் கட்டத்தில் டெவன் தோட்டத்து பொது மக்கள் முன்னெடுக்கும் காணிமீட்பு போராட்டம் வெற்றிப் பெற ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மலையகத்தை உண்மையாக நேசிக்கும் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

## புதிய பூமிக்கு நிதி உதவுங்கள் !

புதிய பூமி தொடர்ந்து வெளிவருவதற்கு தங்களிடமிருந்து நிதி உதவியை எதிர்ப்பார்க்கின்றோம். சந்தாதாரர்கள் அடுத்த வருடத்திற்கான சந்தாவை செலுத்த முன்வாருங்கள். விற்பனை செய்வோர் விற்பனைப் பண வருமதியினை அனுப்பிவையுங்கள். மக்கள் மத்தியிலான புதிய பூமி விநியோகம் - விற்பனையை அதிகரிக்கச் செய்யுங்கள். இலங்கைத் தமிழ்ச் சூழலில் மாற்று அரசியலுக்கான வெகுஜன மாத இதழாக வெளி வரும் புதிய பூமியை மேலும் சிறப்புடன் வெளிவரச் செய்வதில் தங்களின் பன்முக ஒத்துழைப்பைத் தாருங்கள் என வேண்டுகிறோம்.

கொழும்பு.

நிர்வாகக் குழு.

புதிய பூமி
மேல்மாடி இல 06.
571/15 காலி வீதி,
கொழும்பு 06.

நிதி அனுப்ப வேண்டிய விபரம்
K.Senthivel - V.Mahendran,
A/C.No: 1570018335
Commercial Bank,
Grandpass, Colombo -14

# நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

## ஊடக அடாவடித்தனம்

ஊடகச் சுதந்திரம் பற்றிப் பேசுகிறோம். ஒரு பத்திரிகை நிறுவனத்தை இன்னொன்று விலைக்கு வாங்குவது ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் செயலல்ல. அதை விடவும் விற்கப்படுகின்ற நிறுவனத்தின் முதலாளி பத்திரிகையாளர்கள் அனைவரையும் பதவி விலகிப் புதிய நிறுவனத்தின் கீழ்ப் பதிதாக இணையுமாறு வற்புறுத்துவது மிக மோசமான உரிமை மீறலாகும். அதற்கு இணங்காத பத்திரிக்கையாளர்களை வெளியே விட்டுக் கதவடைப்பது அப்பட்டமான ஒரு குற்றச் செயலாகும். இவ்வாறான கொடுமைகளைப் பெரிய மனிதர்கள் குறுக்கிட்டுப் பேசிச் சமாளிக்கலாம் என்கிற முட்டாள்தனமான ஒரு அணுகுமுறை தமிழ் ஊழியர்கள் மத்தியில் இருப்பது கவலைக்குரியது. தமிழ்த் தேசிய வாதம் வர்க்க நோக்கிலான தொழிற் சங்க வேலைகளையும் தொழிலாளர் ஐக்கியத்தையும் புறக்கணித்தன் விளைவாகத், தமிழ் ஊடகவியலளர்கள் தனி மனிதர்களின் கருணையை நம்பித் தம்மைத் தமது வர்க்க உறவுகளிடம் இருந்து பிரித்துக் கொண்டுள்ளதன் காரணமாக அவர்கள் தமது உரிமைகட்காக போராட வலிமையற்றிருப்பதையும் இங்கு கூறியாக வேண்டும்.

## மீண்டும் மின்மினி

பாமரத்தனமான அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று, ஒரு வெற்று வேட்டு ஊடகவிலாளரை மலையக அரசியலில் பிரமுகராக்குவதற்காக. ஒரு பெரிய காட்சி ஊடக நிறுவனத்தால் ஊதிப் பெருப்பிக்கப்பட்டு அமோகமாக விளம்பரப்படுத்தப்பட்டு நடந்து வந்தது. பிரமுகரைப் பாராளுமன்ற உறுப்பினராக்கிய பின்பு அந்த நிகழ்ச்சியை நடத்தத் தேவையில்லாததால் அந்த மின்மினி நிகழ்ச்சி மினுங்குவதை நிறுத்திக் கொண்டது. இப்போது, பிரமுகர் மலையகத்தில் இருந்து வடக்கே புலம்பெயரும் திட்டம் படுதோல்வி அடைந்த நிலையில், அந்த ஊடக நிறுவனம் பழையபடி தனது அரசியல் முகவரை மலையகத்தில் நிலைநிறுத்த வேண்டி, மக்களின் "ஏகோபித்த" வேண்டுகோளுக்கு இணங்க அந்த புளிச்சல் நிகழ்ச்சியைத் திரும்பவும் தொடங்கியுள்ளது. "ஏகோபித்த அபிப்பிராயங்களை" எப்படி உருவாக்குவது என்று அந்த அராஜகவாத ஊடகம் நன்கறியும். தமிழ் மக்கள் முன்னே எத்தகைய ஊடகத் தெரிவுகள் உள்ளன என்று நினைக்கும் போது "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்...." என்ற வரிகள் தான் மனதுக்கு வருகின்றன.

## அடி சறுக்கும் தலைமைக்குப் பிடி கொடுக்கும் இனவாதம்

சண்முகதாசன் ஒரு தமிழர் என்பதைப் பயன்படுத்தித் திரிபுவாதிகளான கெனமனும் மென்டிஸும் 1964ல் கம்யூனிஸ்ட் கட்சியின் உடைவின் போது இனவாத அரசியலில் இறங்கித் தம்மைப் பலப்படுத்த முயன்றனர். அனால் அது பலிக்கவில்லை.

இப்போது ஜே.வி.பி. பாராளுமன்றச் சந்தர்ப்பவாத்தில் பூரணமாக மூழ்கி அழிவை எதிர் நோக்குகின்ற நிலையில் ஜே.வி.பியை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ள கிளரச்சிக் குழுவுக்கு ஜே.வி.பியின் கீழ் மட்ட, வெகுசன அமைப்புகளின் ஆதரவு பெருகி வருகிறது. அதை அடக்க, அக் குழுவின் தலைவர் குனரத்தினம் எனும் தமிழர் என்கிற விதமான பிரசாரம் ஜே.வி.பியின் தலைமையாலும் பெரிய ஊடக நிறுவனங்களினாலும் முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ்த் தகப்பனுக்கும் சிங்களத் தாய்க்கும் பிறந்த குணரத்தினம் தமிழில் அல்லாது சிங்களத்திலேயே செயற்படுகிறவர் என்பது அவர்களுக்கு முக்கியமில்லை. அவரின் தமிழ்ப் பெயர்மட்டும் போதுமானது.

முதலாளியமும் பிற பிற்போக்குவாதிகளும் சீரழிந்த ஜே.வி.பியைக் கண்டு இப்போது அதிகம் அஞ்சுவதில்லை. ஆனால் ஜே.வி.பிக்குள்ளிருந்து ஒரு நல்ல சக்தி உருவாகும் வாய்ப்பைப் பற்றி அவர்கள் மிகவும் அஞ்சுகிறார்கள்.

ஜே.வி.பியின் கசடுகளைக் களைந்த ஒரு புதிய அமைப்பு உருவாகுமா என்பது நிச்சயமில்லை என்றாலும் அதற்கான வாய்ப்பை நாம் வரவேற்கும் வேளை ஜே.வி.பி. தலைமையின் உட்கட்சி ஜனநாயக மறுப்புப் பற்றி நமது பெரிய ஊடகங்கள் ஏன் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை என்று நமக்கு விளங்க வேண்டும்.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நழுவலின் கட்டுடைப்பு

கொழும்பு மாவட்டத் தமிழர் மனோ கணேசனின் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் சிவாஜிலிங்கம் சொல்லி இருந்தார். தாங்கள் ஆதரிக்கவில்லை என்று இரா. சம்பந்தன் சில நாட்களின் பின்பு அறிவித்தார். பின்பு அந்த அறிவித்தலின் கருத்து மனோ கணேசனின் கட்சியை ஆதரியுங்கள் என்பதுதான் என்று மனோ கணேசனின் அடியாள் ஒருவர் திருவாய் மலர்ந்தார் அவரது பின்னவீனத்துவ கட்டுடைப்பை மெச்சுவதா ஒரு முடிவும் எடுக்காமல் தவிர்க்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைமையின் நழுவும் திறனை மெச்சுவதா என்று எனக்குத் தெரியவில்லை!

தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி (அதாவது தமிழ்க் காங்கிரஸ்) மனோ கணேசனை ஆதரிப்பதில் த.தே.கூ.வை முந்திக்கொண்டது, த.தே.கூ.வின் தடுமாற்றத்தை மேலும் மோசமாக்கிவிட்டது. எனினும் த.தே.கூ. எதையுமே திட்டவட்டமாகச் சொல்லாத நிலையில், அது ஆதரவு தான் என்ற விதமாக மனோ கணேசனை ஆதரிக்கும் சில த.தே.கூ. பிரமுகர்களால் சொல்லப்பட்டது.

மனோ கணேசனின் அணிக்குக் ஆறு ஆசனங்கள் கிட்டியுள்ள நிலையில், அவர் மறுபடியும் யூ.என்.பியுடன் குலாவும் வாய்ப்புத் தெரிகிறது. இனி நடப்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமே.

படிப்பகம்

www.padippakam.com



# சம்பூர் மக்களின் பாரம்பரிய நிலங்கள் இலங்கை - இந்திய கூட்டுச் சதியால் பறிப்பு.

திருகோணமலை மாவட்டத்தில் கடலோரம் அமைந்த வளங்கள் நிறைந்த பிரதேசமே சம்பூராகும். தமிழ் மக்களின் பாரம்பரிய இப்பிரதேசத்தில் இந்திய முதலீட்டில் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்க இலங்கை இந்திய அரசுகள் இணங்கிக்கொண்டன. சுற்றுச் சூழலுக்குப் பாதகமாக அமையக்கூடிய இவ்வனல்மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க ஐநூறு ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதற்கு அப்பாலும் அரசாங்கம் தற்போது மொத்தம் எட்டாயிரம் ஏக்கர்களைத் தன் வசப்படுத்தியுள்ளது. யுத்தம் முடிந்த பின்பும் சம்பூர் மக்கள் தமது பாரம்பரிய சொந்த வாழிடங்களுக்கு திரும்பிச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. அப்பிரதேசம் உயர் பாதுகாப்புப் பிரதேசம் ஆக்கப்பட்டு எவரும் அங்கு காலடி எடுத்து வைக்கவிடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கு உரிய ஐநூறு ஏக்கர்களுக்கு அப்பால் எண்ணாயிரம் ஏக்கர்களை அரசாங்கம் கைப்பற்றியிருப்பதன் உள்நோக்கம்தான் என்ன? விரட்டப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் சம்பூர் மக்களுக்கு வெவ்வேறு வளமற்ற பிரதேசங்களில் குடும்பத்திற்கு இருபது பேர்ச் நிலம் வழங்க அரசாங்கம் முடிவு செய்தது. 1400 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் இதனை ஏற்க மறுத்து வருகிறார்கள். அவர்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் சென்று விவசாயம் மற்றும் மீன்பிடி தொழில்களில் ஈடுபடவே விரும்புகிறார்கள்.

ஆனால் பேரினவாத குடியேற்றங்களுக்கான உள்நோக்கத்திட்டங்களை மகிந்த சிந்தனை அரசாங்கம் கொண்டிருப்பதன் காரணமாகவே சம்பூரின் தமிழ் மக்கள் தடுக்கப்படுகின்றனர். இதுபற்றி தமிழ் தலைமைகள் தமது எசமானர்களான இந்திய உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டுக் களைத்து விட்டனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர வைப்பதில் அரசாங்கம் திட்மிட்ட வகையிலேயே செயலாற்றி வருகிறது. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங் களை அபகரிப்பது, இனச்செறிவினை சிதைப்பது திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவது போன்ற காரிய ங்க ளையே மகிந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. "ஒரே தேசம் ஒரே மக்கள்" என்பதன் உள் நோக்கமே இவைதான். இதன் பிரதான பகுதியே சம்பூரின் நில அபகரிப்பில் நிறை வேற்றப்படுகிறது. எனவே சம்பூரில் இருந்து விரட்டப்பட்டு முகா ம்களில் துயர்வாழ்வு அனுபவித்துவரும் தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் செல்ல அனும திக்கப்படவேண்டும் எனும் மக்கள் கோரிக்கையுடன் புதிய பூமி இணைந்து நிற்கின்றது. இவ்விடயத்தில் இலங்கை இந் தியக் கூட்டுச்சதியை முறியடிக்க நீதி, நியாயம் வேண்டி நிற்கும் அனைத்து மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

# தினக்குரல் ஊடகவியலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தினக்குரல் நாழிதழின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த 22 ஊடகவியலாளர்கள் ஒரே நாளில் வீதிக்கு விரட்டப்பட்ட சம்பவம் கடந்த மாத நடுப்பகுதியில் நடந்தேறியது. முதலாளிகளது புதிய நிர்வாகம் மேற்படி 22 ஊடகவியலாளர்களைப் பதவி விலகிப் புதிய நியமனங்களை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியது. புழைய நியமனத்தைத் தொடர்வதால் தமக்கு ஏற்படும் நஸ்ட்டத்தை உள்நோக்காகக் கொண்டே தினக்குரலின் புதிய நிர்வாகமான முதலாளிகள் ஊடகவியலாளர்களை பதவி விலகிப் புதிய நியமனத்துக்கு வரும்படி வற்புறுத்தினர். இதனை அவ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததாலேயே அவர்களை வீதிக்கு விரட்டினர். கடந்த பதினைந்து ஆண்டுகளாக தினக்குரல் நாழிதளை வளர்த்தெடுக்க இவ் ஊடகவியலாளர்கள் இராப்பகலாகத் தமது உழைப்பை வழங்கிவந்தவர்கள். குறைந்த சம்பளம், ஏனைய தொழில் உரிமை மறுப்புகள் மத்தியில் மட்டுமன்றி பல அச்சுறுத்தல்களின் மத்தியிலும் பணிபுரிந்து வந்தவர்கள். அத்தகையவர்களுக்குத்தான் மேற்படி நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு 22 ஊடகவியலாளர்கள் வெளியே அனுப்பப்பட்டு நிர்க்கதியாக நின்றபோ-து அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றித் தட்டிக் கேட்கத் தமிழ்த் தேசியம் பேசுவோரோ அல்லதுஅதன் பெயரில் இன, மத, மொழி மேன்மை போற்றி நிற்கும் கனவான்களோ எவரும் முன்வரவில்லை. தலைநகரிலே தமிழின் பெயரால், இந்து மதத்தின் பெயரால், சட்டத்தின் பெயரால், உயர் பதவிகளால் எல்லாம் தமிழ் சமூகத்துக்கு கொம்பு பிடித்து முன்வரிசை வகிப்பவர்கள் இத்தமிழ் முதலாளிய நிறுவனத்திடம், வீதிக்கு விரட்டப்பட்ட 22 ஊடகவியலாளர்களுக்காக நீதி வேண்டி வாதாட முன்வரவில்லை. ஏன்? என்று விசாரித்தால்தான் உண்மை வெளிச்சதுக்கு வரும். வர்க்கம் இல்லை, சுரண்டல் இல்லை, சாதி இல்லை, ஏற்றத்தாள்வு இல்லை, நம்மிடையே இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுவே புனிதமான தமிழ்த் தேசியம் என இடையறாது ஓதி வருபவர்கள் இவ் ஊடகவியலாளர்களுக்கு இளைக்கப்பட்ட அநீதி பற்றி வாய்களைத் திறக்கவே இல்லை. ஏன் அவ்வாறு நடந்துகொண்டார்கள், அங்கேதான் தமிழ்த்தேசியத்தின் மறைவிலான வர்க்கசுரண்டல் இறுகி நிற்கின்றது. பதினைந்து ஆண்டுகளாகத் தினக்குரலில் இராப்பகல் உழைத்து அதன் மூலதனத்திற்கு லாபம் சேர்த்துக் கொடுத்த ஊடகவியலாளர்கள் 22 பேரில் ஒருவர்தானும் சிங்களவர் இல்லை. அப்படியானால், இன மொழி மானமும் மேன்மையும் எங்கே போனது? உணரக்கூடியவர்கள் உண்மையினைக் கண்டுகொள்வார்கள்.

அவ் 22 ஊடகவியலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டு மூன்று வாரங்களாகியும் ஓரிரு நல்லெண்ணம் கொண்டவர்களைத் தவிர, சமூகப் பெரும் புள்ளிகள் எனப்பட்ட எந்தக் கனவானும் அவர்களைத் திரும்பியே பார்க்கவில்லை. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்பக்கமே தலை நீட்டவில்லை. தொழில் ஆணையாளர் தலையிட்டும் புதிய நிர்வாக முதலாளிகள் செவி சாய்க்கவில்லை. இவ் ஊடகவியலாளர்களுக்காக ஊடக அமைப்புக்கள்கூட செயலில் இறங்கவில்லை. எதுவும் செய்ய இயலாத சூழலில், புதிய நிர்வாக முதலாளிகள் வற்புறுத்தியபடி, பழைய பதவிகளில் இருந்து விலகி, புதிய நியமனங்களை ஏற்று மீண்டும் தினக்குரலில் வேலைசெய்ய ஊடகவியலாளர்கள் சேர்ந்துள்ளனர். எங்கும் வியாபித்து நிற்பது போன்று தமிழர்கள் மத்தியிலும் சுரண்டும் முதலாழிகளும் சுரண்டப்படும் தொழிலாளிகளும் இருக்கின்றனர். அதற்கான ஒரு அண்மைய உதாரணம்தான் தினக்குரலில் நடந்ததாகும்.

1ம் பக்கத் தொடர்ச்சி

**மகிந்த சிந்தனையால்**

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சர்வதேச அரங்கில் மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு கடுமையான கரும் புள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டன. அதனைத் துடைத்தெறிவதற்கு ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை கடும் முயற்சி எடுக்கவேண்டி ஏற்பட்டது. இன்றும் அவை தொடர்கின்றன. அதேவேளை தனது போர்க்கால கூட்டாளியான இந்தியாவின் சில முனை அழுத்தம் காரணமாக ஒருசில கண்துடைப்பு நடவடிக்கைகளை மஹிந்த சிந்தனை அரசாங்கம் எடுக்கவேண்டி ஏற்பட்டது. அதன் வழியிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சந்திப்புகள் பேச்சுவார்த்தைகள் என்ற காட்சிகள் காட்டப்பட்டும் வந்துள்ளன. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை என்ற படலம் இது வரை பதினொரு தடவைகளின் இடம்பெற்ற போதும் ஒரு சிறு புள்ளி நகர்வு கூட ஏற்படவில்லை. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் அரசியல் தீர்வு காணும்படியும் அதற்காக தமிழ்த் தலைமைகளுடன் பேசும்படியும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் கூறியே வருகிறார்கள். ஆனால் இந்தியா தனது அதிகாரத்தின் கடும் அழுத்தத்தை இலங்கை மீது கொடுப்பதாக இல்லை. அதற்கு காரணம் இந்தியாவின் பொருளாதார, அரசியல், இராணுவ நலன்கள் பிராந்திய ரீதியில் இலங்கை மீது படிந்திருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று முற்றுமுழுதாக இந்தியாவையே நம்பியுள்ளனர். அதேவேளை புலம்பெயர் தமிழ் மேட்டுக்குடியினர் மூலமான அமெரிக்க மேற்குலக அழுத்தங்களையும் உள்ளூர ஊக்கப்படுத்தியும் வருகின்றனர். அதன் காரணமாகவே அமெரிக்கா தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளது. இவற்றுக்கு அப்பால் வேறு எதையும் செய்ய முடியாத கையறு நிலையிலேயே தமிழ்த் தலைமைகள் எனப்படுபவைகள் இருந்து வருகின்றன.

மஹிந்த சிந்தனையானது இந்திய அமெரிக்க மேற்குலக அழுத்தங்களைப் புறந்தள்ளி அரசியல் தீர்வு என்பதை மறுத்து நிற்பதற்கு சீனா, ரஷ்சிய, ஈரான் மற்றும் சில நாடுகளைத் தனது காய்நகர்த்தல்களுக்கு கையில் எடுத்து நிற்கின்றது. அந்த நாடுகள் போர்க் குற்றச்சாட்டுகளையும் மனித உரிமை மீறல்களையும் தமது கவனத்திற்கு எடுக்கவில்லை. எனெனில் அந்நாடுகளுக்கு குறிப்பாக சீனாவின் வர்த்தக நலன்களுக்கும் கம்ப னிகள் மூலமான முதலீடுகளுக்கும் -இலங்கையில் மஹி ந்த சிந்தனையும் அதன் தலைமையிலான அரசாங்கமும் நம்பத்தகுந்த நண்பர்களாக விளங்குகின்றனர். அதனாலேயே ஜனாதிபதியும் அரசாங்கமும் அரசியல் தீர்வை மறுத்து நிற்பதற்கான வலுவுள்ள தளமாகவும் மேற்படி நாடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அதேவேளை யுத்த வெற்றியை மஹிந்த சிந்தனையானது சிங்கள மக்கள் மத்தியில் தொடர் பரப்புரைகளுக்கும் வெற்றிப் பெருமிதங்களுக்கும் உள்ளாக்கி பேரினவாதத்தை கெட்டிப்படுத்தியும் வருகிறது. ஏற்கனவே நிறுவன மயப்படுத்தப்பட்டு வந்த பௌத்த சிங்கள பேரினவாதத்தை சிங்கள மக்களிடையே வெகுசன அரசியல் தளத்திற்கு எடுத்துச் சென்றதில் மஹிந்த சிந்தனை தற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. அதனாலேயே ஜனாதிபதியானவர் தன்னை துட்டகைமுனு என நிலை நாட்டிக் காண்பிக்கவும் துட்டகைமுனுவின் அஸ்தி என்பதனை அருங்காட்சியத்தில் வைத்து வணங்கிப் பிரசாரப்படுத்தவும் முடிந்தது.

,இத்தகைய அடிப்படையிலான மகிந்த சிந்தனையானது நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என நம்புவது முட்டாள்தனமானதாகும். இத்தகைய அரசியல் தீர்வின் மறுப்பை அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று நிற்கும் தமிழ், முஸ்லீம், மலையகத் தலைமைகளின் ஆதரவோடும் தான் மகிந்த சிந்தனையானது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தென்பது முரண்நகைப்பிற்குரியதாகும். இவற்றின் உண்மை யாதெனில் இன உணர்வு இன உரிமை என்ப னவற்றுக்கு அப்பால் வர்க்க நலன்களும் அவற்றின் இருப்பும் தொடர்ச்சியுமே முதன்மையானது என்பதை எடுத்துக்காட்டும் விதமாகவே உள்ளது.

எனவே அரசியல் தீர்வைப் பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து மறுத்து வரும் மஹிந்த சிந்தனையை உடைப்பதற்குரிய ஒரே வழி உழைக்கும் சிங்கள வெகுஜனங்களிடையே அரசியல் தீர்வின் நியாயங்களை எடுத்துச் செல்வதேயாகும். இந்தியாவிடமோ, அமெரிக்காவிடமோ, மேற்குலகிடமோ எடுத்துச் செல்வதில் பயன் ஏதும் இடம்பெறமாட்டது. இதுவரை கிடைத்தபட்டறிவு போதுமானதாகும். எனவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நியாயபூர்வமான உரிமைகள் பற்றிய விடயங்களை உழைக்கும் சிங்கள மக்கள் மத்திக்கு எடுத்துச் செல்வது அவசியமான வழிமுறை மட்டுமன்றி இதுவரை முன்னெடுக்கப்படாத ஒன்றுமாகும். தூரநோக்கற்ற தமிழ் தலைமைகளின் குறுகிய தேசியவாத அரசியலாலும் அதன் விளைவான தோல்விகள் அழிவுகளின் விரக்தியாலும் மௌனமாகி ஒதுங்கியிருந்து வரும் தமிழ் மக்கள் உழைக்கும் மக்களுக்குரிய வெகுஜனப் போராட்ட அரசியலைத் தமது தெரிவாகக் கொள்ள வேண்டும். அத்தகைய தெரிவானது சிங்கள உழைக்கும் வெகுஜனங்களுடனான அரசியல் உறவாக வளர்க்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். இப்பரந்த வெகுசன அரசியல் மார்க்கத்தில் முஸ்லீம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் இணை க்கப்படல் வேண்டும். இது இலகுவில் உள்வாங்கிக் கொள்ள இயலாத ஒன்றாக ஆரம்பத்தில் காணப்படினும் பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து நியாயமான அரசி யல் தீர்வைப் பெற்றெடுப்பதற்கு வேறு மார்க்கம் இருக்க முடியாது என்பது எமது உறுதியான நிலைப்பாடாகும்.

# கயிறுகள் அறுக்கப்படும்

**-காவத்தையூர் மகேந்திரன்-**

அம்மா!
நீள் மலை எங்கிலும்
நீ நிரப்பிய குருதியும்
இறைத்த வியர்வையும்
நானாக...

உனது பாத வெடிப்புகளும்
கருப்பேறிக் களைத்த தேகமும்
அழகிழந்த உன் பாச முகமும்
சொட்டுச் சொட்டாய் உறியப்பட்ட
உழைப்பின் வடுக்கள்

வெய்யில் நெருப்பிற் புகுந்து
சீறியடிக்கும் மழையிடை மலை கடந்தாய்
வாட்டும் நோயிலும் உழைப்பையே மருந்தாக்கி
வசந்தம் விதைக்கத் துடித்தாயே!

உன் யுகத்துயர் கலைய
எனைச் செதுக்கினாயே
ஞாபகம் இருக்கிறதம்மா
இப்போது வளர்ந்து விட்டேன்
இனி...

வதைபடும் உழைப்பாளர்கட்காய்
என் பாதங்கள் இயக்கமுறும்
அடுத்த தலைமுறைத் தாய்மையின்
அடிமைக் கயிறுகள் அறுக்கப்படும்

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத்தின் சமூக கட்டமைப்பும் ஏற்பட வேண்டிய மாற்றங்களும்

தேசிய அரசியலில் நீரோட்ட மலையக மக்கள் பிரிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தேசிய அரசியலில் நீரோட்ட சேர்க்கப்பட வேண்டும் என்றவாறான கோரிக்கை மலையகத்தில் பலராலும் பல காலம் ஓங்கி ஒலிக்கப்பட்ட ஒன்றாகும். எனினும் அது 2001 ஆண்டில் சட்டரீதியாக மலையக மக்களின் பிரஜா உரிமை விவகாரம் தீர்க்கப்பட்ட பின்னர் ஓய்ந்திருப்பதனைக் காணலாம். அந்த கோரிக்கைகளின் ஓய்வு மலையக மக்கள் பிரஜா உரிமை பிரச்சினைக்கான தீர்வுடன் அவர்களின் தேசிய அரசியலுக்கு நீரோட்ட இருந்த தடைகள் எல்லாம் கலைந்துவிட்டது என்ற அடிப்படையிலானதாக அமைந்திக்குமாயின், அது அனைத்து மலையக மக்களினதும் பிரஜா உரிமை சமன் தேசிய அரசியல் நீரோட்ட என்றாகிவிடும். தேசிய அரசியலில் நீரோட்ட மலையக மக்கள் இணைவதில் அனைத்து மலையக மக்களுக்குமான பிரஜாவுரிமை மறுப்பு முக்கிய தடையாக இருந்தமை உண்மையே. ஆனாலும் மலையக மக்கள் தேசிய அரசியலுக்கு நீரோட்ட தடையாக அதனை விட வேறு வலுவான காரணிகள் இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

மலையக மக்கள் இன்றும் நாட்டின் பொதுச் சட்டங்கள், அரசாங்க பொது நடைமுறைகளுக்கு அமைவாக நடாத்தப்படுவதில்லை. பெருந்தோட்டங்கள் ஒரு தனி இராச்சியமாக பிரித்தானியர் ஆட்சிகாலத்தில் இருந்தது நாம் அறிந்ததே. இன்றும் பெருந்தோட்டங்கள் அதே பழைய கட்டமைப்புகளின் தொடர்ச்சியையும், பழைய கட்டமைப்பை நீடிப்பதற்கு ஏற்ற சில புதிய கட்டமைப்புகளையும் கொண்டு அமைந்துள்ளன. இன்று சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தாலும் பெருந தோட்டங்கள் ஒரு குட்டி ராச்சியமாகவே இருந்துவருகிறது. அதாவது தோட்ட நிர்வாகங்கள் மலையக மக்களின் அன்றாட வாழ்க்கை செயற்பாடுகளில் அவசியமற்ற தலையீடுகளை செலுத்தி வருகின்றன. அதாவது தோட்ட முகாமைகள் ஒரு தொழில் வழங்குனர் என்றவகையில் தொழிலாளருடன் கொண்டிருக்க வேண்டிய உறவைக் கடந்து அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயங்களில் தலையிடும் தலையாய அமைப்பாக இன்றும் காணப்படுகிறது. வேறு வகையில் சொல்வதானால் மலையக மக்கள் அரசாங்க நிர்வாகத்துடன் நேரடியாக தொடர்புபடுவதைத் தடுக்கும் செயற்பாட்டை தோட்ட நிர்வாக கட்டமைப்பு கொண்டுள்ளது. இது ஒரு தேசிய இனம் என்ற வகையில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினையாகும். சுதந்திரத்திற்கு பின்வந்த எல்லா அரசாங்கங்களிதும் இனவாத நோக்கும், வர்க்க நிலைப்பாடும் இன்று வரை மலையக மக்கள் அரசாங்க நிர்வாகத்துடன் இணை வதைத் தடுத்து மலையக மக்களின் உழைப்பை மிகை சுரண்டலுக்கு உட்படுத்தி வருகின்றன.

நாட்டின் கீழ்மட்ட அரசாங்க கட்டமைப்புகளான பிரதேச சபை, மாகாண சபை போன்றவைகளின் அதிகார எல்லைக்குள் உட்படாதவர்களாகவே மலையக மக்கள் இருக்கின்றனர். அதே போல் மரபு ரீதியாக அரச நிர்வாக கட்டமைப்புகளில் கிராம உத்தியோகத்தர் முதற் கொண்டு பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் வரை மலையக மக்கள் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த புறக்கணிப்பு வரலாற்றுக் காரணிகளுடன் உறவுக் கொண்டது. பிரித்தானியர் பெருந்தோட்டங்களை விசேட சட்டங்களுக்குக் கீழ் தனித்து ஆட்சி செய்து வந்தனர். அது இன்றுவரை அடிப்படை மாற்றங்கள் எதுவுமின்றி நீடிப்பதில் இருந்து மலையக மக்களைப் பொறுத்தவரை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கும் உள்ளூர் ஆட்சியார்களுக்குமிடையிலான அரசியல் அடிப்படைகளின் 'வேறுபாட்டை' அறிந்துக் கொள்ளமுடியும்.

மேற்கூறிய அரசியல் நிர்வாக ரீதியான புறக்கணிப்பானது மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார விடயங்களில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. தோட்டங்கள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், JEDP மற்றும் SLSPC போன்ற அரச முதலீடுகளுடன் இயங்கும் சபைகளின் நடைமுறையும் இதே விதமாகவே உள்ளது, மலையக மக்களில் ஏகப்பெரும்பான்மையினர் வாழும் தோட்டங்கள் குறித்த கம்பனிகளின் தனியுரிமையைக் கொண்டுள்ளன. எனவே கம்பனிகளின் அனுமதியின்றி அரசாங்கம் எந்த அபிவிருத்தி திட்டத்தையும் கம்பனியின் உரிமைக்குட்பட்ட காணியில் மேற்கொள்ள முடியாது.

**விஜயகுமார்**

அதற்கு கம்பனியின் அனுமதி கட்டாயமானதாகும். இந்தக் கட்டமைப்புச் சார் பிரச்சினையானது சுதந்திரத்திற்கு பின்பிருந்து இன்றுவரையும் ஆட்சிபீடம் ஏறிய முதலாளித்துவ பேரினவாத அரசாங்கங்கள் மலையக மக்களின் அபிவிருத்தியில் தம்மை அப்புறப்படுத்திக் கொள்ள வாய்ப்பாக போனது. அவர்கள் இந்த கட்டமைப்பை மாற்ற எந்தவித்திலும் கரிசனை கொள்ளவில்லை. இதனிடையே மலையக மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் இந்த பாரபட்ச கட்டமைப்பு தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாடு விசேட கவனத்தைப் பெறுகிறது.

மலையக மக்களின் தலைவர்கள் எனப்பட்டோர் இந்த வரலாற்று ரீதியான கட்டமைப்புத் திணிப்பை பேரினவாதிகள் போலவே நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து வந்துள்ளனர். மலையக மக்களின் பிரதான பிரச்சினையாக இருக்கின்ற இதனை எத்தருணத்திலும் அவர்கள் பேசியது கிடையாது. அவர்களின் "மக்கள் சார்பை" வைத்துக் கொண்டு நோக்குகையில் அதனை அவர்களிடம் இருந்து நாம் எதிர்பார்ப்பது சற்று அதிகம்தான். மலையக மக்களை தோட்ட நிர்வாகத்துக்குள் சிறைப்படுத்தி அதனூடாக தமது தொழிற்சங்க ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ளவும் அதனை அடியொற்றி தமது அரசியல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தவும் மலையகத்தில் இவ்வித கட்டமைப்பு அவர்களுக்கு உதவியதோடு அது தொடர்ந்தும் நிலவுவது அவர்களுக்குத் தேவையாகவும் உள்ளது. எனவே இந்த பாரபட்சமான வன்முறைக் கட்டமைப்பை நிலை நிறுத்துவதில் பேரினவாத சக்திகளுக்கு சமாந்திரமாக மலையகத்தில் இருக்கின்ற பிற்போக்கு அரசியல் சக்திகள் கடுமையாக உழைத்து வருகின்றன.

அந்த கடுமையான உழைப்பின் பயனாகவே தோட்ட மக்களை மீண்டும் தோட்ட நிர்வாகத்திற்குள் அமிழ்த்துகின்ற கருவியாகச் செயற்பட்டு வருகின்ற பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை (PHDT) ட்ரஸ்ட் என்று பொதுவாக அறியப்படும் அமைப்பு உருவாக்கப்பட்டு நிலைபெற்று வருகிறது. அரசாங்கம் மலையக மக்களுக்கு நேரடியாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடையாக இருப்பதனால் அதனைத் தீர்க்க அரசின் நிதி மற்றும் அனுசரனைகளுடனும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவியோடும், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் மலையகத்தின் பெருந் தொழிற்சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் இது இயங்கி வருகிறது. மலையகத்தின் அபிவிருத்தி முகவராக 1992ல் இருந்து செயற்பட்டு வரும் இந்த உப கட்டமைப்பானது மலையக மக்களை தேசிய நீரோட்ட அரசியல் இருந்து தொடர்ந்து விலக்கிவைப்பதில் வெற்றிக் கண்டுள்ளது. குறிப்பாக மலையக மக்களின் மூலப் பிரச்சினைகளை காணுவதில் இருந்தும் அப்பிரச்சினைகளைச் சுற்றி மக்கள் அணிதிரளுவதையும், ட்ரஸ்ட் அமைப்பின் வெற்று நலன்புரிச் செயற்பாடுகள் தற்காலிகமாகத் தடுத்து வருகிறன்றன.

மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீரப்பதில் அரசே தொடர்ந்தும் தடுமாறிக் கொண்டு வரும் நிலையில் மலையக மக்களின் முன்னேற்றத்தை ஆதிக்க நோக்கத்தை முன்னிறுத்திய இவ்வகை நிறுவனங்களினால் சாத்தியப்படுத்த முடியாது என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. மலையக மக்களின் வரலாற்றுக் கொடுமைகளின் ஒன்றாக காணப்படும் இந்த கட்டமைப்புத் திணிப்பு நீக்கப்பட வேண்டுமாயின் மலையக மக்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர் - தொழில் வழங்குநர் என்ற உறவுக்கு அப்பால் இருக்கின்ற மரபு ரீதியான உறவுகள் துண்டிக்கப்பட்டு, மலையக மக்கள் வாழும் தோட்டப் பிரதேசங்கள் கிராமங்களாக்கப்பட வேண்டும். இவ்வாறு கிராமங்கள் உருவாக்கும் போது அவர்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகள் உறுதிசெய்யப்படுவதன் மூலமே ஏனைய தேசிய இனங்களைப் போலவே மலையக மக்கள் என்ற தேசிய இனமும் சம அந்தஸ்த்துடன் வாழ முடியும்.

# புரட்சி என்பது சாத்தியம் தானா?

ஏறுகின்ற ஒவ்வொரு
மலைப்பாதைகளிலும்
கடிக்கின்ற அட்டைகளை
பிடுங்கி எறிவது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

தலைச்சாரத்தை மீறி
அழுத்தும்
கொழுந்துப் பையை
தூக்கிச் சுமப்பது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

பேரினவாதத் துவக்குகளின்
முன்னே தலைநிமிர்வது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

இராணுவ டாங்கிகளுக்கு
எதிரான கல்லெறிதல்கள்
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

கொடுமைக்கு எதிரான
காறி உமிழ்தல்
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

அடக்குமுறையின் எல்லா
முனைப்புகளையும் முறியடிக்க
முஷ்டிகள் உயர்வது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

எப்போது
தடுக்கி விழுந்தாலும்
எழுந்து நிற்பது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

கிருஷ்ணா
2011.10.02

# "சட்டம் அனைவருக்கும் சமம்"

"சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தினால் பாதுகாக்கப்படுவற்கும் உரித்துடையவர்கள்."

இவ்வாறாக இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசு அரசியலைமப்பில் 12ம் சரத்தின் 1ம் உறுப்புரை கூறுகிறது.

- ❖ கடந்த 03.09.2011 அன்று உயர்தரப் பரீட்சைகளின் இறுதிப் பரீட்சை நடைபெற்றது. அன்றைய தினம் ஹட்டன் நகரில் நின்றிருந்தேன். பாடசாலை வாழ்க்கை அன்றோடு முடிகின்ற சந்தோசத்தில் மாணவர்கள் ஒருவர் மீது ஒருவர் மை பூசி விளையாடிக் கொண்டிருந்தனர். சட்டத்தின் நீதியின் மக்களின் காவலர்களும் நண்பர்களுமான போலிசார் அந்த மாணவர்களை அமைதிக்கு பங்கம் விளைவித்ததற்காக கைது செய்தனர்.
- ❖ அடுத்த சில தினங்களுக்குப் பிறகு பொது இடத்தில் புகைப்பிடித்தமைக்காக ஒரு மனிதர் கைது செய்யப்பட்டார்.
- ❖ வெள்ளவத்தை காலி வீதியில் வீதி ஒழுங்கை மீறியதற்காக நான்கு இளைஞர்கள் 2500 ரூபா தண்டப்பணம் செலுத்தினார்கள்.
- ❖ எமது நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பௌத்த சாசனத்தை பாதுகாப்பதன் பொருட்டு போதைக்கு முற்றுப் புள்ளி வைக்க எத்தனித்துள்ளார். மிருகவதைக்கெதிரான பிரச்சாரங்கள் செய்யப்படுகிறது. பௌர்ணமி தினங்களில் மாடுகள் அறுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.
- ❖ இந்த முப்பது வருட கால இன முரண்பாட்டு யுத்தத்தில் இலட்சக்கணக்கான சாதாரண தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர்.
- ❖ இக்காலப்பகுதியில் வாழ்க்கைத் துணைகளை, தாய் தந்தையரை, பிள்ளைகளை, சகோதரரை, உடைமைகளை இழந்தவர்கள் பல இலட்சம் பேர்.
- ❖ இக் கொடூர யுத்தத்தின் காரணமாக ஜனநாயக முற்போக்கு சக்திகள், புத்தி ஜீவிகள், அரசியல் தொழிற்சங்கவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலர் உயிரிழந்துள்ளனர். பலர் ஒடுக்குமுறைக்கும் உயிர் அச்சுறுத்தலுக்கும் சித்திரவதைகளுக்கும் கைதுகளுக்கும் ஆளாகியுள்ளனர்.
- ❖ எத்தனையோ பேர் கடத்தப்பட்டனர். காணாமற் போயினர். வல்லுறவு புரியப்பட்டனர்.
- ❖ பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இன்றும் எவ்வித தீர்வுகளும் இன்றி அரசியல் கைதிகளாக இலங்கைச் சிறைகளில் 'வாடுகின்றனர். மீள் குடியமர்த்தப்படாத மக்கள் இன்றும் முகாம்களில் வாடுகின்றனர்.
- ❖ முப்பது வருட காலத்தில் மக்கள் தமது வாழ்வை அச்சத்தின் மத்தியிலும் சந்தேகத்தின் மத்தியிலுமே கழித்தனர். லட்சக்கணக்கில் மக்கள் புலம் பெயர்ந்தனர்.
- ❖ இதற்கெல்லாம் மேலாக இனங்களிடையேயான நல்லுறவு இல்லாமற் போய் ஒரு இனம் இன்னொரு இனத்தை சந்தேத்தோடு பார்ப்பதும் பண்பாட்டு தொடர்பற்ற இனக் குழுக்களாக சிதறி வாழ்கின்ற சமூக அவலத்தை ஏற்படுத்தியும் உள்ளது.

  - ➢ இக் குற்றங்களைப் புரிந்தவர் யார்?
  - ➢ அவர்களுக்கு துணை புரிந்தவர் யார்?
  - ➢ குற்றவாளிகளை தண்டிப்பது யார்?
  - ➢ பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பது யார்?

இப்படி பல கேள்விகள் எம்முன் எழலாம் எனினும் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது ஒன்றுதான். சட்டம் சட்டத்தை நிர்வகிக்கும் நிறுவனங்கள் நபர்கள் அனைத்துமே சுரண்டல் மிக்க ஆதிக்க பேரினவாத ஏகாதிபத்திய அடிவருடிகளினால் ஆக்கப்பட்டவையும் அவர்களை பாதுகாப்பவையும் ஆகும்.

எனவே நாம் செய்ய வேண்டியது சட்டத்தை முற்று முழுதாக நம்பிக் கொண்டிருப்பதல்ல. மாறாக இவ்அமைப்பு முறையை மாற்றியமைத்து வெகுஜனங்களுடைய அரசை தாபிப்பதாகும்.

**எல்லண்ணா**

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று 18 ஒக்ரோபர் 2011 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 138
மேல்மாடி இல 06, 571/15 காலி வீதி, கொழும்பு 06.
இலங்கை. தொ.பே. 060 2136530, தொலை நகல்: 011- 2473757
E-mail : puthiyapoomi@gmail.com Wed : www.ndpsl.org

# அடக்குமுறையாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களல்ல

கடந்த மாதம் இடம்பெற்ற ஐ.நா. சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமைகள் மீறல்கள் பற்றி இலங்கை அரசு மிகவும் செல்லமாக பயங்காட்டப்பட்டுள்ளது எனலாம். இது பற்றி பேசும் தமிழ் நிலை சார்பானவர்கள் இருப்பதுடன், இது இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஏகாதிபத்திய – புலிகள் கூட்டுச் சக்தியென்று பரப்புரை செய்யும் சிங்கள பௌத்த இனவாதிகளும் இருக்கின்றனர். இந்த நிகழ்வுகள் இலங்கையின் சிங்கள ஆதரவு நிலையை மேலும் பலப்படுத்தியுள்ளது. அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேசப்பற்றாளனாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் தொடர்ந்து வலம் வருவதற்கான சாத்தியப்பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் முன்னெடுக்கும் இலங்கை அரசிற்கு எதிராகவும் ரஷ்சியா, சீனா, வியட்நாம், மத்திய கிழக்கு நாடுகள், கியூபா, வெனிசுவலா போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளிக்கும் நிலையை வலுப்படுத்தியள்ளது. இதனால் ஐ.நா. சபையின் எந்தவொரு அழுத்தத்தையும் எதிர்கொள்ளலாம் என்ற நம்பிக்கையை இலங்கை அரசு கொண்டுள்ளது.

உள்நாட்டு அடக்கு முறையாளர்களுக்கு ஐ.நா. சபையின் சில செயற்பாடுகள் அச்சுறுத்தலாக இருப்பதுண்டு. அதே போன்று உலகில் பெரிய சக்திகள் சிறிய நாடுகளை அச்சுறுத்தி அடிப்பணிய வைக்க ஐ.நா. சபையின் சில செயற்பாடுகளை திட்டமிட்டு முடுக்கி விடுவதுமிண்டு. ஐ.நா. சபையின் சில செயற்பாட்டுத் தளங்களுக்கு அப்பால் மேலாதிக்க சக்திகள் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கும் அவற்றுக்கு அடிப்பணியாத நாடுகளை அடிப்பணிய வைக்கவும் செயற்பட்டு ஆக்கிரமிப்புகளையும் செய்துள்ளன. ஈராக் முதல் லிபியா வரை இவற்றை அவதானிக்க முடிந்தது. இந்த மேலாதிக்க சக்திகள் ஐ.நா. சபையின் செயற்பாடுகளினால் கேள்விக்குட்படுத்தப்பட முடியாதவையாக இருக்கின்றன என்பதும் தெரிந்ததே. ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளை ஐ.நா. சபை கேள்விக்குப்படுத்துவது என்பதும் வேடிக்கையானது. இந்த அங்கத்துவ நாடுகள் அவற்றின் நேச நாடுகளுக்கு எதிராக ஐ.நா. சபை எடுக்கும் அதிகாரத்தை இரத்து செய்யும் அதிகாரத்தை அல்லது சிறப்புரிமையைக் கொண்டுள்ளன. உலக ஒழுங்கு ஐக்கிய அமெரிக்க, சோவியத் யூனியன் ஆகிய இரண்டு துருவங்களாக இருந்த போது குழப்பமான ஐ.நா.வின் செயற்பாடுகள் ஒருதலைப்பட்சமாக இருந்தது குறைவு. ஆனால் 1980களில் சோவியத் யூனியனின் முழுமையான சிதைவின் பின்னர் அமெரிக்கா அதன் அதிகாரத்தை ஐ.நா. சபைக்கூடாக அல்லது தான் தனியாக நிலை நாட்டி வருகிறது.

,இவ்வாறான் ஒரு சூழ்நிலையில் மேலாதிக்க அல்லது ஏகாதிபத்திய சக்திகள் சிறிய நாடுகளை மிரட்டி அடிபணிய வைப்பதில் வெற்றிக் கண்டு வருகின்றன. அதே வேளை அடக்குமுறை அரசுகளும் குழப்பமான சூழ்நிலையில் ஐ.நா. சபையின் அழுத்தங்களை தவிர்ப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கின்ற ரஷ்சியா, சீனா ஆகியவற்றை பயன்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருவதை அவதானிக்க முடியும். ஐ.நா. சபை என்பது நவ கொலனித்துவ ஏகாதிபத்திய சர்வதேச நிறுவனம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் அடக்குமுறை அரசுகளின் எதேட்சதிகார போக்கிற்கு எதிராக ஐ.நா. சபையின் நடவடிக்கை மூலம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற போக்கு ஒன்று இருப்பதைக் காணமுடியும். மக்கள் விரோத அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான சர்வதேச ரீதியான நடவடிக்கைகளில் ஐ.நா. சபையூடாக மட்டுப்படுத்தப்பட்ட தாக்கம் கொண்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும். இந்த நடவடிக்கைகளை ஏகாதிபத்தியம் பயன்படுத்தும் ஆபத்திருக்கின்ற போதும் இந்நடவடிக்கைகளில் அடக்குமுறை அரசுகளின் கொடுமைகள் கேள்விக்குட்படுத்த சந்தர்ப்பம் இருப்பதுடன், அடக்குமுறை அரசுகள் மீது அழுத்தங்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு.

,இந்த பின்னணியில் இலங்கை அரசு மீதான ஐ.நா. சபையில் நகர்த்தப்படுகின்ற நடவடிக்கைகளை அவதானிக்கலாம். இலங்கையின் பாதுகாப்பு படையினர் 2009 மே மாதத்தில் மேற்கொண்ட இறுகிய போரின் போது போர் குற்றங்கள் உட்பட மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா என்பது பற்றிய விசாரணையைக் கோரும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு அறிக்கை தொடர்பான செயற்பாடுகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டுமா இல்லையா என்பது நம்முன் உள்ள கேள்வி. மேற்கொள்ள வேண்டும் என்பது எமது நிலைப்பாடு எனினும் அந்த கோரிக்கையின் பின்னணியில் ஏகாதிபத்திய நோக்கங்கள் உணரப்படுகின்ற போதும் அவ்விசாரணை அவசியமாகிறது. அவ்விசாரணையை மேற்கொள்ள மறுக்கும் இலங்கை அரசின் நிலைப்பாடு நியாயமானது எனக் கூறமுடியாது. அந்நிலைப்பாடோ அதற்கு துணைப் போவதோ ஏகாதிபத்திய எதிர்ப்பாக இருக்க முடியாது. ஏனெனில் இலங்கை அரசு ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசு அல்ல. அத்துடன் இது அடக்குமுறை அரசு அல்ல என்று கூறவும் முடியாது. இலங்கை அரசு விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களை நீதி கிடைக்க வழி செய்யும் என்ற நம்பிக்கை இருக்க முடியாது. அவ்வாறான விசாரணையை ஒன்றை மேற்கொள்ளக்கூட தயாரில்லாத உள்நாட்டு மக்கள், உலக நாட்டு மக்களுக்கு மேலாக இலங்கை அரசு செயற்படுகிறது. இதனால் இலங்கை மக்களின் இறைமை இலங்கை அரசின் செயற்பாடுகளினால் பறிபோகும் ஆபத்தான நிலை ஏற்பட்டள்ளது என்பதை இலங்கையின் அனைத்து மக்களும் உணர வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கேட்பது ஏகாதிபத்திய சதியாகவும், நீதி மறுப்பது ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் கொள்ளப்படுவது இலங்கை ஆளும் வர்க்கங்களினதும் அடக்குமுறை அரசினதும் நிலைப்பாடாகும். அடக்கப்படும் ஒடுக்கப்படும் தொழிலாளர்கள், விவசாயிகள், தேசிய இனங்களது நிலைப்பாடானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். என்பதாகும் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதாகவே இருக்க முடியும். இந்த நிலைப்பாட்டை முன்நகர்த்த இலங்கை மக்களின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் அவசியம்.

1980களின் பிற்பகுதியில் ஐ.தே.கட்சியின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற ஆட்கடத்தல்கள், கொலைகள், மனித உரிமை மீறல்கள் ஐ.நா.விடம் முறையிட்டு நிவாரணம் பெறுவதற்கான செயற்பாடுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது ஈடுபட்டிருந்தார். அன்று அவர் ஏகாதிபத்தியத்தின் சதியில் ஈடுபடுவதாக கொள்ளப்படவில்லை. மாறாக பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சர்வதேச செயற்பாடுகளை முன்னெடுத்தவராகவே கொள்ளப்பட்டார்.

பாதிக்கப்பட்டவர்கள் உள்நாட்டு சட்டங்களின் கீழும் சர்வதேச சட்டங்களின் கீழும் நடவடிக்கைகளை எடுக்க உரிமை உடையவர்கள். இன்றைய அரசுகள் ஐ.நா.வின் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டவைகளாகவே இருக்கின்றன. அவற்றின் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கை களுக்கு அரசுகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளன. ஆனால் இவை மிகவும் வரையறுக்கப்பட்டவை என்பதனை மக்கள் விளங்கிக் கொள்வது அவசியம்.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம். இதனை அடக்கு முறையாளர்களினதும், ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலின் கீழும் செய்ய முடியாது. மக்களுக்கான நிகழ்ச்சி நிரலை முன்னைடுக்க வேண்டும். அனைத்து அடக்கப்பட்ட மக்களினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்தை தவிர இதற்கு வேறு வழிகள் எதுவுமில்லை.

**ஆசிரியர் குழு**

# ஜே.வி.பி.யின் உடைவும் எதிப்[illegible]ாளர்களின் தீசையும்

**வெகுஜனன்**

கடந்த மாதப் புதிய பூமி (செப்ரெம்பர்) இதழில் "ஜே.வி.பி.யின் நிலைப்பாடும் செயற்பாடும்'' என்ற தலை ப்பிலே ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அதிற் குறிப்பிட்ட விடயங்களும் எழுப்பிய கேள்விகளையும் உள்ளடக்கியவாறு தற்போது ஜே.வி.பி.க்குள் கடும் உட்கட்சிப் போராட்டம் இடம்பெற்று வருகிறது. அண்மைக் காலமாக அக் கட்சிக்குள் நிலவி வந்த கருத்து முரண்பாடுகள் அதிருப்பதிகளாகவும் முரண்பாடுகளாகவும் மோதல்களாகவும் உருவெடுத்து அவை கட்சிக் கதவுகளையும் தாண்டி வீதிக்கு வந்துள்ளன. அப்படி இல்லை எனத் தலைமை மழுப்பிய போதிலும் உடைவு தவிர்க்க முடியாததாகியுள்ளது.

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் விஜித ஹேரத், அனுர குமார திசநாயக்க, ஹந்துனெத்தி, லால் காந்த உட்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு புறமாகவும் அதிருப்தியா ளர்கள் மறுபுறமாகவும் நின்றவாறே உட்கட்சிப் போராட்டம் இடம் பெற்று வருகிறது. இதில், அதிருப் தியாளர்களுக்கு எதிர்பார்த்ததை விடக் கூடுதலான ஆதரவு நாளுக்கு நாள் பெற்று வருகின்றனர். சில மாவட்ட அமைப்பாளர்களும் முழு நேர ஊழியர்களும் கட்சிப் பத்திரிக்கையான "லங்கா'' வின் ஆசிரியர் உட்பட அதில் வேலை செய்வோரும் அதிருப்தியாளர்களின் பக்கமே உள்ளனர். அத்தோடு மாணவர் சங்கம், இளைஞர் அமைப்பு, பெண்கள் அமைப்புகளிலும் குறிப்பாக தொழிற் சங்க அமைப்புகளிலும் அதிருப்தியாளர்களின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது. எனவே தற்போதைய முரண்பாடும் உட்கட்சிப் போராட்டமும் பிளவாகவும் புதிய கட்சியின் தோற்றத்திற்கும் மாற்று அரசியலுக்கும் ஒரு புதிய தளமாகவும் அமையும் என்றே பொதுவாக நம்பப்படுகிறது.

,இந் நிலையில் ஜே.வி.பி. கருத்து நிலை சார்ந்து எத்தகைய பாதையை முன்னெடுக்கப் போகிறது என்பது முக்கியமானதொன்றாகும். தலைமையைத் திருத்தி வழிக்குக் கொண்டுவர முடியாது என்பதை அதிருப்தியாளர்கள் அனு பவவாயிலாக அறிந்துள்ளனர். அப்படியானால் உடைந்து வெளியேறும் ஜே.வி.பி.யினர் எத்தகைய கொள்கையின் திசை மார்க்கத்தில் பயணிக்கப் போகிறார்கள் என்பது அடிப்படையான பிரச்சினையாகும். ஏனெனில் 1971ல் இருந்து அக்கட்சியில் இருந்து வெளியேறிய எவரும் சரியான ஒரு திசை மார்க்கத்தில் ஒரு மாக்சிய லெனினிசக் கட்சியைக் கட்டி எழுப்ப முன்வரவில்லை. அதற்கு காரணம் ஜே.வி.பி.யின் அரசியல் தத்துவார்த்த அமைப்பு எவ்வாறான குறைபாடுகளையும் தவறுகளையும் கொண்டிருக்கின்றது என்பது சரியான தளத்தில் இருந்து நோக்கப் படாமையாகும்.

ஜே.வி.பி. அன்று தொடக்கம் இன்று வரை ஒரு தொழி லாளி வர்க்கக் கட்சியாக இருந்ததில்லை. அது சிறு முத லாளித்துவ அடிப்படை கொண்ட, மாக்சியத்தையும் லெனி னிசத்தையும் வெறுமனே உச்சரிக்கும் ஒரு கட்சியாகும். அதன் உறுப்பினர்கள் இளைஞர்கள் யுவதிகளாகவே உள் ளனர். இளைஞர்கள் ஒரு வர்க்கத்தினர் அல்லர். அவர்கள் பல்வேறு வர்க்கங்களில் இருந்து வருபவர்கள். அவர்க ளிடம் அவரவர்களுக்குரிய வர்க்க முத்திரை இருந்தே தீரும். இன்றுங் கூட அவர்களது வேலைமுறை பல்கலை க்கழக மாணவர்களையும் பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையுமே இலக்காகக் கொண்டுள்ளது. இது நல்ல விடயமாகிலும் அதனுள் தீய அம்சங்களும் உண்டு. 1988-89 கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பின்பே ஜே.வி.பி. தொழிற் சங்க இயக்கத்தைக் கட்டியெழுப்பியது. அத னால் ஜே.வி.பி. தொழிற்சங்கவதத்திலுள் அமிழ்ந்து கொண்டதுடன் பாராளுமன்றப் பாதைக்கு வலுச்சேர்க்கவே அது பயன்பட்டு வருகிறது.

எனவே ஜே.வி.பி.யின் செங்கொடி போர்த்திய சிறு முதலாளித்துவ நிலைப்பாட்டால் நாட்டின் பிரதான பிரச்சினை யான தேசிய இனப் பிரச்சினையில் நிதானமானதும் தூர நோக்கிலான மாக்சிய கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு கொள் கை நிலைப்பாட்டை முன்னெடுக்க முடியவில்லை. அதனால் அக் கட்சியானது "சிவப்புப்'' பேரினவாதப் பாதையில் பயணித்துக் கொண்டது. அது இன்றும் அதிலிலருந்து மீளவில்லை. மேலும் அதன் அதி தீவிர நிலைப்பாடும் வலதுசாரிப் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் மாறிமாறி முன்னெடுக்கப் பட்டு வந்ததால் அழிவுகளையும் [illegible]டைவுகளையுமே சந் [illegible] தளங்களிலும் நடாத்திய கொலைகளுக்கு இன்றுவரை நியாயமோ சுயவிமர்சனமேதும் அதன் தலைமையால் முன்வைக்கப்பட்டவில்லை. அன்றைய அதிதீவிர ஒரு முனை நிலைப்பாட்டால் பல நல்ல சக்திகள் அழிக்கப்பட்டதுடன் சொந்த அணியில் பல பத்தாயிரம் இளைஞர்களும் யுவதிக ளும் கொல்லப்பட்டனர். இவை அதி தீவிர இடது நிலைப்பா ட்டால் விளைந்த ஒன்றாகும். அதே போன்று சந்திரிகா அரசா ங்கத்தில் அமைச்சர் பதவிகள் பெற்றுப் பாராம்பரிய பாராளு மன்ற கட்சிகளான கம்யூனிஸ்ட் மற்றும் சம சமாஜ கட்சிகள் சென்ற அதே பாதையில் சென்றார்கள். மஹிந்தச் சிந்தனை வேலைத் திட்டத்தை வடிவமைப்பதில் முக்கியப்பங்காற்றிய தாகப் பெருமைப் பேசிக் கொண்டனர். அதன் பின் அதே மஹிந்த ராஜபக்சிவிடம் இருந்து தூர விலகியதுடன் மற்றோரு ஆளும் வர்க்க வன்மம் கொண்ட சரத் பொன்சேகாவின் கட்சியுடன் ஐக்கிய முன்னணிக் கொண்டே கடைசி தேர்தல்களின் போது ஜே.வி.பி. தனது இயலாமையையும் சந்தர்ப்பவாத பிற்போக்குத்தனத்தையும் வெளிப்படுத்திக் கொண்டது.

,இவை யாவற்றையும் கவனத்தில் கொண்டு அதிருப்தியாளர்கள் தமக்கான புதிய அரசியல் திசை மார்க்கத்தை வகுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். விமர்சனம் சுயவிமர்சனம் எனும் போது அது ரோஹன விஜேவீரவின் வழிகாட்டலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். 1971, 1988-89 காலக்கிளர்ச்சிகளின் தோல்வி பற்றி பேச வேண்டும். அதன் பின்னான இன்றைய காலம் வரை விவாதிக்க வேண்டும். பாராளுமன்றப் பாதையில் அமிழ்ந்துப் போனமையைப் பற்றியும் தேசிய இனப் பிரச்சினையில் மாக்சிய விரோத நிலைப்பாடெடுத்து பேரினவாதத்தை எதிர்கொள்ள முடியாமையைப் பற்றியும் விமர்ச்சிக்கப்பட்ட வேண்டும்.

எவ்வாறாயினும் ஜே.வி.பி. அதிருப்தியாளர்கள் தெற்கிலே மாக்சிய லெனினிசத்தின் அடிப்படையில் ஒரு கட்சியையும் அதற்கான கொள்கை தந்திரோபாயங்களையும் வகுக்கும் திசையில் முன்னேற வேண்டும். அத்தகைய ஒரு கட்சியே ஜே.வி.பிக்கு மாற்றாக மட்டுமன்றித் தெற்கின் உழைக்கும் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்குத் தேவைப்படும் கட்சியுமாகும். அத்தகைய ஒரு கட்சி உருவாகுமா [illegible]

www.padippakam.com



# பணம் படைத்தோர் பட்டம் பெற்றுக் கொள்ளும் தனியார் மருத்துவக் கல்லூரி வேண்டாம்!

தனியார் மருத்துவக் கல்லூரி முறையைக் கொண்டு வந்தே தீருவோம் என மகிந்த சிந்தனை அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. அரசாங்கம் எடுத்து வரும் ஒவ்வாரு நடவடிக்கையும் மக்கள் விரோதப் பாதையிலேயே போகிறது. அதற்கமைய, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா யார் எதிர்த்தாலும் எவர் மறித்தாலும் தனியார் மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவந்தே தீருவேன் எனச் சபதம் செய்து நிற்பதை நாம் காண முடிகிறது. அதன் பயனாக, அமைச்சர் திசாநாயக்கா தனியார் மருத்துவக் கல்லூரிக்கான அமைச்சரா அல்லது உயர் கல்வி அமைச்சரா என்று பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் கேள்வி எழுப்புகின்றனர். தனியார் மருத்துவக் கல்லூரி இலவசக் கல்விக்குச் சாவு மணியேயாகும். பணத்தை வாரி இறைத்துத் தரமற்ற மருத்துவப் பட்டதாரிகள் உருவாக்கப்படுவர் எனவும் தனியார் மருத்துவமனைகளால் மக்களது இலவச மருத்துவம் நாளடைவில் சாகடிக்கப்படும் எனவும் அஞ்சப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோரும் மட்டுமன்றி அரசாங்க மருத்துவஅதிகாரிகள் சங்கமும் தனியார் மருத்துவக் கல்லூரி உருவாக்கத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறனர். எனவே தனியார் மருத்துவக் கல்லூரி கொண்டுவரப்படுவதை நாம் அனைவரும் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் சார்பாக எதிர்த்து நிற்போம்.

இலங்கையின் மருத்துவக் கல்லூரிகளின் தொகையும் வருடாந்தம் அங்கிருந்து வெளிவரும் மருத்துவப் பட்டதாரிகளின் தொகையும் பிற ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையிற் குறைவாகவே உள்ளது. நாட்டின் உடல் நலத்துறை நோய்த் தடுப்பிலும் நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதிலும் செலவிடும் தொகை, சனத்தொகையுடனும் பெருகி வரும் தேவையுடனும் ஒப்பிடும் போது குறைந்து கொண்டே போகிறது.

அரசாங்க மருத்துவமனைகளில் இட வசதியீனம், மருந்துகள் போதாமை போன்ற குறைபாடுகளாலும் சில பிரதேசங்களில் போதிய மருத்துவக் கவனிப்பு இல்லாதாலும் பொருள் வசதியுள்ளளோர் மட்டுமன்றி ஓரளவு வசதி குறைந்தோரும் தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றனர். எனினும் 1978இன் திறந்த பொருளாதாரக் கொள்கையும் தனியார்மயமும் அரசாங்க மருத்துவத் துறையினர் தனிப்பட்ட மருத்துவ ஆலோசனையும் சேவையையும் வழங்குவதை ஊக்குவித்ததுடன் அரசாங்க மருத்துவத் துறையில் முதலீட்டைக் குறைக்கத் தொடங்கியதாலும் நுகர்வுப் பொருளாதாரத்தின் எழுச்சியாலும் தனியார் மருத்துவம் இப்போது மிகவும் வலுப்பெற்றுள்ளது. பொருள் வசதி குறைந்தோருக்கு மருத்துவ வசதியை மறுக்கிற ஒரு நிலையை நோக்கி நமது மருத்துவத் துறை சென்று கொண்டிருக்கிறது.

மருத்துவர்கட்கு ஒரு சமூக அந்தஸ்தும் குறைவில்லாத வருமானமும் இருந்து வந்தமையாலேயே பல மாணவர்களும் அத் துறையை நாடிவந்தனர். 1978இற்கு பிறகு, குறிப்பாகக் கடந்த பதினைந்திருபது ஆண்டுகளில் அது கொள்ளை இலாபம் குவிக்கும் துறையாகிவிட்டது. மருத்துவம் வணிகமயப்பட்டு மருத்துவர்களும் அவ் வணிகத் துறையின் ஒரு அங்கமாகி விட்டனர்.

நமது நாட்டின் தனியார்மயமாக்கற் கொள்கையானது ஏகாதிபத்தியத்தினதும் அதன் முகவர் அமைப்புகளினதும் நெருக்குவாரங்களின் கீழ் நடைபெறுவது என்பதை நாம் அறிவோம். அதன் ஒரு பகுதியாகவே தனியார் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாட்டிற் செயற்படுகின்றன. எனினும், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் தனியார் கல்விக்குத் தடையாக மூலதனத் தேவைகள் உள்ளன. ஆய்வுகூட வசதிகளும் பட்டறைகளும் கல்விசார் மருத்துவமனைகளும் நிறுவவும் நடத்துதல் செலவு மிகுந்தவை.

1970கள் வரை இத் துறையில் நாட்டிற்கு பணியாற்றும்




தொழிற் தகுதி பெற்றவர்கள் தேவை என்பதனாலேயே அரசாங்கங்கள் முதலிட்டன. இப்போது அராசங்கத்தின் அணுகுமுறை வேறு. உயர் கல்வி என்பதற்கு ஒரு தேசியப் பொருளாதா, சமூகவியல் நோக்கு இல்லாது அதையும் வணிகப் பண்டமாகவே நோக்குமாறு அரசாங்கங்கள் ஏகாதிபத்திய நெருக்குவாரத்திற்கு உட்படுகின்றன. பொதுமக்களே இன்னமும் உயர் கல்வியை –குறிப்பாக மருத்துவத்தை– ஒரு முக்கிய சமூக சேவையாகவே நோக்குகின்றனர். எனவே அரசாங்கங்களால் மருத்துவக் கல்வியை இலவசக் கல்வித் முறையினின்று திட்டமிட்டு நேரடியாக விலக்கிவிட இயலாதுள்ளது. எனவே தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவும் முயற்சிகள் பல காலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1980 அளவில் கொழும்பை அண்டிய றாகம வைத்தியசாலையைப் பயன்படுத்தும் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டது. எனினும் நாட்டின் மருத்துவ துறை மாணவர்களதும் ஆசிரியர்களதும் அராசங்க மருத்துவர்களதும் கடும் எதிர்ப்பும் மக்களுடைய பொதுவான எதிர்ப்புணர்வும் சேர்ந்து அந்த தனியார் மருத்துவக் கல்லூரிக்கு முடிவு கண்டன. இப்போது றாகம வைத்தியசாலை களனிப் பல்கலைக்கழகத்தின் கல்வித் தேவைகளுக்கு உதவுகிறது. இவ்வாறு யாழ் குடாநாட்டில் ஒரு தனியார் மருத்துவமனையை நிறுவும் முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

அந்த தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களையும் எதிர்ப்பு தெரிவித்த கட்சிகளையும் கொண்ட ஒரு அரசாங்கம் மாலபேயில் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்கி அது தொடக்கப்பட்டுள்ளது. அதற்குரிய மருத்துவமனை ஒன்றின் பணிகள் மும்மரமாகியுள்ள நிலையில் நாட்டின் மருத்துவத் துறை மாணவர்களும் இலங்கை அராசங்க மருத்துவ அலுவல்கள் ஸ்தாபனம் என்ற மருத்துவத் துறை தொழிற் சங்கமும் இணைந்து தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளன. அது மிகச் சரியானதும் வரவேற்கவேண்டியதுமாகும்.

இந்த தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் அறவிடவுள்ள கட்டணம் மொத்தம் 60 இலட்சம் ரூபா. இது வெளிநாடுகட்கு அனுப்பி பயிற்றுவிக்கும் செலவிலுங் குறைவானது, எனினும் ஒப்பிடத்தக்கது. இப்படிச் செலவு செய்து மருத்துவர்களாக வருபவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கலாம். போட்ட முதலுக்கு மேலாகப் பொருளீட்டும் இலாப நோக்கத்தையா அல்லது கருணையுள்ள மருத்துவக் கண்காணிப்பையா? பணத்தை மட்டுமே கறக்கும் நோக்கமுள்ள மனித நோயற்ற மருத்துவர்களை உருவாக்க முன்னிற்கும் தனியார் மருத்துவக் கல்லூரி நமக்குத் தேவையா?

அதைவிட முக்கியமாக, இவ்வாறு நிறுவப்படும் மருத்துவக் கல்லூரிகளில் பண முதலைகளான பெரும் புள்ளிகளின் பிள்ளைகளே பயிலுவார்கள். அவற்றின் தொகை பெருகும் போது தகுதி பெற்ற பேராசிரியர்களையும் நிபுணர்களையும் அவைக் கூடிய சம்பளத்திற்கு கவருவதன் பயனாக, நாட்டின் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளின் தரம் தாழ்ந்துவிடும். ஏலவே வடக்கு, கிழக்கு, வட மத்திய பல்கலைக்கழகங்களில் மருத்துவக் கல்லூரிகட்கு போதுமான அரசாங்க உதவி இல்லாத நிலையில், தனியார் மருத்தவக்கல்லூரிகளின் வருகை நல்ல மருத்துவத்தைப் பணமுடையோருக்கானதாக்கி வருவது போல, மருத்துவக் கல்வியையும் பணமுடையோருக்காக்கிவிடும் என்ற அச்சம் நியாயமானது. அதனால் இலவசக் கல்வி மூலமான மருத்துவத் துறை படிப்படியாகச் சீரழிக்கப்படும்.

எனவே மாணவர்களதும் மருத்துவத் துறையினரதும் எதிர்ப்பு மிகச் சரியானதும் மக்களால் ஆதரிக்கப்பட வேண்டியதுமாகும். நாமும் நமது வன்மையான எதிப்புடன் இணைந்து அத்துடன் நிற்போம்.

# வடபுலத்தில் ஒரு தனி இராச்சியம்

யாழ்ப்பாணம், **கிளிநொச்சி**, **முல்லைத்தீவு**, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியதே வடபுலம் எனப்படும் வட மாகாணமாகும். இங்கே தற்போது முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கை களை அவதானிக்கும்போது, அங்கே ஒருவகையான தனி இராச்சியம் நடாத்தப்படுவது போன்றே காணப்படுகிறது.

முன்பு புலிகள் இயக்கம் பல்வேறு செயற்பாடுகளை தமிழீழத்தின் பெயரால் தமக்கான தனி நிர்வாகத்தைப் பல துறைகளிலும் ஏற்படுத்தி தனி இராச்சியம் போன்று நடாத்தி மக்களின் மேல் திணித்தனர். மக்களின் அன்றாடவாழ்விலும் அரசாங்க நிர்வாகத்திலும் அவர்களது அச்சுறுத்தல்களும் அவற்றுக்கும் அப்பால் தண்டனைகள் என்பனவும் இருந்து வந்தன. அவை பற்றிக் கருத்துக் கூறும் சுதந்திரமோ ஜனநாயக நடைமுறைகளோ பின் பற்றப்படவில்லை. மக்களின் கருத்துக்கள் விருப்பங்கள் எதுவும் கேட்கப்படவில்லை. புலிகளின் புலனாய்வுத்துறை சகல நிலைகளிலும் மக்களை கண்காணித்து வந்தது. மக்கள் உணவுக்கு மட்டும் வாய் திறக்கவேண்டி இருந் ததே தவிர மாற்றுக் கருத்தைத் தப்பித் தவறித்தானும் முன்வைக்க அவர்கள் இடமளிக்கவில்லை. அதன் ஒட்டு மொத்த விளைவு மக்களது எதிர்ப்பை வளர்த்துக் கொண்டதேயாகும்.

2009 மே 19ல் புலிகள் இறுதித் தோல்வி கண்ட பின்பு மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கும் அதற்கு முன்பு கிழக்கும் வந்துகொண்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாக வடக்கில் இராணுவ நிர்வாகம் சகலவற்றிலும் மேலாண்மை செலுத்தி வருகிறது. எந்த மாவட்டத்திலும் அரசாங்க அதிபர் என்பவர் அசாங்கத்தின் அரசியல் போக்கிற்கு ஏற்றவ ராகவே நியமிக்கப்படுவது ஏற்கனவே நடைமு றையில் இருந்து வருவதாகும். இப்போது வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட பின்பு அவ்விரு மாகாணங்களு க்கான ஆளுனர், அரசாங்க அதிபர்கள், இராணுவக் கட்ட ளைத் தளபதி, அமைச்சர் ஒருவர், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போரே ஜனாதிபதியினதும் அமை ச்சர்களதும் உயர் அதிகாரிகளினதும் முடிவுகளைச் செயற் படுத்துபவர்களாக உள்ளனர். இராணுவ பொலீஸ் புலனா ய்வுகள் கண்காணிப்பை அதிகரித்துக் கொள்வதுடன் மூலை முடுக்கெல்லாம் அவர்களின் கண்களில் இருந்து தவற முடியாதபடி ஒவ்வொன்றும் ஆராயப்படுகிறது. முன்பு புலிகள் எவ்வாறு துப்பாக்கி மூலம் ஆதிக்க நிர்வாகம் நடாத்தி இயல்பு வாழ்வையும், ஜனநாயகத்தையும் கட்டுப்படுத்தி மறுத்து வந்தார்களோ அதே விதமான நடைமுறைகளே இன்று அரசாங்க இராணுவ நிர்வாகத்தினால் மேற்கொள்ள ப்படுகிறது. புலிகளை அழித்து விட்டதாகக் கூறுவோர் புலிகளின் நடைமுறைகளை வடக்கில் பின்பற்றுகின்றனர் என்பது தான் முரண்நகையாக இருக்கின்றது.

மக்கள் தொடர்ந்து பயப்பீதியுடனும் அடங்கி ஒடுக்கியபடி வாழவேண்டும் என்பதையே இராணுவ நிர்வாகம் விரும்புகிறது. அவ்வாறு மக்களை தொடர்ந்து அச்ச நிலையில் வைத்திருப்பதன் மூலம் தமது உள்ளார்ந்த பேரினவாத ஆளும் வர்க்க முடிவுகளைச் செயற்படுத்த லாமென நம்புகின்றனர். ஒரே தேசம், ஒரே மக்கள் என்பதன் ஊடாக வடக்கு கிழக்கின் தனித்துவங்களையும் பாரம்பரியப் பிரதேச அடையாளங்களையும் அழிப்பதில் அவர்கள் அக்கறையாக உள்ளனர். கடந்த வருடத்திற் கொலைகள், ஆட்கடத்தல்கள், கொள்ளைகள் என்பன குறிப்பிட்ட காலம் வரை தலை விரித்தாடின. சிலகாலம் அவ்வாறு இடம்பெற்று உச்சக் கட்டத்தின் போது வீதிச் சோதனையும் இராணுவ பொலீஸ் ரோந்தும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. அவற்றால் மக்கள் தமது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. அந்நிலை சற்று ஓய்ந்து ஓரளவுக்கு மக்கள் நிம்மதி எனக் கூறிக்கொண்ட சந்தர்ப்பத்தில் ''மர்ம மனிதன்'' ''கிறீஸ் பூதம்'' என்பவை கட்டவிழ்த்து விடப்பட்டன. அவர்கள் யார், என்ன செய்கிறார்கள், அவர்களின் நோக்கம் என்ன என்பதெல்லாம் மக்கள் மத்தியில் வெளிச்சமாகிக் கொண்டது. மக்கள் துணிந்து வீதிக்கு வந்து மர்ம மனிதர்களைத் துரத்திப் பிடிக்க முற்பட்டபோது இராணுவமும் பொலீசும் அவர்களைப் பாதுகாத்துக்கொண்டன. மக்கள் அணிதிரண்டு எதிர் நடவடிக்கையில் இறங்கியபோது சட்டத்தைக் கையிலெ டுக்க வேண்டாமென அரசாங்கமும் பொலீஸ் இராணுவ மும் எச்சரித்தன. அமைச்சர்கள் பக்கப்பாட்டுப்பாடினர். நாங்கள் எதையும் எப்படியும் செய்வோம், நீங்கள் மறுப்போ எதிர்ப்போ தெரிவிக்கக் கூடாது. மீறினால் நமது கைவரிசையைக் காட்டுவோம் என்ற விதமாகவே பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இப்போது மர்ம மனிதர்களைப் பிடிப்பதற்கு அன்றி கள்வர்களைப் பிடிக்கப் பொலீஸ் பொதுமக்கள் குழுக்களென அமைக்கப்படுகின்றன. இவை யாவும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்வுக்கு மக்கள் வந்து கொண்டிருப்பதை தடுப்பனவாகும். மேற்கூறிய ஐந்து மாவட்டங்களும் அரசாங்க இராணுவக் கண்காணிப்பின் கீழ் தனிராச்சியம் போன்றே நடத்தப்படுகின்றன. அன்று புலிக்கொடி இராச்சியம் என்றால் இன்று சிங்கக்கொடி இராச்சியம் என்றே மக்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மக்ளுக்கு எதிரான எந்தொரு அடக்குமுறையையும் எந்தவொரு செயற்பாடும் வெற்றிபெறமாட்டாது என்பதே விழிப்பும் எழுச்சியும் பெற்ற உலக மக்கள் தந்த வரலாற்றுப் பாடமாகும். அதனை உழைக்கும் மக்கள் படித்துக் கொள்வது இன்றைய தேவையாகும்.

www.padippakam.com



# ஐ.நா.வில் ஜனாதிபதி

]ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஐ.நா.வில் உரையாற்றிய போது, இலங்கை அரசின் மீதான சர்வதேச குற்றச் சாட்டுகள் இலங்கையின் நற்பேருக்குக் களங்கம் கற்பிப்பவை என்றும் இன்று புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பிறகு நாட்டின் பல இன மக்களும் பயமின்றி வாழ்வ தாகவும் போர் முடிந்து இரண்டரை வருடங்களுக்குள் 95 சதவீதமான மக்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகம் சுமத்தும் குற்றங்கள் பொய்யானவை என்று ராஜபக்ச சொல்லுவதால் அவை பொய்யாகி விடப் போவதில்லை. போரில் இரு தரப்பினரும் பாரிய குற்றங்களைச் செய்துள்ளனர் என்பதை ஐ.நா நிபுணர் குழு சுட்டிக் காட்டியுள்ளது. எனவே புலிகளைக் குற்றஞ் சாட்டாமல் அரசாங்கத்தின் மீது பழி கூறுவதாக முறைப் படுவது மேற்கு நாடுகளிடம் எடுபடப் போவதில்லை. அதே வேளை, போர்க் குற்ற மனித உரிமை மீறல் விசாரணை கள் பற்றி மேற்குலகும் ஐ.நா. சபையும் செலுத்துகிற நெருக்குவாரங்கள் இலங்கைத் தமிழர் மீதோ போராற் பாதிக்கப்பட்டோர் மீதோ உள்ள அக்கறையால் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது.

நாட்டில் எவ்வளவு தூரம் அமைதி நிலவுகிறது என்பதை வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் எவ்வளவு மன அவலத்திற்கு உட்படுகின்றனர் என்பதை அறிந்தோர் அறிவர். அண்மைய கிரீஸ் பூத நிகழ்வுகள் மட்டுமல்லாமல் அரசியற் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இட்டு வருகின்ற தடைகள் நிச்சய மாகச் சுமுகமான ஒரு சூழலின் அறிகுறிகள் அல்ல.

மீள் குடியேற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்தும் இலங்கை போருக்கு பின்பான மீள்க் குடியேற்றத்தை எவ்வளவு முன்மாதிரியாக செய்து முடித்துள்ளது என்ற வெற்று பிதற்றலும் நம்ப விரும்புபவர்கள் மட்டுமே நம்பக் கூடியன. முகாம் வாழ்வை விட அவலமான வாழ்வையே மீளக் குடியேற்றப்பட்ட மக்கள் அனுபவிக்கின்றார்கள் என்பதை அவர்களைக் கண்டு கதைத்தவர்கள் அறிவார்கள்.

எனவே சனாதிபதி சொன்னவை சர்வதேச சமூகத்தின் நுகர்வுக்கானவையா அல்லது உள்ளூர் நுகர்வுக்கானவையா என்பதை நாம் ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம். சர்வதேச சமூகம் எனப்படும் ஏகாதிபத்திய நாடுகள் இலங்கை அரசின் மீது நெருக்குவாரங்கள் கொடுப்பதன் நோக்கம் பற்றி நாம் அறிய வேண்டும். அது இலங்கை அரசாங்கத்தை மேற்குலகுக்குப் பணிய வைக்கும் நோக்கம் கொண்டது என்பதில் ஐயமில்லை. இலங்கைக்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான பல்வேறு கடன் திட்டங்களும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களும் வழங்கப்படுகின்றன. அமெரிக்கா தண்டிக்க விரும்புகின்ற நாடுகள் மீது விதிக்கப்பட்ட எவ்விதமான பொருளாதரத் தடையும் போரின் மோசமான காலத் திலோ போரின் பின்பு மக்கள் அகதி முகாம்களில் விலங்குகள் போல நட்டத்தப்பட்ட போதோ மேற்கொ ள்ளப்படவில்லை. எனவே ஒரு புறம் இலங்கையை மேலும் கடனாளியாக்கி ஏகாதிபத்திய உலகமயமாதற் பொருளாதாரத்திற்குள் பூரணமாக இறுக்கும் வேலைகள் நடக்கிறதை நாம் அறியலாம்.

இப்போது இலங்கைக் கான ஐ.நா. தூதர் சவேந்திர சில்வா மீது அமெரிக்கா வில் மனித உரிமை வழக்குகள் தாக்கலாகியுள்ளன. முதலில், அதை எவ்வாறு நீதி மன்றத்தில் எதிர்கொள்வேன் என்று வாய்வீரம் பேசிய அந்த முன்னாள் ராணுவ அதிகாரி இப்போது இராஜதந்திரி என்ற அடிப்படையில் வழக்கு விசாரணை யில் இருந்து விலக்குப் பெற முயல்கிறார்.

,லங்கை அரசாங்கம் சென்ற ஆண்டு மேற்குலகிற்கு எதிராகப் பேசிய வாய்வீரமும் கொஞ்சம் அடங்கியுள்ளது. ஐ.நா. சபைக்கும் மேற்கு நாடுகளுக்கும் எதிரான சிந்தனைகளும் ஆர்ப்பாட்டங்களும் பெருமளவும் குறைந்துள்ளன. ஆனால் மேற்குலக நெருக்குவாரம் வலுத்துள்ளது. இதை நாம் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான சர்வதேச வல்லரசுப் போட்டியுடன் சேர்த்து நோக்கினால் மேலும் உண்மைகள் வெளிப்படலாம்.

ஒன்று மட்டும் நிச்சயம். மேற்குலகின் நோக்கம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதல்ல. எனவே இவ் விடயம் எந்தத் திசையில் போனாலும் தமிழ் மக்கள் மகிழ ஒன்றும் இருக்காது. மாறாக இலங்கைக்குள்ளேயே போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் பற்றிய நம்பகமான, ஒழுங்குமுறையான ஒரு விசாரணை மேற்கொள்ளப்படுமானால், மீளக்குடியேற்றம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் உறுதிப்படுத்துவதாக இருந்தால், அடக்குமுறைச் சட்டங்கள் நீக்கப்பட்டுத் தேசிய இனப் பிரச்சினைக்கு அந்தரங்க சுத்தியான ஒரு தீர்வு தேடப்படுமானால், நாட்டின் அனைத்து மக்களும் அந்நியக் குறுக்கீட்டுடையும் நெருக்குவாரங்களையும் முழுமனதாக ஒன்றுப்பட்டு எதிர்க்கும் நிலை உருவாகும். அது நாட்டின் உண்மையான சுதந்திரத்தை உறுதிப்படுத்தும்.

**மோகன்**

# 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் சமகால முக்கியத்துவம்

**1917ல் தோழர் லெனின் தலைமையில்** மாபெரும் ரஷ்ய ஒக்ரோபர் புரட்சி **வெற்றிப்** பெற்று 94 ஆண்டுகள் ஆகின்றன. 1949 ஒக்ரோபர் முதல் திகதியன்று தோழர் மா ஓ சேதுங் தலைமையில் மகத்தான சீனப் புரட்சி வெற்றிப் பெற்று 62 ஆண்டுகள் ஆகின்றன. உன்னதமான அப்புரட்சிகளின் பாதையில் பயணித்த நாடுகளும் மக்களும் தம்மை அடிமைத் தளைகளில் இருந்து விடுவித்து சுதந்திர மனிதர்களாகிக் கொண்டனர். இன்றும் அப்புரட்சிகளுக்கு வழிகாட்டி நின்ற மாச்சிம் லெனினிசம் மா ஓ சேதுங் சிந்தனையின் ஒளியில் உலகின் நாலா திசைகளிலும் மக்கள் போராடி வருகின்றார்கள்.

நமது நாட்டிலும் பல்வேறு வகைப்பட்ட போராட்டங்கள் இடம்பெற்று வந்துள்ளனவெனில் அவை மேற்கூறிய புரட்சிகள் மீதான ஈர்ப்புகளினாலும் அதிர்வுகளில் இருந்துமே வெடித்தெழுந்தன என்பது மறுப்பதற்கில்லை. இத்தகைய ஒரு சூழலிலேயே இலங்கையில் இடது சாரி இயக்கமும் பொதுவுடைமை கட்சியும் தோன்றி வளர்ந்தன. இக்கட்சி 1964ல் புரட்சிப் பாதையா பாராளுமன்றப் பாதையா எனும் விவாதத்தில் பிளவுப்பட்டது. அவ்வாறான நிலையில் தோன்றியதே புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாகும். மாக்சிசம் லெனினிசத்தையும் மா ஓ சேதுங் சிந்தனையையும் ஏற்று முன்சென்ற கட்சி அறுபதுகளின் நடுக்கூறிலே சமூக தளத்தில் இருந்து வந்த சாதிய முரண்பாட்டிற்கான போராட்ட முனையைத் திறந்து வைத்தது.

1966 ஒக்ரோபர் 21ம் திகதியன்று இப்புரட்சிகர கம்மியூனிஸ்ட் கட்சி ''சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்'' எனும் சாதிய தீண்டாமையை எதிர்த்து போராட்ட பதாகையை உயர்த்தி முன்சென்றது. சுன்னாகத்தில் இருந்து யாழ் நகர் நோக்கிச் செல்ல வீர நடைபோட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்ட அவ் ஊர்வலத்தை பொலிஸ் தாக்கி இரத்தம் சிந்த வைத்தது. மக்கள் பயந்தோ பணிந்தோ பின்வாங்கவில்லை. துணிந்து நின்றனர். மீண்டும் யாழ் நகர் நோக்கி ஊர்வலம் சென்றது. யாழ் நகரில் பெரும் கூட்டம் நடைபெற்றது. சாதியத்தை எதிர்த்து தீண்டாமையை முறியடிக்கும் போராட்ட அறைகூவல் விடுக்கப்பட்டது. இதனை மாக்சிய லெனினிசக் கட்சியின் அன்றைய பொது செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் அக்கூட்டத்தில் வெளியிட்டார். சாதிய தீண்டமை அடக்குமுறையையும் அடிமை தனத்தையும் எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் போராட வேண்டும் என்றும் அதற்கு புரட்சிகர கமியூனிஸ்ட் கட்சி வழிகாட்டும் என்றும் அவ்வறை கூவல் கூறியது. அது போராட்டப் பிரகடனமும் ஆகியது.

அவ் அறைகூவல்விடுக்கப் பெற்று இப்போது 45 ஆண்டுகள்ஆகின்றன. அதன் போராட்டங்கள் கடுமையான சவால்களை முறியடித்து வெற்றிபெற்றுக்கொண்டன. அதற்கு இருக்கக்கூடிய சமகால முக்கியத்துவம் இவ் வேளையில் நோக்கப்பட வேண்டியதாகும். ஆண்டாண்டுகால சாதிய அடிமைத்தனத்தின் கீழ் கொடிய தீண்டாமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்த மக்கள் போராட்டங்களில் எழுந்தனர். ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை மற்றும் சமத்துவம் என்பனவற்றை வென்றெடுப்பதே அவ்வெழுச்சி உருவாக்கிய போராட்டங்களின் அடிநாதமாக விளங்கியது. தாழ்த்தப்பட்ட மக்கள் வெகுஜனப் போராட்டப்பாதையில் அணிதிரண்டு முன்சென்றனர். அவர்களது அப்போராட்டத்திற்கு மாக்சிச லெனினிசக் கட்சி தலைமைத்தாங்கி வழிகாட்டியது.

சாதியமும் தீண்டாமையும் நிலவுடைமை வழிவந்த முரண்பாடும் ஒடுக்குமுறையாகும். இதற்கு எதிரான போராட்டம் என்பது இலங்கை முழுவதிலும் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. சமாதானப் பாதையில் அகிம்சை வழிமுறைகளில் வெற்றிபெறாத சாதியத்திற்கு எதிரான போராட்ட முயற்சிகள் இறுதியில் புரட்சிகரமான ஆயுதப்போராட்டம் என்ற கட்டத்தை அடைந்தே வெற்றியும் பெற்றுக்கொண்டன. அதில் வர்க்கப்போராட்ட அடிப்படையும் தொழிலாளி விவசாயிகளின் போராட்ட அணிதிரள்வும் பிரதானப் பங்கை வகித்தன. அதற்கு புரட்சிகர மாக்சிச லெனினிசக் கட்சி தலைமை கொடுத்தது. குறித்த இலக்கை நோக்கி மக்கள் வெகுஜன அடிப்படையில் அணிதிரட்டப்பட்டனர். மக்கள் மீது எவ்வித அரசியல் அல்லது ஆயுத மிரட்டல்களோ விடுக்கப்படவில்லை. அதே மக்கள் மத்தியில் கட்சியின் இளைஞர் இயக்கம் அரசியல் கருத்துக்களை பரப்புரை செய்து அமைப்பு வாயிலான அணிதிரட்டல்களை செய்திருந்தது. அதனால் வெகுஜன எழுச்சியில் ஈடுபட்ட மக்களுக்கு அரசியல் போராட்ட நடைமுறை மீதான நம்பிக்கையானது இயல்பாகவே ஏற்பட்டிருந்தது.

## புரட்சிகர எழுச்சியின் 45 வது ஆண்டு நினைவாக

இவை யாவற்றுடனும் கட்சியின் வழிகாட்டலானது சாதியத்தாலும் தீண்டாமையாலும் மறுக்கப்பட்ட ஜனநாய கம், சுதந்திரம், சமத்துவம் மற்றும் மனித உரிமை என்பவ ற்றை வென்றெடுக்கும் அடிப்படை நோக்கையும் போக்கையும் கொண்டிருந்தது.

இவற்றுக்கான கொள்கை வகுப்பில் அதிதீவிர நிலைப்பாடோ அன்றி குறுகிய சாதிவாத கண் ணோட்டமோ அறவே பின்பற்றப்படவில்லை. மாக்சிசம், லெனினிசம் மற்றும் மா ஓ சேதுங் சிந்தனை அடிப்படையிலான வர்க்க அரசியலே அடிநாதமாக விளங்கி நின்றது. மேலும் ஒக்ரோபர் எழுச்சிக்குப் பின் எழுந்த போராட்டங்களில் மக்களே! கதாநாயகர்களாக விளங்கினர். தனிப் பெரும் தலைவர்கள் என்ற நிலவுடைமை சிந்தனை வழிவந்த போக்குகள் இருக்கவில்லை. கூட்டுத்தலைமையாக செயற்பட்ட அதேவேளை தலைமைப்பாத்திரம் வகித்த தோழர்களின் ஆற்றல்கள் இப்போராட்டங்களில் வெளிப்படன. அத்தகைய தலைவர்கள் எனப்பட்டோர் தன் னடக்கத்துடன் மக்களுக்கு சேவை செய்பவர்களாகவே செயற்பட்டனர்.



1966ம் ஆண்டு ஒக்ரோபர் 31 சுன்னாக ஊர்வலம்

மக்கள் தாராளமாக நிதியுதவி செய்துவநதனர். சில தனிநபர்கள் உதவினர். சில குறிப்பான தோழர்கள் உதவினர், இவர்கள் எவருமே இப்போராட் டத்தில் பிரதியுபகாரம் எதிர்பார்க்காதவர்களாகந் செயற்ப ட்டனர்.

சைவ சித்தாந்தமும், கந்தபுராண கலாச்சாரமும், வேரூன்றி இருந்த யாழ்ப்பாண நிலவுடைமைச் சூழலில் சாதியமும் தீண்டாமையும் செழிப்பாக இருந்து வந்தது. இதனை எந்தத் தமிழ்த் தேசியவாத அரசியலும் அதன் தலைமைகளும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. எனவே அதனை எதிர்த்து முறியடிக்கும் பாரிய வரலாற்றுப் பணியினை மார்சிச லெனினிச வாதிகளே கையேற்று முன்னெடுத்தனர். அத்தகைய எழுச்சியும் போராட்டமும் இடம்பெற்ற 45வது ஆண்டு நினைவினை முன்னிறுத்தும் போது அதில் தியாகியான தோழர்கள், நண்பர்கள், மக்களை நினைவு கூர்ந்துக் கொள்வது அவசியமாகும். அப்போராட்டங்களில் முன்னிலை வகித்து காலத்தால் இயற்கையெய்திய அனைத்து தோழர்கள், நண்பர்களையும் இவ்வேளை நினைவு கூறுகின்றோம். இன்னும் தமது முதுமைக்காலத்தில் உறுதியான உணர்வும், உத்வேகமும் குலையாது இருந்து வரும் தோழர்கள், நண்பர்கள், மக்களை கௌரவித்து வாழ்த்துகின்றோம். புதிய தலைமுறை அந்த உன்னதமான எழுச்சி போராட்டத்தின் அனுபவங்களை பகிர்ந்து தமது புரட்சிகர பயணத்தை தொடரவேண்டும் என வேண்டுகின்றோம்.

www.padippakam.com



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 14

-வெகுஜனன்-

தமிழ் ஈழக் கோரிக்கையை வென்றெடுக்க ஆயுதம் ஏந்தி நின்ற தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஒவ்வொன்றினதும் சுயரூபங்கள் 90களில் தமிழ் மக்களின் நடுவே அம்பலமாகின. புலிகள் இயக்கத்தைத் தவிர்ந்த பெரும்பாலான இயக்கங்கள் இந்தியாவின் கருவிகளாகச் செயற்பட்ட நிலை தெளிவாகியது. அதே வேளை, புலிகள் இயக்கம் தன்னைத் தனியொரு ஆதிக்க இயக்கமாக்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டிக் கொண்டது. அதற்காக ஏனைய இயக்கங்களையும் தமிழர் தரப்புக் கட்சிகளையும் மாற்றுக் கருத்துடைய அரசியற் சக்திகளையும் வேட்டை யாடுவதில் எவ்வித தயவுதாட்சணியத்தையும் காட்டவில்லை. மேலும் தனது இய்க்கத்திற்குள்ளும் பிரபாகரனின் தலைமைக்கு எதிராகச் செயற்பட்ட எவரையும் விட்டு வைக்கவும் இல்லை. புலிகள் இயக்கத்தினுள் மாற்றுக் கருத்தை முன்வைக்கவோ அன்றி ஜனநாயக கலந்துரையாடல்களுக்கோ இடமளிக்கவில்லை. அந்த இயக்கம் எதிராளிகளை எவ்வாறு தமது தேர்ச்சி பெற்ற புலனாய்வு மூலம் அடையாளம் கண்டு அழிப்பதில் முன்னின்றதோ அதுபோன்றே தங்கள் மத்தியில் உள்ள களப் போராளிகளையும் தலைமைத் தளபதிகளையும் கடுமையான கண்காணிப்புக்கும் புலனாய்விற்கும் உட்படுத்தி வந்தது. இதில் அதிமுக்கியமானது, பிரபாகரன் என்ற தனிமனித தலைமைத்துவத்திற்கு எதிராக செயற்படுவோரை அடையாளம் கண்டு அழிப்பதாகவே அமைந்திருந்தது.

அந்த வகையிற், பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்து வந்த மாத்தையா 1993ல் பிரபாகரனின் வழிகாட்டலிற் கைதுசெய்யப்பட்டுப் புலிகளின் சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் ஒரு வருட விசாரணைக்கும் சித்திரவதைகளுக்கும் பின்பு மாத்தையாவிற்கு 1994ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதனைப் புலிகள் இயக்கம் உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லையாயினும் பின் வந்த மாதங்களில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்றன் பாலசிங்கத்தின் மூலம் இது வெளிவந்தது. இவ் விடயத்தில் மாத்தையா மட்டுமன்றி அவருக்கு ஆதரவாக இருந்த பலரும் கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டதுடன் சிலர் நீண்ட சிறைவைப்புக்கும் ஆளாக்கப்பட்டனர். இந்த உள்ளி யக்க அழிப்பு நடவடிக்கையில் பரவலாகச் சுமார் 300 பேராளிகள் வரை கொல்லப்பட்டு அழித்தொழிக்கப்பட்ட தாகப் பின் வந்த தகவல்கள் தெரிவித்தன. இவர்கள் இந்திய உளவாளிகள் எனத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். இது புலிகள் இயக்கத்திற்கு கைவந்த கலையாகவும் இருந்து. இதே கலையைப் பயன்படுத்தி மாத்தையாவும் அவரோடு இருந்தவர்களும் முன்பு எத்தனைப் பேரைப் பலி கொண்டனர் என்பது முரண்நகையானதாகும். இதே போன்று பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய மற்றொரு தளபதியான கிட்டு என்பவர் 1993 ஜனவரியில் தனது ஒன்பது சகபோரளிகளுடன் ஐரோப்பாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்தில் இந்தியக் கடற்படையால் வழி மறிக்கப்பட்டுச் சரணடையும் படி கேட்கப்பட்டனர். அத ற்கு மறுப்புத் தெரிவித்த அவர்கள், தமது கப்பலுக்கு வெடிவைத்துத் தற்கொலை செய்து கொண்டனர். கிட்டு தமது எதிராளிகளைக் கொல்லுவதில் ஈவிரக்கமற்ற ஒருவர். அவரும் கப்பலில் கருகிமாண்டார்.

புலிகள் இயக்கம் தன்னையொரு சக்திமிக்க இராணுவ இயக்கமாக்குவதில் விரைந்து செயற்பட்டதுடன் தனது பொருளாதர வலிமையை வளப்படுத்துவதில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முனைப்புக் காட்டியது. அவர்கள் பின்பற்றிய இந்திய விரோதமும், சுயசார் நிலை என்ற பரப்புரைகளும் தமிழ் மக்கள் மத்தியில் விட்டுக் கொடுக்காத உறுதியான இயக்கம் என்னும் ஒரு வகைத் தோற்றப்பாட்டை காட்டின. அத்தகைய நிலைப்பாடு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வளர்ந்ததையொட்டி, அவர்களைப் பணம் பறி க்கும் மரங்களாகப் பயன்படுத்துவதில் புலிகள் இயக்கம் முன்னின்றது. அதே வேளை புலிகள் இயக்கத் தலைமையானது அமெரிக்க மேற்குலக சார்பை உள்ளூரக் கொண்டியங்கும் ஒன்றாகவும் காணப்பட்டது. ஆனால் அதனை அவ்வியக்கம் வெளிப்படையாக ஒருபோதும் காட்டிக் கொள்ளவில்லை. இருப்பினும் முக்கிய சர்வதேச நிகழ்வுகளில் புலிகள் இறுகிய மௌனத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் தமது உள்ளார்ந்த ஏகாதிபத்திய சார்பு நிலையை வெளிப்படுத்தினர்.

இந் நிலையில் தெற்கில் அரசியல் நிலைமைகள் மேன் மேலும் மோசமடைந்து வந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர் ஆட்சி தொண்ணூறுகளின் நடுக்கூறுவரை நீடித்தது. நிறைவேற்று ஜனாதிபதியாக ஆர். பிரேமதாசாவின் வரவும் ஜே.வி.பியின் மீதான (1988-89) கொடூரத் தாக்குதலும் அவ்வியக்கத்தை மட்டுமன்றிச் சாதாரண இளைஞர் யுவதிகள் பொதுமக்கள் எனப் பலரையும் கடுமையாகப் பாதித்தது. அரசு இயந்திரமான பொலிசும் ஆயுதப் படைகளும் தமது அப்பட்டமான ஒடுக்குமுறையை உச்சப்படுத்திய அதே வேளை ஜே.வி.பியும் தமக்கு எதிரியானவர்களைக் கொல்வதில் முன்னின்றது.

அவர்களது தனிநபர் அழிப்பில் ஜனநாயக இடதுசாரி தொழிற்சங்கவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இப் பயங்கர நிலை ஜே.வி.பியின் அழிப்போடும் விஜேயவீராவினதும் ஏனைய தலைமைக் குழுவினரது கொலைகளோடும் ஓரளவு தாழ்நிலைக்கு வந்தது. அதேவேளை ஜனாதிபதி பிரேமதாச தனது எதிரிகளை அழித்தொழிக்கும் கொள்கையை முன்னெடுத்தார் என்பதை முன்னர் பார்த்தோம். ஜே.வி.பி. அழிப்பின் போது தெற்கில் சுமார் அறுபதினாயிரம் பேர் வரை கொல்லப்படவும் காணாமல் போகவும் செய்யப்பட்டனர். பிரேமதாசவுக்கும் புலிகளுக்கு







மிடையிலான பேச்சுவார்த்தை ஒரு கட்டத்தில் முறிவடைந்த பின்னர் ஜனாதிபதி பிரேமதாச புலிகள் இயக்கத்தால் 1993ம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அன்று பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க அரசியலமைப்பின் வழியாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். அடுத்து வரவிருந்த ஜனாதிபதி தேர்தலுக்கு ஒன்றரை வருடகால இடைவெளி இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தொடரான இருண்ட ஆட்சிக்கு எதிரான கடுமையான எதிர்ப் பிரசாரத்தை மேற்கொள்வதற்கு எதிரணிக் கட்சிகளுக்கு இக் காலம் ஒரு வாய்ப்பாக அமைந்து கொண்டது.

சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும், சந்திரிகா தலைமையிலான மக்கள் கட்சியும் ஏனைய பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தீவிரப் பிரசாரத்தில் மேலும் முன்சென்றன. அதற்கான சூழலை ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்ச்சியான ஃபாசிச ஆட்சியானது முன்னெடுத்து வந்தது. அவசரகாலச் சட்டமும் பங்கரவாதத் தடைச் சட்டமும் நாடு முழுவதும் கோலோச்சி வந்தது. அதனால் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடி மக்களை கொடிய அடக்குமுறைகளுக்கு ஆளாக்கியது. வடக்கில் பிரிவினைவாதப் பயங்கரவாதத் தையும் தெற்கில் ஜே.வி.பியின் தீவிரவாதத்தையும் அடக் குவதாகக் கூறியே ஐக்கிய தேசியக் கட்சியின் கீழான அரச இயந்திரம் தனது ஃபாசிச ஒடுக்குமுறைகளை நடாத்தி வந்தது.

இத்தகையச் சூழலில் 1994ல் தென் மாகாணத்திற்கும் மேல் மாகாணத்திற்குமான மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றன. பொதுசன ஐக்கிய முன்னணி சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் பெருவெற்றியை பெற்றது. சந்திரிகா குமாரதுங்க மேல் மாகாண முதலமைச்சராகவும், பின்னர் பாராளுமன்றத் தேர்தலின் பின் பிரதமராகவும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியாகவும் தெரிவாகினார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால இருண்ட ஆட்சிக்கு முடிவு கட்டிய பொதுசன முன்னணிக்குத் தலைமை தாங்கினார். தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதாகவும் யுத்தத்திற்கு முடிவு ஏற்படுத்துவதாகவும், மோசமடைந்து வந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதாகவும் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கினார். மனித உரிமைகளும் ஜனநாயகமும் பாதுகாக்கப்படுமெனச் சூளுரைத்தார். எதிர்க் கட்சியில் இருக்கும்போது எல்லா ஆளும் வர்க்க கட்சிகளும் வழங்கும் வாக்குறுதிகள் போன்றே பொதுசன ஐக்கிய முன்னணியின் சந்திரிகாவும் தாராளமாக வாக்குறுதிகளை வழங்கினார். மக்களும் வழமை போன்றே மாறிப் புள்ளடியிட்டு விரைவாகவே ஏமாற்றங்களையும் புதிய அடக்குமுறைகளையும் எதிர்கொண்டனர். ஜனாதிபதித் தேர்தலில் 1994ல் சந்திரிகா அம்மையார் 62 சதவீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். ஆனால் அந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த மக்கள் எதிர்நோக்கிய எந்தவொரு அரசியல் பொருளாதாரப் பிரச்சினையும் அவரது முதற் தடவையிலும் சரி இரண்டாவது தடவையிலும் சரி தீர்க்கப்படவே இல்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் சந்திரிக்காவிடம் இருந்து எதிர்பார்த்த இனப் பிரச்சினைக்கான தீர்வு முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ தரப்படவில்லை. இருப்பினும் சந்திரிகா அம்மையார் தேசிய இனப் பிரச்சினைக்கான முன்முயற்சிகளை தனது நம்பிக்கைக்குரிய உயர் வர்க்க தமிழ் புத்திஜீவிகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்தார். ஆயினும் அவருக்குப் பக்கத்தில் இருந்த பேரினவாதிகளும் எதிர்ப்புறத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியினரும் அவரது தீர்வுத் திட்டப் பொதிக்கு குழிபறித்துக் குழப்பியடிக்க முழுமுயற்சி செய்தனர். எதிர்மறை நிலையில் நின்று அவர்களுக்கு உதவுவது போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது வழமையான ஏமாற்றுத்தனங்கள் முலம் தமது இருப்பிற்கு வழிதேடும் கைங்கரியங்களில் இறங்கிக் கொண்டது.

சந்திரிகாவால் முன்மொழியப்பட்ட தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது. 2001ம் ஆண்டு, தீர்வுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்றத்தில் வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தீயிட்டுக் கொழுத்தினர். தற்போது தமிழ் மக்களின் காவலன் வேடமிட்டுத் தோற்றம் காட்டும் ரணில் விக்கிரமசிங்க, அன்று பாராளுமன்றத்திலே அதைச் சிரித்தவாறு பார்த்திருந்தார். அத்தகைய மனிதர் தான் இன்று தமிழ் மக்களுக்கு தீர்வு வேண்டுமென அடிக்கடி அறிக்கை விட்டும் குரல் கொடுத்தும் வருகிறார்.

அவ்வாறே புலிகள் இயக்கமும் காலத்தைக் கடத்தித் தம்மைப் பலப்படுத்தும் பல நிலை முயற்சிகளை முன்னெடுத்தது. அவர்களது பேச்சுவார்த்தையிலான காய் நகர்த்தும் தந்திரோபாயமானது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி தம்மைப் பலப்படுத்தி அடுத்தக் கட்ட இராணுவ நடவடிக்கைக்குச் செல்வதாகவே இருந்தது. அதற்கான பலநிலைப் பரப்புகளையும் செய்துகொண்டனர். அதே போன்று, ஆட்சி செய்துவந்த பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களும் அதன் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளை அவ்வப்போது ஏமாற்றி உரிய அடிப்படைகளில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது தட்டிக் கழித்தே வந்துள்ளனர். இவ்விரு தரப்புக்களதும் நிலைப்பாடுகளினூடாக அவரவரது வர்க்க நலன்களும் இருப்புகளும் ஆதிக்க அரசியல் போக்குகளும் பாதுகாக்கப்பட்டுவந்த அதேவேளை, இரு தரப்பு உழைக்கும் மக்களும் பலநிலைப் பாதிப்புகளையே பெற்று வந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பொதியானது, அதில் ஆரம்பத்தில் இருந்த உள்ளடக்க அம்சங்கள் திரும்ப திரும்ப வெட்டிக் கொத்திக் குறைக்கப்பட்டதால், இறுதியில் அர்த்தமற்ற வெறும் பொதியாகி விட்டது. அதே வேளை, புலிகள் இயக்கம் சிறிய கால இடைவெளிக்கு பின் தனது தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தது. அவ் வேளை சந்திரிகா தனது மாமனாரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான அனுருத்த ரத்வத்தயை பாதுகாப்பு அமைச்சராகவும் ஆக்கிக்கொண்டார். அவர், தனது இராணுவ கண்ணோட்டத்தில், புலிகளைப் பலமிழக்கச் செய்யமுடியுமென நம்பினார். அதற்கான இராணுவ வியூகங்களை உயர் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து வகுக்கலானார். மீண்டும் யுத்தம் தனது கோர முகத்தை வெளிக்காட்டியது. அந்த யுத்தத்திற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் "சமாதானத்திற்கான யுத்தம்" என்பதாகும்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி யுத்தத்தை முன்னெடுத்த அதே வேளை புலிகள் போராடுவதற்கான அழைப்பை விடுத்து, அதனை மூன்றாவது ஈழப்போர் என அழைத்தனர். திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தரித்து நின்ற கடற்படைக் கப்பலொன்றை வெடிவைத்து தகர்த்ததன் மூலம் அதற்கான முதற் தாக்குதலைத் தொடுத்தனர். அரசாங்கக் தரப்பிலும் புலிகள் இயக்கத் தரப்பிலும் ஒருவரையொருவர் ஏமாற்றியவாறு தத்தம் இராணுவ நிலைகளையும் அவற்றின் பலத்தையும் பெருக்குவதையே அடிப்படை நோக்காகக் கொண்டிருந்தனர். இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் அவ்வப்போது பல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ முன் நகர்வுகளை முன்னெடுத்தது. அவற்றை எதிர்கொள்வதில் புலிகள் இயக்கம் தனது இராணுவ உத்திகளையும் பலத்தையும் வெளிக்காட்டி வந்தது.

அடுத்த இதழில்

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தொழிற்சங்கங்களின் சீரழிவும் மாற்றுத் தொழிற்சங்கத்தின் தேவையும்

-மாக்ஸ் பிரபாஹர்-

**மலையகத் தொழிலாளர்களைப்** பொருத்தமட்டில் இன, மொழி, கலை, கலாசார, பண்பாட்டியற் கூறுகள் போன்றே தொழிற்சங்கச் செயற்பாடும் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த, இன்றியமையாத ஒன்றாய் இருந்து வருகிறது. அவ்வப்போது ஏறி எகிறும் விலைவாசிகளை ஜீரணித்துக்கொள்ள முடியாது, அன்றாடத் தேவைகளுக்காய் வாங்கும் அத்தியாவசிய (அரிசி, மா, பருப்பு, சீனி மற்றும் இதர) பொருட்களின் அளவுகளை குறைத்துக் கொண்டாலும் . தொழிற்சங்கத்துக்கான சந்தாப் பணத்தை மட்டும் சதமேனும் குறையாது செலுத்திவிடுவது அவர்களின் தொழிற்சங்கஞ்சார் ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் வெளிக்காட்டுகிறது. இதற்கான காரணம் என்னவெனில் தொழிற்சங்கம் என்பது இல்லாவிடில் தமக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து உரிமைகளும் கிடைக்காமல் போய்விடும் என்றதொரு நம்பிக்கையாகும். ஆனால் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஏராளமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காது மிகவும் சூட்சுமமாக அவற்றை மறுத்துத் தமது தரகுக் கூலியைப் பெற்றுக்கொண்டு நிகழ்த்தப்பட்ட காட்டிக்கொடுப்புகள் அவர்கள் அறியாததே.

**தொழிற்சங்கங்களின் நிலை**

சமகாலத்தில் மலையகத்தில் மட்டும் ஏறத்தாழ நாற்பது தொழிற்சங்கங்கள் இயங்குவதாக அறிகிறோம். இருந்த போதிலும் அவையனைத்துமே தொழிற்சங்கத்தின் அடிப்படை நோக்கங்களையும் கொள்கைகளையும் புறக்கணித்துவிட்டுத் தமக்கேயுரிய முதலாளித்துவ குணாம்சங்களை கட்டிக்காத்தவாறு வருமானம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றம் பெற்றுள்ளன. இந்தச் சாதகமான நிலைமையை நன்கு விளங்கிக்கொண்ட தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அன்றாட வேதனத்தைக் கூட்டிக்கொடுத்து இலாபத்தை இழப்பதைவிட சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற குறிப்பிட்ட சில தொழிற்சங்கத் தலைமைகளுடன் சேர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தமக்கு ஏற்புடைய தொகையொன்றைக் கொடுப்பதன் மூலம் சம்பளப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருகிறது. இது தவிரக், குறித்த தொழிற்சங்கத் தலைமைகளுக்குத் தாம் விரும்பிய வகையிலான 'சந்தோசங்களையும்' (அதாவது இலஞ்சத்தையும்) பெற்றுக் கொடுக்கிறது. இந்த அநியாயங்கள் போதாதென்று, தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாதென்ற சட்டத்தை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமும் அமுல்படுத்தி வருகின்றது.

தொழிலாளர் என்போர் எல்லாக் காலத்திலும் இந்த நாட்டின் வருமானத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக இருந்து வந்திருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். ஆகக்குறைந்தது இந்த உழைக்கும் வர்க்கத்தினருக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் இருப்பையும் தொடர்ச்சியான உழைப்பையும் பெற்றுக்கொள்ள இயலுமானதாக இருக்கும் என்ற அறிவு கூட இவர்களின் உழைப்பை உறிஞ்சி உடம்பு வளர்த்து பெருத்துக்கிடக்கும் முதலாளித்துவ முதலைகளுக்கு விளங்குவதில்லை. இந்த வேளையில் தான் மலையகத் தொழிலாளர்களின் நலனுக்காக தொழிற்சங்கமொன்றைத் தொடக்கி உண்மையாகவே அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த கோ. நடேசய்யரை நினைவுகொள்ள வேண்டியிருக்கிறது.

**ஆரம்ப தொழிற்சங்க நிலைப்பாடு**

முதன் முதலாக தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளைக் கோ. நடேசய்யரே மேற்கொண்டதாக அறிகிறோம். 1931ம் ஆண்டு தொழிற்சங்க செயற்பாடுகளை முன்னெடுத்த அவர் தோட்ட உரிமையாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் பாரிய தலையிடியாயிருந்தார். அதுவரை தொழிலாளர்களுக்கான வேதனத்தைக்கூட ஒழுங்காக வழங்காத தோட்ட உரிமையாளர்கள் நடேசய்யரின் தொழிலாளர் நலன்சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களின் சில முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்பட்டனர். தொழிலாளர்களைச் சுரண்டியும் ஏமாற்றியும் இலாபமீட்டிய முதலாளிகளுக்கும் தோட்ட உரிமையாளர்களும் இது மிகவும் கஷ்டமாக இருந்தது. தங்களின் முதலாளிய தர்மம் சிதைந்து போவதை விரும்பாத அவர்கள் நடேசய்யருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி அவரை தொழிலாளர்களிடமிருந்து பிரிக்கும் நரித்தனச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

நடேசய்யர் ஒரு பிராமணர், தொழிலாளர் வர்க்கத்தைச் சாராதவர், தன்னைத்தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே இருக்கின்ற உறவினைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என்றெல்லாம் தோட்ட நிருவாகம் குற்றஞ் சுமத்தியது. இவ்வாறு தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து அவதூறுகளுக்கும் முகங்கொடுத்த நடேசய்யர் தன் நோக்கத்திலிருந்தும், கொள்கையிலிருந்தும் கிஞ்சித்தும் விலகாது விடாப்பிடியாக இருந்தார்.

மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் நடேசய்யரால் தொடங்கப்பட்ட அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகள் குறிப்பிடத் தக்கவை. விசேடமாக மதுப் பழக்கம், சூதாட்டம், கடன்படல் போன்ற செயல்களில் தொழிலாளர்கள் ஈடுபடுவதைத் தடுத்தலும் மறுபுறத்தில் சிக்கனம், சுயசேமிப்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை ஊக்குவித்தலும் போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் தொழிலாளர்களை விழிப்படையச் செய்வதையே அச் சங்கம் தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

பேச்சாற்றலும் ஆங்கிலப் புலமையும் கொண்டிருந்த நடேசய்யர் மிகவும் சக்திவாய்ந்த தோட்ட உரிமையாளர்களுக்குப் பல வழிகளிலும் சவாலாக விளங்கியவராவார். தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தோட்ட உரிமையாளர்களின் அராஜகங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற தைரியத்தை அன்று தொழிலாளர்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தைச் சாராத அவர் தோட்ட உரிமையாளர்களின் தொழிலாளர் விரோத செயற்பாடுகளை எதிர்த்து நின்றார்.



அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக மலையகத்தில் இயக்கமுற்ற போர்க்குணங்கொண்ட இடதுசாரித் தொழிற்சங்கங்களின் பங்களிப்புகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சியின் லங்கா தோட்ட தொழிலாளர் சங்கம், செங்கொடிச் சங்கம், வெள்ளையனின் தலைமையிலிருந்த தேசிய தொழிலாளர் சங்கம் போன்றன குறிப்பிடத்தக்க வகையில் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டிய அமைப்புகளாக ஒரு காலத்தில் இருந்து வந்தன.

**இலங்கை இந்திய காங்கிரஸ்**

1939ம் ஆண்டு நேருவின் இலங்கை வருகையோடு இலங்கை இந்திய காங்கிரஸ் தொடக்கப்பட்ட போதிலும் அத் தொழிற்சங்கம் தொழிலாளர் அங்கத்துவம் பற்றிய ஆழமான சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. 1956ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் முறையே தொண்டமான், அஸீஸ் ஆகியோரின் தலைமைகளின் கீழ் இரண்டாக உடைந்தது. இங்கு முற்றுமுழுதான அரசியல் இலாபங் கருதித் தொழிற்சங்கம் ஒய்று இயங்கத் தொடங்கிய காலமும் இதுவே. அன்று தொடங்கி இன்று வரை, மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் முதலாளித்துவ நலன் சார்ந்த, மிகவும் பிற்போக்கான, நேர்மையான தொழிற்சங்கப் போராட்டங்களைக் காட்டிக்கொடுக்கின்ற ஒரு தொழிற்சங்கமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைக் குறிப்பிடலாம்.

பின் வந்த காலங்களிற் கருத்து முரண்பாடுகள் காரணமாக இ.தொ.கா.விலிருந்து அவ்வப்போது சில முக்கிய உறுப்பினர்கள் வெளியேறித் தங்கள் பங்கிற்குத் தொழிற்சங்கங்களைத் தொடங்கி இந்த உழைக்கும் வர்க்கத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர். ஆரம்ப காலத்தில் தொழிலாளர் நலன்களை முன்னிலைப்படுத்தி இயங்கிய தொழிற்சங்கங்களோடு இன்றைய தொழிற்சங்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது முற்று முழுதாக அதன் எதிர்ப்பக்கத்திலேயே அவை இருக்கின்றன என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. காரணம், தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாது அவர்களைத் தொழிற்சங்க ரீதியாகப் பிரித்தாளும் தந்திரங்களைக் கையாளுதல், தொழிலாளர்களை ஏமாற்றுதல், உழைக்கும் வர்க்க ஒற்றுமையைக் குலைத்தல், மதுப் பழக்கத்தை ஊக்குவித்தல் என்பனவற்றுக்கும் மேலாக, ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய மலையகத் தொழிலாளர்களின் இருப்பையும் பண்பாட்டையும் சிதைக்கின்ற முகவர் அமைப்புக்களாகவும் அவை செயற்படுகின்றன. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் தனித்துவம் என்று கூறிக்கொண்டு மண் காக்க வரும் மைந்தர்களாக இருக்கட்டும், புதுயுகம் படைக்கவென்று புறப்பட்ட இளைய தலைவர்களாக இருக்கட்டும், இறக்குமதி செய்யப்பட்ட இளைய தளபதிகளாக இருக்கட்டும்— யாவருமே சாராயமென்ற சரக்கைத் தோட்டங்களுக்குள் இறக்கித்தான் சாதனைகள் புரிந்தார்கள். அந்த வகையில் எல்லாருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற கருத்து இவர்களுக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

**தொழிலாளர்களும் புதிய தொழிற்சங்கமும்**

இலங்கையில் பெருந்தோட்டங்களின் வளர்ச்சியில் தொழிலாளர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற இவர்கள் அதியுச்சச் சுரண்டலுக்கு ஆளாவது தொழிற்சங்கத் தலைமைகள் என்று சொல்லிக் கொள்கின்ற ஆளும் வர்க்க அடிவருடிகளாலேயே. ஆயின், தொழிலாளர் வர்க்கத்தின் புதிய தலைமுறை இவ்வாறான கண்ணாமூச்சிக் கதைகளுக்கெல்லாம் காதுகொடுக்காது பிழைக்கும் வழியைத் தேடவேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

தொழிற்சங்கம் என்பது என்ன? அதன் கடமைகள் யாவை? தொழிற்சங்கம் என்பது முதலாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகத் தொடங்கப்படுவதல்ல. அது தொழிலாளர்களின் நலனுக்காகத் தொடக்கப்படும் ஓர் தொழிலாளர் அமைப்பாகும். அடிப்படையில், தொழிலாளர்க ளின் நலன்களை முன்னெடுக்கின்ற ஓர் அமைப்பாகவும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிலாளர்களை ஒன்றிணைக்கின்ற அமைப்பாகவும் அது இருக்க வேண்டியது அவசியம்.

காலத்திற்கு காலம் இப்படியெல்லாம் கதை சொல்லிக்கொண்டு தொடக்கப்பட்ட எத்தனையோ புதிய தொழிற்சங்கங்கள், சிறுகால நகர்வில் தம்மையும் தாம் முன்னெடுக்க முனைந்த அமைப்பின் கொள்கைகளையும் மறந்து வழமையான பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வரலாறுகளை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் கூறும் கதைகள் வேடிக்கையானவை. அதாவது, தாம் மக்களை ஏமாற்றாது நேர்மையாகச் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் மக்கள் தம்மை அடையாளம் கண்டு கொள்ளாது ஏனைய ஏமாற்று தொழிற்சங்கங்களில் இணைந்துகொண்டு தம்மைப் பலவீனப்படுத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். இந்தக் கூற்றில் எத்தனை சதவீதம் உண்மை இருக்கின்றது என்பது தெரிந்தவர்களுக்கு தெரியும். எனினும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்துவதை விடுத்து, எல்லாவிதமான சவால்களையும் எதிர்கொண்டு அந்த உழைக்கும் வர்க்கத்தினரின் நலனுக்காய் இயங்கக்கூடிய ஒரு மாற்றுத் தொழிற்சங்கம் இன்றைய சூழலில் இன்றியமையாததாகிறது. எனவே மாற்றுத் தொழிற்சங்கமொன்று உருவாகிப், பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் தொழிலாளரின் வகிபாகம் என்ன என்பதை உணர்த்தித், தோட்ட உரிமையாளர்களினதும் முதலாளிமார் சம்மேளனத்தினதும் அராஜகங்களை தோற்கடித்து இந்த அப்பாவிக் கூட்டத்தின் விடுதலைக்காய்க் கடுமையாக உழைக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

**மாற்றுத் தொழிற்சங்கம் கட்டப்படவேண்டும்**

மாற்றுத் தொழிற்சங்கமொன்று தேவை எனினும், தம் வர்க்க நலன்களை முன்னிலைப்படுத்தி நேர்மையாகச் செயலாற்றக்கூடிய தொழிற்சங்கங்களை அடையாளம் கண்டு அவர்களோடு இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் ஒவ்வொரு தொழிலாளியின் முன்னேயும் இருக்கிறது. சிறு குழுக்களாகப் பிரிவது சிறுசிறு வருமதிகளுக்காகவும் சுயலாபத்திற்காகவும் விலைபோவது போன்ற செயற்பாடுகளை முற்றிலும் தவிர்த்து மாற்றுத் தொழிற்சங்கத்திற்கு ஒத்துழைப்பை நல்குவதே ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்திற்கு பெரிதும் நன்மை பயக்கும்.

www.padippakam.com



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 33

## இடதுசாரி இயக்கத்தின் சீரழிவும் சரிவும்

1963ம் ஆண்டில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் ஏற்படுத்திய புதிய நம்பிக்கை அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் சமசமாஜக் கட்சி ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியில் இணைந்ததோடு தகர்ந்தது என்றால், 1965 முதல் 1970 வரையிலான காலம் பாராளுமன்ற இடதுசாரி அரசியலின் தொடரச்சியான சீரழிவை அடுத்தடுத்து வெளிப்படுத்திய ஒரு காலமாக இருந்தது.

யூ.என்.பி. அரசாங்கம் மக்கள் மீது சுமைகளை ஏற்றும் என்பது பலரும் எதிர்பார்த்திருந்த விடயமே. இலங்கை நாணயம் 1967ல் 20% மதிப்பிறக்கப்பட்டது. பின்பு மறைமுகமான மதிப்பிறக்கம் ஒன்று (ஏறத்தாழ 40%) உலக வங்கியின் வற்புறுத்தலின் பேரில் 1968ல் மேற்கொள்ளப்பட்டது. ஆளுக்கு 2 கொத்தாக (2 கிலோ அளவில்) இருந்த பங்கீட்டரிசி ஒரு கொத்து குறைக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது. விலைவாசிகள் வேகமாக உயர்ந்தன. வேலையின்மையும் அதிகரித்தது. பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய அரசாங்கம் முன்னெப்போதும் இல்லாதவாறு மிகப் பெரிய அளவில் உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் இருந்து கடன் வாங்கியது. அதை இயலுமாக்கவும் அமெரிக்க "உதவி"யைப் பெறவும் முன்பே தேசியமயமாக்கப்பட்ட எண்ணெய்க் கம்பனிகளுக்கு யூ.என்.பி. அரசாங்கம் நட்ட ஈடு வழங்கியது. இக்கடனும் அமெரிக்க உதவியும் இலங்கையின் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியத்துடன் மேலும் இறுக்கமாகப் பிணைத்தன. இவற்றின் பாதகமான விளைவுகளால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமைகளின் பயனாக 1967ல் தனியார் துறையிலும் 1968ல் அரச துறையிலும் பொது வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இலங்கையின் அயற் கொள்கையும், 1956ற்கு முன்பு போல, மேற்குலகச் சார்பானதாகியது. சோஷலிச நாடுகளுடனான உறவில் சுமுக நிலைப் பேணப்பட்ட போதும், வியற்நாம் போர் போன்ற விடயங்களில் அரசாங்கம் மேற்குலகைச் சார்ந்து நின்றதையும் நாட்டில் அமெரிக்கச் செல்வாக்கை வலுப்படுத்துகிற முயற்சிகள் வலுப்பட்டதையும் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சி யூ.என்.பியுடன் இணைந்த போது பாராளுமன்ற இடதுசாரிகள் ஸ்ரீ.ல.சு.க. பேரினவாதிகளுடன் சேர்ந்து பாராளுமன்ற அவையில் இனவாதக் கூச்சலிட்டமை, அடுத்து வரவிருந்த கேவலமான ஒரு நிகழ்வுக்குக் கட்டியங் கூறியது. பண்டாரநாயக்க செல்வ நாயகம் உடன்படிக்கையை எதிர்த்து யூ.என்.பி. எப்படிப் பிரசாரங்களை முன்னெடுத்ததோ, அதே விதமாக, ஸ்ரீ.ல.சு. கட்சியும் நடந்து கொள்ளும் என்பது எவரும் எதிர்பாரத்திருக்கக் கூடியதே. தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடத் தீராமல் வைத்திருப்பதில் பேரினவாதக் கட்சிகளுக்கு எப்போதும் லாபம் இருந்தது. யூ.என்.பி. ஆட்சி அமைக்கத் தமிழரசுக் கட்சி உதவியதற்காகத் தமிழ் மக்களின் மொழியுரிமையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மறுத்த காரணம் வெறும் அரசியல் வன்மம் மட்டுமே. பண்டாரநாயக்க கொண்டு வந்த தமிழ் மொழி (விடே ஏற்பாடுகள்) சட்டத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் 1966 ஜனவரியில் அறிமுகப்படுத்திய சட்டவிதிகளை எதிர்ப்பதற்கு ஒரு இடதுசாரிக்கு எவ்விதமான நல்ல காரணமும் இருந்திருக்க முடியாது. எனினும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் 1966 ஜனவரி 8ம் திகதி ஸ்ரீ.ல.சு.க. முன்னெடுத்த எதிர்ப்பு ஊர்வலத்திற் பங்குபற்றியதுடன் மிகக் கேவலமான இனவாத சுலோகங்களையும் கூவினர். அவர்களுடைய தொழிற் சங்க அமைப்புகளும் அந்த இழிசெயலில் ஈடுபட்டமை தொழிலாளர் வர்க்க ஐக்கியத்திற்கு ஒரு பாதகமான அடியாகும். அதில் ஜே.வி.பி. நிறுவகரான விஜேவீர பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். மாக்சிய லெனினிசக் கட்சி இளைஞர் அணி தலைமைக் குழுவிலிருந்த விஜேவீர பேரினவாத ஊர்வலத்தை ஆதரித்துச் செயற்பட்டதற்காக அக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுப் பின்னர் கட்சியில் இனவாத அடிப்படையில் பிளவை ஏற்படுத்தியதும் பாராளுமன்ற இடது சாரிகளின் தவறான போக்குகளின் துணை விளைவுகளில் ஒன்று எனலாம்.

இடதுசாரிகளின் வர்க்க விசுவாசத்தையும் புரட்சிகர அரசியலையும் சோதிக்கும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று சாதியத் தீண்டாமைக்கு எதிராக 1976 ஒக்றோபரில் முன்னெடுக்கப்பட்ட எழுச்சி இயக்கமாகும். இன்னொன்று 1969 மே தினமும் வெசக் தினமும் ஒரே நாளில் அமைந்த போது மே தினத்தில் ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்த அரசாங்கம் தடை விதித்த போது கட்சிகள் எடுத்த நிலைப்பாடாகும்.

சாதிய ஒடுக்குமுறை என்பது தென்னாசியாவிற்குப் பொதுவானது என்றாலும் அதன் உக்கிரம் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்றது. நகரச் சூழலை விடக் கிராமச் சூழலில் (குறிப்பாக விவசாயம் சார்ந்த சூழலில்) அது தீவிரமாக இருப்பதனைக் காண்கிறோம். 1957ம் ஆண்டு சாதிப் பாகுபாட்டிற்கு எதிராக இயற்றப்பட்ட சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தால் பெரிய மாற்றம் எதையும் கொண்டுவர இயல வில்லை. 1956க்குப் பின்பு தென்னிலங்கையில் சாதிய ஒடுக்குமுறை நெகிழ்வுற்றாலும் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருந்து வந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதி யத் தீண்டாமை பல்வேறு தளங்களிற் தளராமற் தொடர்ந்தது. குடாநாட்டிற் பொது இடங்களில் தீண் டாமை வலுவாக இருந்தது. அதற்கு எதிரான போராட்டம் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. அம் முன்னெடுப்பிற்கான தலைமைத் துவமும் வழிகாட்டலும் "சீனப்பிரிவு" எனப்பட்ட மாக்சிய லெனினிய கம்யூனிஸ்ற் கட்சியால் வழங் கப்பட்டது. உயர் சாதியினரின் அடாவடித்தனங்களுக்கும் வன் முறைக்கும் பணிவதில்லை என்ற முடிவைப் பராளுமன்ற இடதுசாரிகள் விரும்பவில்லை. அதே வேளை, சாதியத் தீண்டாமையை ஒழிப்பதற்கான மாற்று வழி எதையும் காட்ட அவர்களால் இயலவில்லை. எனவே அவர்கள் தீவிரவாத எதிர்ப்பு, வன்முறை எதிர்ப்பு என்பன போன்ற பேர்களில் தீண்டமை ஒழிப்பு வெகுசன இயக்கத்துக்குக் குழிபறிப்பதில் ஈடுபட்டனர். அவர்கள் பாராளுமன்றப் பாதையில் சீர்திருத்த சலுகை அரசியல் நடைமுறைக்குப் பழக்கபட்டமையே அதற்கான காரணம் எனலாம்.

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் அதி முக்கியமான போராட்டமாக மாவட்டபுரம் கோவில் நுழைவுப் போராட்டம் பலராற் கூறப்படுகிறது. ஒவ்வொரு கிராம மட்டத்திலும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட வெகுசனப் போராட்ட அரசியலும் சாதி ஒடுக்குமுறையை முறியடிக்க வர்க்க அரசியலைக் கருவியாக கொண்டிருந்தமையுமே அந்த இயக்கத்தின் உண்மையான முக்கி யத்துவமாகும். 1970க்குப் பின்னரும் தொடர்ந்த தீண்டமை ஒழிப்பு வெகுசன இயக்கத்துக்கு, 1947க்குப் பின்பு வடபுலத்தில் மாக்சிய அரசியலுக்கு மக்களின் ஆதரவை வென்றதில் முதன்மை யான ஒரு பங்கு இருந்தது.

இக் காலப்பகுதியில் மலையகத்திலும் அரசியல் விழிப்புணர்ச்சி வலுப்பெறத் தொடங்கியமை கவனத்திற்கு உரியது. இ.தொ.காவின் காட்டிக் கொடுப்பு அரசியலுக்கு முக்கிய சவாலாகச் செங்கொடிச் சங்கம் (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்) தொழிலாளர்களுக்கு அரசியல் அறிவூட்டவும் போராட்டங்களை வர்க்க அடிப்படையில் முன்னெடுக்கவும் உறுதியாகச் செயற்பட்டது.

சீனாவில் பண்பாட்டுப் புரட்சி ஒன்று முன்னெடுக்கப்பட்ட காலமாகவும் அக்காலம் அமைந்ததால், மக்கள் அரசியல், மக்கள் யுத்தம் என்ற கருத்துக்கள் இடதுசாரி இயக்கங்களுள் விரிவாகப் பேசப்பட்ட காலமாகவும் அது அமைந்தது. அத்துடன் தென் வியற்நாமில் அமெரிக்கா தனது போரையும் மனித உரிமை மீறல்களையும் உக்கிரப்படுத்திய அதேவேளை, வியற்நாமிய விடுதலை இயக்கம் மக்கள் யுத்தத்தை முன்னெடுத்தது. ஒரு புத்த பிக்குவின் தீக்குளிப்பு உட்படப் பல எதிர்ப்பு நடவடிக் கைகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இலங்கையிலும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்பாட்டங்கள் வலுப்பெற்றன.

யூ.என்.பிக்கு எதிரான மக்கள் உணர்வும் சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய விரோத விடுதலை இயக்கங்கள் எழுச்சிபெறத் தொடங்கியமையும் இலங்கையில் இடதுசாரி இயக்கத்தை மீண்டும் வலுப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நி லையை உருவாக்கியிருக்க வேண்டும். எனினும் மாக்சிய லெனினியவாதிகள் மட்டுமே மலையகத்தின் சில பகுதிகளிலும் வடக்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் மூலமும் மக்களை அரசியல் மயப்படுத்துவதில் அக்கறை காட்டினர். இரண்டு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் அடுத்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கவுடன் கூட்டணி அமைப்பதைப் பற்றிக்கவனங் காட்டியதால் தொழிலாளர் வர்க்க அரசியலையும் வர்க்க நிலைப்பாட்டையும் மேழும் நெகிழவிட்டனர்.

1969ம் ஆண்டு வெசக் கொண்டாட்டமும் மே தினமும் ஒரே நாளில் வந்த போது, அரசாங்கம் மே முதலாம் திகதி மே தின ஆர்பாட்டங்களை நடத்தத் தடை விதித்தது. பாராளுமன்ற இடதுசாரிகள் அதை எதிர்ப்பின்றி ஏற்று, மே தின ஆர்பாட்டத்தை மறுநாள் நடத்த உடன்பட்டனர். மே தினத்திற்கும் புத்த மதத்திற்கும் ஒருவித முரண்பாடும் இல்லை என்றும் மே தினம் தொழிலாளர்களின் புனித நாள் என்றும் வலியுறுத்தி வெசாக் கொண்டாட்டங்களுக்குத் தடையின்றி மே தினத்தில் தமது ஆர்பாட்டங்களை நடத்த அனைத்துத் தொழிற் சங்கங்களும் முடிவெடுத்திருந்ததால் அது மக்களை வென்றெடுக்க உதவியிருக்கும். ஆனாற் பாராளுமன்ற இடதுசாரிகளின் சரணாகதி, பௌத்த அரசியலின் எழுச்சிக்கே உதவியது. இந் நிலையில் மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே மே தினத்தை உரிய நாளிற் கொண்டாட முடிவு செய்தது.

இவ்வாறு மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சி தனித்து நின்றமை அரசாங்கத் தரப்பிற்கு அதை அடக்குவதற்குத் துணிவூட்டியது. ஆதை விடவும் அக் கட்சியின் தலைவர் சண்முகதாசன் ஒரு தமிழர் என்பதும் அரசாங்கத்திற்கு ஒரு வசதியாயிற்று. மற்ற இடதுசாரிகள், தாங்கள் மே தின விடயத்தில் விட்டுக் கொடுத்த போதும், மே முதலாம் திகதி கொண்டாடும் உரிமை எவருக்கும் உண்டு என்பதை வலியுறுத்தியிருக்கலாம். மாறாக அவர்கள் ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான நட்பையும் தேர்தல் கணிப்புக்களையும் கருதி அவ்வாறு செய்யவில்லை.

கொழும்பில் மாக்சிய லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் மே தின ஊர்வலத்தைத் தடுக்கப் பொலிசாருக்கு முடிந்த போதும், பெருந் திரளானோர் கட்சிப் பணிமனையில் திரண்டு கூட்டம் நடத்துவதைத் தடுக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் வலைக்குள் சிக்காமல் தொழிலாளர்கள் ஊர்வலத்திற் பங்கு கொண்டதுடன் கூட்டத்தையும் நடத்தினர். ஊர்வலத்தின் போது, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் முன்னால் தாங்கள் பின்வாங்க நேரிட்டதற்கு பழிவாங்குகின்ற தோரணையிற் பொலிசார் கடுந் தாக்குதல் தொடுத்துக் கட்சியின் முக்கிய தோழர்கள் பலர் கடுமையாக தாக்கப்பட்டபோதும், ஊர்வலமும் கூட்டமும் வெற்றிகரமாக நடந்து முடிந்தன. இது மக்கள் திரளின் வலிமையை உணர்த்திய ஒரு நிகழ்வு என்பதுடன் வடக்கிற் புரட்சிகர அரசியலுக்கு தென்பூட்டுவதாகவும் அமைந்தது.

மறுபுறம், ஏற்கெனவே தேசிய முதலாளியத்துடன் சமரம் என்ற நிலைப்பாட்டிலிருந்த பிரேம்லால் குமாரசிரி கட்சியிலிருந்து 1965ல் விலகியதன் பின்பு, இனவாத அரசியற் கண்ணோட்டத்தை முன்வைத்து அக் கட்சி இளைஞர்களிடையே தன்னை வளர்த்துக் கொண்ட விஜேயவீர, 1966ல் விலகியதும் சண்முகதாசனுக்கு எதிரான பேரினவாதப் பிரசாரத்தில் கெனமன்-மெண்டிஸ் தலைமை இறங்கியதையும் வைத்து நோக்கும் போது, மே தினம்-வெசாக் முரண்பாட்டில் அக் கட்சியின் நிலைப்பாடு அதைத் தென்னிலங்கையிற் பலவீனப்படுத்த உதவியது எனக் கூறலாம். அக் கட்சி தென்னிலங்கையில் புரட்சிகர அரசியலைப் போதியளவில் முன்னெடுக்க தவறியமை மேலும் அதற்குப் பங்களித்தது.

எவ்வாறாயினும், 1965-70 காலம் பொதுவாகவே சிங்கள மக்கள் நடுவே இடதுசாரிகளின் சரிவைத் துரிதப்படுத்திய காலம் எனலாம்.

## பெருந்தோட்டக் கம்பனிகள் நடாத்தும் சூறையாடல்கள்

அரசாங்கத்திடமிருந்து நீண்டகாலக் குத்தகைக்குப் மலைய பொருந் தோட்டங்களை வாங்கிக்கொண்ட கம்பனிகள் தோட்டங்களில் அரங்கேற்றி வரும் அராஜகங்கள் கொஞ்ச நஞ்சமானதல்ல. அந்த வகையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் சில நடவடிக்கைகளால் தோட்டங்கள் மிகவும் வளமிழந்து, செழிப்பற்றுப்போகும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் பழைய தேயிலைத் தொழிற்சாலைகளை உடைத்து அவற்றிலிருக்கின்ற இரும்பு, இயந்திர தளபாடங்கள் மற்றும் தகரங்கள் போன்றவற்றை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்தல்; தோட்டங்களில் இருக்கின்ற மரங்களை வெட்டி விற்பதனூடாக கிடைக்கின்ற கோடிக்கணக்கான ரூபாய்களை அபகரித்தல், பெரும்பான்மை தீய சக்திகளிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு தோட்டக் காணிகளை விட்டுக்கொடுத்தல்; சட்ட விரோதமாக மாணிக்கக்கற்கள் அகழ்வதற்கு ஒத்துழைத்து பணம்பெறல் போன்ற திட்டமிட்ட சட்டவிரோத செயற்பாடுகளை தோட்ட நிர்வாகங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக நன்கு பருவமடைந்த கருப்பந் தேயிலை (ரேப்பன்றைல்) மரமொன்று இன்றைய நிலை யில் எழுபத்தைந்தாயிரம் தொடக்கம் ஒன்றரை இலட்சம் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தோட்டங்களை குத்தகைக்கு எடுத்திருக்கும் இந்தக் கம்பனிகள் தொழிற்சாலைகளை மூடுவதனூடாக தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை இல்லாமல் செய்கின்றன. அதேநேரத்தில் நான்கு அல்லது ஐந்துக்கும் மேற்பட்ட தோட்டங்களில் சேகரித்த தேயிலைக் கொழுந்துகளை மத்தியில் இருக்கின்ற ஒரு தொழிற்சாலையை தெரிவுசெய்து மிகக் குறைந்த தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தி குறைந்த கூலியைக் கொடுத்து இரவு பகலாக அவர்களின் உழைப்பை உறிஞ்சுகின்றன. இதனால் பல தோட்டங்களில் தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடிய நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பில்லாமல் போகின்றது.

இப்படி இலாபத்தை மட்டுமே ஒரே நோக்கமாகக் கொண்டு செயலாற்றிவரும் தோட்டக் கம்பனிகள் தேயிலைச் செடிகளுக்கு உரமிடல், மருந்தடித்தல், பாசிகளை அகற்றுதல் போன்ற எதுவித செயற்பாடுகளையும் முறையாக மேற்கொள்வதில்லை. ஒரு கால கட்டத்தில் போதுமானளவு விளைச்சலைப் பெற்றுக் கொடுத்த அநேகமான மலைகள் இந்தத் தோட்டக் கம்பனிகள் கையேற்றதன் பின்னர் மூடப்பட்ட மிக மோசமான வரலாறுகளும் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் நாம் மேலே குறிப்பிட்டதைப்போல இலாபம் ஈட்டுவதையே மட்டுமே முக்கிய நோக்கமாக கொண்டு தோட்டக் கம்பனிகள் செயற்படுவதே. இனிவரும் காலங்களில் தமது மண்ணையும் வளங்களையும் பாதுகாத்துக் கொள்வதில் மலையகத் தொழிலாளர்கள் அதிக அக்கறை செலுத்தவேண்டி இருக்கிறது. இல்லாவிடில் சிறியதொரு கால நகர்வில் எமது இருப்பையும் வாழ்வையும் இழக்கக்கூடிய அபாயங்களை நாம் சந்திப்பதைத் தவிர்க்கமுடியாது போய்விடும்.

-அப்புத்தளை நிருபர்-

படிப்பகம்

www.padippakam.com



# ஆலமரம் வெட்டும் அரசியல்

'மரந் தான், மரந் தான் எல்லாம் மரந் தான் மறந்தான், மறந்தான் மனிதன் மறந்தான்'

என்று ஒரு கவிஞன் பாடியது மலையகத்தில் அபிவிருத்தி, முன்னேற்றம் என்ற பேரில் வெட்டியழிக்கப்படும் மரங்களைக் காணும்போது ஞாபகம் வருகிறது. மனிதத் தேவைகளுக்காக வளர்க்கப்படும் மரங்களை வெட்டுவது தவிர்க்க முடியாது. எனினும் அவ்விடங்களில் அல்லது வேறிடங்களில் அதற்கு நிகராகவோ, அதிகமான அளவிலோ மரக்கன்றுகள் நடப்படவேண்டும்.

மலையகத்தில் அண்மைக்காலமாக என்றுமில்லாதவகையில் மரம் வெட்டுதல் அதிகரித்துள்ளது. அவற்றுக்கான மீள்நடுகை மிகவும் மந்தகதியிலேயே இடம் பெறுகின்றது. ஏற்கனவே இயற்கைச் சூழலின் சமநிலை பாதிப்படைந்திருக்கும் நிலையில், இத்தகைய நிலைமைகளால் எதிர்காலத்தில் உழைக்கும் மக்களின் வாழ்க்கையைப் பல்வேறு வழிகளிலும் கேள்விக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

கம்பனிகள் கையேற்றதன் பின், பெருந்தோட்டப் பகுதிகளில் மண்ணரிப்பினைத் தடுப்பதற்கோ விளை மண்ணை நீண்டகாலத்திற்குப் பேணவோ மண்ணின் போசாக்கைப் பேணவோ நடவடிக்கைகளை எடுப்பதே இல்லை. மேலும், சரிவுப்பாங்கான இடங்களில் மரங்களை நடுவதிலும் அக்கறையற்றுத் தோட்ட நிர்வாகங்கள் இருக்கின்றன. அண்மைக் காலங்களிற் பெய்யும் கடும் மழையும் வீசும் கடுங் காற்றும் மலையகத்தில் இயற்கையழிவை வெகு இலகுவாக நடாத்தி முடித்திருக்கின்றன. எதிர்வரும் நாட்கள் மிக அழிவு மிகுந்தவை என்பதை மலையக மக்கள் உணரவேண்டும். ஆதனைத் தோட்ட நிர்வாகத்திற்கு வலியுறுத்திப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டும்.

மறுபுறம் மலையக மக்களின் அடையாளங்களைப் பேரினவாத ஆதிக்க அரசியல் சக்திகள் இல்லாமல் செய்வதில் பல வழிகளிலும் பெரும் பிரயத்தனங்களை எடுத்து வருகின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களை விட்டு வெளியேற்றுவது அல்லது அவர்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள பாரம்பரிய அடையாளங்களை அழிப்பது என்ற வழிமுறைகளில் அவை மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றில் ஆலமரங்கள் அழிக்கப்படுவது முக்கியமானது. கிராமிய வழிபாட்டு முறைகளில் ஆலமரங்கள் தனியான பெறுமானங்களை கொண்டிருக்கின்றன. ஆலமரம் என்பது சிறுகாய்களை உற்பத்தி செய்யும் பெரிய மரம் என்பதாக மட்டும் பார்க்கப்பட்டால் அது பிழையானதாகும். ஆலமரம் பிரமாண்டமான தோற்றத்துடன் கிளைகளைப் பரப்பி வெய்யிலையும் மழையையும் புயலையும் துச்சமென எதிர்கொண்டு தன் வலிமையை நிமிர்ந்து சொல்லும். இருப்பின் குறியீடாகப் பரந்து விரியும் கிளைகளைப் போலவே ஆழ ஊன்றி அகன்று விரியும் வேர்களையும் கொண்டது. அடக்கப்படும் ஒரு சமூகம் அதன் அடியில் தன் இறைவனை வைத்து வழிபடுவதும் அல்லது அதனையே கடவுளாக வழிபடுவதும் நம் நாட்டு அரசியலை 'விளங்கி' அரசியல் செய்பவர்களுக்கு நன்றாகவே விளங்கும். அதை நிலைப்பின் குறியீடாக பார்த்தால் அடக்குவோருக்கு அது அச்சுறுத்தல்.

தென்னிந்தியாவிலிருந்து மலையக மக்களின் மூதாதையர் வந்தபோது எடுத்து வந்த நம்பிக்கைகள் சடங்குமுறைகள் கலைகள் என்பன உழைக்கும் மக்களுடையவை. கூட்டுவாழ்வுக்கும் தைரியத்துக்கும் வலிமைக்கும் அடிப்படையாக அமைந்தவை. மலையகத்தில் மக்கள் குடியமர்த்தப்பட்ட எல்லா பிரதேசங்களிலும் ஆலமரங்கள் உள்ளன. அதற்கடியில் கிராமிய தெய்வங்கள் இருக்கின்றன. இவ் ஆலமரங்கள் மக்கள் கூட்டம் வாழ்ந்ததற்கான அடையாளத்தைப் பறை சாற்றி நிற்கின்றன. தாம் நம்பும் 'இறையோடு' நம்பிக்கையோடு இணைந்திருக்கும் இப் பெருமரங்களின் கிளைகளோ வேர்களோ கூடப் பெரும் பூஜைகளுக்குப் பின்பு தான் அவர்களால் வெட்டப்படுகின்றன. ஆனால் இன்றைய நிலை வேறு. அபிவிருத்தி என்ற பெயரில் ஈவிரக்கமற்று மொட்டையடிக்கப்படும் ஆலமரங்கள் அதிகம். அத்தோடு விஷ ஊசியேற்றல் மூலம் தானாகக் காய்ந்து உதிர்ந்து சரியும் விதத்திலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் நாம் வழிபடும் மாடசாமியும் அம்மனும் ரோதமுனியும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்— நம் 'தலைவர்களைப்' போல.

**வே. தினகரன்**

# இந்தியாவில் மனித வேட்டையாடும் இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டம்

,காந்தி தேசம் என அழைக்கப்படுவது இன்றைய இந்தியா. அதனை அகிம்சை பிறந்த நாடு என்றும் வர்ணித்து எழுதுகின்றார்கள். ஆனால் இந்திய ஆளும் வர்க்கம் தனது அரசு யந்திரமான ஆயதப் படைகள் மூலம் அந்நாட் உரிமையில் கேட்டு நிற்கும் மக்களை எவ்வாறு ஒடுக்கி கொன்றொழித்து வருகிறது என்ற உண்மையை நமது நாட்டு ஊடகங்கள் வெளிக் காட்டுவதில்லை. கடந்த முப்பத்தொரு ஆண்டுகளாக இந்திய ஆளும் வர்க்கம் மணிப்பூர் உட்பட வடகிழக்கு மாநிலங்களிலும் காஸ்மீரிலும் இப்போது மாவோயிஸ்ட்டுகள் போராடிவரும் பிரதேசங்களிலும் ஒரு காட்டு மிரண்டிச் சட்டத்தை நடை முறை ப்படுத்தி வருகிறது. அது ஆயுதப்படை களுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் (AFPSA – அ.'.ப்சா) என்பதாகும். இச்சட்டத்தின் கீழ் யாரை வேண்டு மானாலும் எங்குவைத்தும் கைது செய்யலாம். எங்கு கொண்டு செல்ல வேண்டுமானாலும் கொண்டு செல்லாம், சுட்டுக் கொல்லலாம், எவருடைய வீட்டிற்குள்ளும் நுழையலாம், பெண்களை இராணுவம் என்ன செய்யுமோ அத்தனையையும் செய்யலாம் இறுதியில் அப்பெண்களை கொலை செய்யலாம். இவற்றுக்கு எற்க காரணத்தையும் சொல்லத் தேவையில்லை. வெறும் சந்தேகம் என்ற ஒன்றே போதுமானதாகும். மனித உரிமை அமைப்புகளோ நீதி மன்றங்களோ ராணுவத் தினரை எவ்வகையிலும் தண்டிக்க இயலாது. மணிப்பூரில் மட்டும் 1980 தொடக்கம் 2004 வரை இருபத்துனான்காயிரம் பேர் வரைக் கொல்லப்பட்டுள்ளனர். 2004ல் தங்கம் மனோரம்மா என்ற பெண் ராணுவத்தினரால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இதனையடுத்து "இந்திய ராணுவமே எங்களை வன்புணர்ச்சி செய்" என்று எழுதப்பட்ட துணியுடன் பெரும் தொகையான பெண்கள் ராணுவ நிலையமான காவுலா கோட்டை முன்பாக நிர்வான போராட்டம் நடாத்தி




காந்தி தேசத்தின் ஆளும் வர்க்கத் தின் ஜனநாயக முகமூடியை கிழித்தெறிந்தனர். இதனால் இந்திய ஆளும் வர்க்கத்தினார் அம்மணமாக்கப்பட்டனர். 2005ல் நீதியரசர் ஜீவன் ரெட்டித் தலையிலான ஆணையம் மேற்படிச் சட்டத்தை வன்மையாக கண்ட னம் செய்தி ருந்தது. ஆனால் கொடூரமாக இச்சட்டம் இந்தியாவில் தமது வாழ்வுரிமை க்காக போராடி வரும் மக்கள் மீது பாய்ச்ச ப்பட்டடே வருகிறது. இத்தகைய கொடூரத் தனமிக்க இந்திய ஆளும் வரக்கத்தின் மூலமாகத்தான் தமிழர் உரிமைகளும் அர சியல் தீர்வும் பெற்றுக் கொள்ளத் தமிழ ரின் தலைமைகள் என்போர் இங்கு எதிர்பா ர்த்து நிற்கின்றார்கள்.

நன்றி : படம் புதிய ஜனநாயகம் சென்னை

# பிந்துனுவெவ இனப்படுகொலையின் 11வது ஆண்டின் துயர நினைவு

பிந்துனுவெவ என்றதுமே அனைவருக்கும் பொறிதட்டுவது ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவைவரை பேசப்பட்ட அந்த இருபத்தேழு இளைஞர்களின் இனப்படுகொலைச் சம்பவம்தான். ஏதோவொரு வகையில் போராட்டம் மீதிருந்த ஈடுபாடகன்று சாதாரண சமூக வாழ்க்கைக்குத் திரும்பும் நோக்கத்தோடு இராணுவத்திடம் சரண்புகுந்து எதிர்காலம் பற்றிய ஏராளமான கனவுகளை மனதில் நிறைத்துக்கொண்டு புனர்வாழ்வு முகாமிலிருந்த அந்த இளைஞர்கள் தாம் விடுதலையாகி தனது குடும்பத்தினரோடு சேரும் நாளை எண்ணிக்கொண்டிருந்தனர். அந்த இளைஞர்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு முற்றிலும் நேரெதிரான முடிவொன்று காத்திருந்ததை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

எவ்வாறாயினும் அறிந்தோ அறியாமலோ விரும்பியோ விரும்பாமலோ தாம் மேற்கொண்ட செயற்பாடுகளில் அதிருப்தியுற்று இராணுவத்தினரிடம் சரணடைந்த மற்றும் சண்டைகளின்போது கைதுசெய்யப்பட்ட இளைஞர்களும் மேற்படி புணர்வாழ்வு முகாமில் புணர்வாழ்வு பெற்று வந்தனர். இவைதவிர எந்தப் பாவமும் அறியாத சிறுவர்கள்கூட சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு இங்கு புணர்வாழ்வு அளிக்கப்பட்டனர் இவர்களில் அநேகர் பதினொன்று தொடக்கம் பதினெட்டு வயதிற்குட்பட்டவர்களாவர்.

புலிகளாக காட்டப்பட்ட இந்த இளைஞர்களால் தமக்கு எப்போதுமே ஆபத்து நிகழலாமென்று சிங்கள மக்கள் சிலர் பயந்தனர். பெரும்பான்மை இன மக்களுடைய இந்த மனநிலையை அவ்விளைஞர்களுக்கு எதிராக பயன்படுத்த பேரினவாத தீயசக்திகள் தருணம் பார்த்துக் காத்திருந்தன. குறிப்பாக சிங்கள வீரவிதான அமைப்பும் (ஜாதிக ஹெல உருமய)வும் சிங்கள மக்கள் மத்தியில் விசமப் பிரச்சாரங்களை திட்டமிட்ட வகையில் முன்னெடுத்தன.

வழமையாகவே நிர்வாகத்திற்கும் கைதிகளுக்கும் கருத்து முரண்பாடு ஏற்படுவதொன்றும் புதுமையல்லவே. இது பிந்துனுவெவ முகாமில் மட்டுமின்றி நாட்டின் ஏனைய தடுப்புக்கூடங்களிலும் நிகழ்கின்ற வழமையான விடயமாகும். இங்குள்ள இளைஞர்களுக்கு சிறைச்சாலைகளைவிட சற்றே சுதந்திரம் அதிகமென்பதால் கருத்து முரண்பாடுகளும் காரசாரமாகவே இருக்கும்.

படுகொலை சம்பவ தினமான 2000.10.25ம் திகதிக்கு முதல்நாள் மாலை முகாமின் நிர்வாக அதிகாரிக்கும் புனர்வாழ்வு பெற்றுவந்த கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமானது முற்றிய நிலையில் முகாமின் உடமைகளுக்கு சேதம் விளைவிக்க கைதிகள் முற்பட்டனர். அதனைக்கண்ட முகாமின் பாதுகாப்பு அரணில் கடமையாற்றிய பொலிசார் வானத்தை நோக்கி வேட்டுக்களை தீர்க்க வந்தது வம்பு. அந்த நிமிடம்வரை இம்முகாமின் 'இயல்பு நடவடிக்கைகள் வழமைபோலவே இருந்தது. வெடிச்சத்தத்தில் வெகுண்ட உள்ளூர்வாசிகள் திரண்டு வந்து முகாமை சுற்றிவளைக்க, பொலிசாரும் இராணுவமும் முகாமைக் காவல்காத்தனர். பின்னர் கூடியிருந்த கலகக்காரர்களை அங்கிருந்து அகற்றிய இராணுவமும் பொலிசும் தத்தமது முகாம்களுக்கு திரும்பினர். இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்ட சிங்கள பேரினவாத அமைப்புகளான சிங்கள வீரவிதானவும் சிஹல உறுமய (தற்போது ஜாதிக ஹெல உறுமய)வும் புணர்வாழ்வு முகாமை முற்றுகையிட்டு அங்கு புணர்வாழ்வு பெற்றுவந்த இளைஞர்களைப் படுகொலைச்செய்யும் நோக்கத்தோடு இரவோடு இரவாக ஊரூராகச்சென்று காடையர்களை ஒன்று திரட்டி அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர்.

சம்பவ தினம் (25.10.2000) காலை 8.00 மணியளவில் சுமார் ஆயிரத்து ஐநூற்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் முகாமை சுற்றிவளைத்தனர். நேரம் செல்லச் செல்ல இத்தொகை அதிகரித்துக்கொண்டே சென்றது; ஒருகட்டத்தில் முகாமை சுற்றி[illegible]ரின் எண்ணிக்கை முவாயிரத்தை தாண்டியிருந்தது. தாக்குதல் நடாத்தப்படவிருப்பதை ஏலவே அறிந்திருந்த பொலிசார் இளைஞர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாய்க்கூறி அந்த இளைஞர்களை தங்களின் படுக்கை மண்டபத்திற்குள் செல்லுமாறு பணித்தனர். இளைஞர்கள் மண்டபத்திற்குள் செல்லும்வரை காத்திருந்த காடையர்கள் கொலைவெறியுடன் மண்டபத்தை நெருங்கி தாக்குதல் நடாத்த கைகளில் ஆயுதமேந்தியிருந்த பொலிசாரும் தத்தமது துப்பாக்கி வேட்டுக்களை இளைஞர்கள்மீது பிரயோகித்து தம் வரலாற்றுக் கடமையினை நிறைவேற்றினர். (மேல் நீதிமன்றத்தால் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பின்னர் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் புணர்வாழ்வு முகாமைச் சேர்ந்த இருபத்தேழு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் சம்பவத்தின் இறுதிக் கட்டத்தில் அங்கு வந்த இராணுவத்தினரால் மரணத்தின் விளிம்பிலிருந்த பதினான்கு இளைஞர்கள் காப்பாற்றப்பட்டனர்.

ஆரம்ப கட்டத்தில் இந்த படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளிகள் தகுந்த சாட்சியங்களுடன் கைதுசெய்யப்பட்டு மேல் நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்ட போதிலும் பின்னர் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் வரலாற்றுக் கடமையினை செய்ததற்காய் சிங்கள வீரவிதான அமைப்பினால் கௌரவிக்கப்பட்டனர்). இந்தப் படு கொலை சம்பவத்திற்கு இதுவரை எதுவித நீதியும் கிடைக்கவில்லை. தமிழர்களின் விடுதலைக்காக போராடியதாகக் கூறியவர்களோ ஏனைய தமிழ்த் தலைமைகளோ இதுபற்றி வாய் திறக்கவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது. இலங்கையில் சிறுபான்மையினர்மீது மேற் கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கும் தமிழர் விடுதலை அமைப்புகளென்று கூறிக்கொணடிருந்த தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் இதுவொரு சிறந்த சான்றாகும்

www.padippakam.com



# மகிந்த சிந்தனை ஆட்சியில் அந்நியக் கம்பனிகளுக்கு அரச காணிகள் தாரை வார்ப்பு!



**ஜி.எஸ்.எம்**

,இலங்கையின் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதென்ற போர்வையில் அரச காணிகள் வெளிநாட்டவருக்கு விற்கப்பட்டும் நீண்டகாலக் குத்தகை என்ற பேரிற் கைமாறியும் வருகின்றன. காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்க மறுகப்பதுடன் பல வருடங்களாகக் குடியிருந்த காணிகளையும் பறித்து வரும் மகிந்த சிந்தனை அரசின் கீழ், கேள்விப் பத்திர முறை இல்லா மல் வேறு வகைகளில் வெளிநாட்டவர்களுக்குக் காணிகள் வழங்கப்படுகின்றன.

,இலங்கையிற் பிறந்தவர் வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றிருப்பின் அவர் இலங்கையிற் காணி ஒன்றை வாங்கும் போது அதன் பெறுமதியில் நூறு வீதத்தை வரியாகச் செலுத்த வேண்டும் என்றுள்ள நிலையில் வெளிநாட்டவர் இலங்கையில் அரச அனுசரனையுடன் மிகச் சுலபமாகக் காணிகளை வாங்குவதை நாம் அவதானிக்க முடிகின்றது. காலிமுகத் திடலில் பெறுமதிமிக்க ஏழு ஏக்கர் காணியைச் சீன நிறுவனமொன்றிற்கு 99 வருடக் குத்தகையில் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. முன்னர் இக்காணியை 1370 கோடி ரூபாவிற்கு விற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சீன விமான உற்பத்தி – சந்தைப்படுத்தல் நிறுவனமான CATIC இந்த புதிய ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ளுமா என்பது தெரியவில்லை. குறித்த தொகையை அந்த நிறுவனம் திரைசேரிக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளது.

]இனாதிபதியின் பணிப்புரையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ அமைச்சரவைக்கு மாற்றியமைக்கப்பட்ட பத்திரத்தை சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

குறித்த ஏழு ஏக்கர் காணியை அல்லது மேலதிக ஏக்கர் கானிகளை பாரிய முதலீடடிற்காகக் கொள்வனவு செய்யச் சீன நிறுவனம் விருப்பம் தெரிவித்திருந்தது. இக் காணியானது காலி வீதியில் அமைந்துள்ள தற்போதைய படைத் தலைமையகத்திற்கு அருகில் உள்ளது. ஏற்கனவே ஷங்ரிலா ஹோட்டேல் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனிக்கு வழங்க ஏற்பாடாகியுள்ள 10 ஏக்கர் காணிக்கு அருகில் இது உள்ளது. குறித்த ஷங்ரிலா கம்பனி, பல்துறைப் பயன்பாடுள்ள ஐந்து நட்சத்திர ஹோற்டேல் அமைக்கவும் கடைத் தொகுதி ஒன்றை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது. ஹொங்கொங்கில் பதிவு செய்யப்பட்ட ஏசியா ப்றொஸ்பெக்றஸ் இன்ற்றர்நாஷனல் லிமிட்டட் (APIL)ன் பேரிலேயே அது வாங்கப்படவுள்ளது.

\ங்ரிலா ஹோட்டேல் நிறுவனத்திற்கு ஏற்கனவே விற்கப்பட்ட காணித் தொடர்பில் எதுவித பாதிப்பும் இல்லாத நிலையில், இனி வருங்காலங்களில் அந்நிய முதலீட்டிற்கு காணிகள் வழங்கப்படும் போது அவை ஆகக் கூடுதலான 99 வருட குத்தகையின் அடிப்படையில் வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை விரைந்து வரவழைக்கும் எண்ணம் நிறைவேற்றப்படுகிறது.

காலிமுகத் திடலுக்கு அப்பாற், கடலை நிரப்பிப் பெறப்படவுள்ள 500 ஏக்கர் காணியைத் துறைமுகச் சொகுசு நகரமாக்கும் திட்டம் ஒன்றிற்குச் சீன முதலீட்டாளர்கள் 70 கோடி அமெரிக்க டொலர்களை கொடுக்க முன்வந்தள்ளதாகவும் அத்தொகையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பில் கப்பற் போக்குவரத்து தொடர்பாக இடம்பெற்ற பொதுக் கருத்தரங்கத்தின் போது இலங்கைத் துறைமுக அதிகார சபைத் தலைவர் பிரியத் விக்கிரம இம் முதலீடு பற்றி அறிவித்திருந்தார். முதலீட்டாளர்யார் என அவர் தெரிவிக்கவில்லை.

கொம்பனித் தெரு கங்காராமைக்கு முன்பாகக் கொழும்பு கொமர்ஷல் கம்பனி இருந்த பல ஏக்கர் காணி கட்டிடத் தொகுதியொன்றை அமைப்பதற்காக இந்திய கம்பனிொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக் குறிப்பு எழுதப்படும் போது, பழைய கட்டிடம் இடிக்கப்பட்டுத் தரை துப்பரவு செய்யப்படும் நிலையில், Indocean Developers (pvt) Ltd (வ/ப இந்தோசியன் அபிவிருத்தியாளர் (தனியார்) என்ற விளம்பரப் பலகையை அக்காணி தாங்கியுள்ளது.

கேள்விப் பத்திர முறையில் காணிகளை வாங்குவதற்குப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்கள் போதிய நிதி வளங்களை கொண்டிராத நிலைமையைக் கருத்திற் கொண்டு, அம்முறை மூலம் காணிகள் அந்நிய முதலீட்டிற்கு விடாமல் "வேறு வகையான விதத்தில் முதலீட்டளார்கள்" தெரிவு செய்யப்படுகின்றனர் என நாடாளுமன்றத்தில் பிரதிப் பொருளாதார அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளர். இவ்வாறு கேள்விப் பத்திர முறை இல்லாது அந்நியக் கம்பனிகளுக்கு காணிகள் வழங்குவதில் ஏற்கனவே பல கோடி ரூபாய்கள் ஊழலாக இடம்பெற்றுள்ளமை ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டதைப் பலரும் அறிவர். இப்போதும் அதுவே தொடர்கிறது.

புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டிக்கு அப்பால் உள்ள தீவுகள் இவ்வாறு அரசாங்கத்தால் அந்நிய முதலிட்டிற்கு வழங்க இனங்காணப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன:

இப்பந் தீவு – 152.445 ஏக்கர்
இரமுத் தீவு – 224 ஏக்கர்
வெள்ளைத் தீவு – 58 ஏக்கர்
காக்க தீவு – 67 ஏக்கர்
பெரிய ஆராச்சிலைத் தீவு – 110 எக்கர்
சின்ன இரமுத் தீவு – 40 ஏக்கர்
பத்தலங் குடுவ – 292 ஏக்கர்
கள்ளியவத்தை தீவு – 150 ஏக்கர்
உச்சிமுனைத் தீவு – 1109 ஏக்கர்

,இங்கு குறிப்பிட்ட காணிகளின் உரிமையாளர்கள் யார் என்பது இனிமேல் தான் இனங்காணப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள காணிகள் தனியாருக்கும் அரசாங்கத்திற்கு சொந்தமானவை. இப்பந் தீவில் 135 ஏக்கர் காணிகளை ஒரு தனியார் கம்பனி 200 அறைகள் கொண்ட சுற்றுலா விடுதி அமைப்பதற்குக் குத்தகைக்கு எடுத்துள்ளது. வெள்ளைத் தீவில் 58 ஏக்கர் காணியில் 50 அறைகள் கொண்ட சுற்றுலா விடுதி கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பந் தீவின் வருடாந்த குத்தகை 42 இலட்சம் ரூபா. வெள்ளைத் தீவின் வருமானம் 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா.

திருகோணமலை மாவட்டத்தில், குச்சவெளியில் இரண்டு வெவ்வேறு சுற்றுலாத் திட்டங்களுக்காக 30 ஏக்கர் காணி குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மேற்கூறிய தகவல்கள்; அவற்றைப் பற்றிய கேள்வி ஒன்றிற்கு நாடாளுமன்றத்தில் பதிலளிக்கையில் வெளியிடப்பட்டவையாகும். அமைச்சர்கள் தமக்கு சொந்தமான காணிகளை யாருக்காயினும் கொடுக்கட்டும். ஆனால் நாட்டிற்கும் மக்களுக்கும் சொந்தமான காணிகளை அந்நியக் கம்பனிகளுக்குத் தாரைவார்ப்பது துரோகச் செயல் என நாடாளுமன்றத்திற் கருத்து தெரிவிக்கப்பட்டது. நாட்டுபற்றுப் பற்றி பேசிவரும் மகிந்த சிந்தனை அரசாங்கமே நாட்டின் வளமிக்க காணிகளை அந்நிய கம்பனிகளுக்கு கையளித்து நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து வருகிறது.

தெற்கில் எம்பிலிப்பிட்டிய காகித தொழிற்சாலையை 30 வருடக் குத்தகைக்கு அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கும் திட்டத்தின் கீழ் 60 கோடி ரூபாய் முதலீடு கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. அரச காணிகளையும் தனியார் காணிகளையும் அந்நிய பல்தேசிய கம்பனிகளுக்கும் வேறு வகையான கம்பனிகளுக்கும் தாரைவார்ப்பது என்பது நாட்டை மீண்டும் மறு கொலனியாக்கம் செய்வதாகும். அன்று கொலனிய ஆதிக்கவாதிகள் சட்டத்தின் மூலமும் அடக்குமுறைகளாலும் நாட்டின் வளமான காணிகளைக் கைப்பறறினர். இன்று மீண்டும் நாட்டின் பல பிரதேசங்களிலும் உள்ள வளமிக்க காணிகள் "தேசப்பற்றுள்ள" இலங்கை அரசாங்கத்தால் நவகொலனியவாதிகளுக்குக் குறுக்கு வழிகளிலும் கள்ளத்தனமாகவும் பெருந்தொகை தரகுப் பணம் பெற்றுக் கொண்டு கையளிக்கப்பட்டு வருகின்றது. இம் மறுகொலனிய ஆதிக்கத்திற்கு எதிராக மக்கள் சிந்திக்கவும் செயற்படவும் முன்வராத வரை, அந்நியர்க்கும் அவர்தம் அடியாட்களான ஆளும் வர்க்கத்திற்கும் கொண்டாட்டமேயாகும்.

# சமூக வழக்குகளில் 9

# ■□■□■□ ஏற்றத் தாழ்வுகள்

**சி.சிவசேகரம்**

ஒவ்வொரு சமுதாய அமைப்பும் தனக்குரிய ஏற்றத்தாழ்வுகளை உற்பத்தி உறவுகளின் மட்டுமன்றிப் பண்பாட்டுத் தளத்திலும் பேணுகிறது. இக் கட்டுரைத் தொடர் நமது கொலனியச் சூழலில் தமிழ் சமுதாயத்தினுள் தொடர்ந்தும் ஆதிக்கத்திலுள்ள நிலவுடைமைச் சிந்தனைகள் சமூக வழங்குக்களில் ஏற்றத்தாழ்வுகளை பேண உதவுகின்றன என்பதை மனதிற் கொண்டு எழுதப்பட்டவை. அதிற் குறிப்பிட்டவற்றுக்கும் அப்பாற், பல துறைகளைப் பற்றியும் விரிவாக எழுதவும் இன்னும் விரிவாக ஆராயவும் இடமுண்டு. அத் திசையில் எமது நாட்டின் இளம் சமூகவியல் ஆய்வாளர்களின் கவனம் செல்ல வேண்டும் என்பதே எனது நோக்கம்.

பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அரைத்த மாவையே திரும்பவும் திரும்பவும் அரைக்கின்றனர் என்ற குற்றச்சாட்டில் நியாயமுண்டு. ஆதிக்கத்தில் உள்ள ஆளும் வர்க்கக் கண்ணோட்டத்தினதும் சிந்தனையினதும் தொடர்பில் நமது சமுதாயத்தின் நடைமுறைகளை விசாரிப்பதற்கு இளம் ஆய்வாளர்கள் முன்வருவார்களேயானால், நமது கலை இலக்கியங்கள், பண்பாட்டுக் கூறுகள், சமூக உறவுகள், மதங்கள் போன்று ஒவ்வொன்றிற்குள்ளும் புதிய சிந்தனையைப் பாய்ச்ச இயலும்.

அதினும் முக்கியமாக, நாட்டின் அதிமுக்கியமான பிரச்சனையாக உள்ள தேசிய இனப் பிரச்சனை தேசியவாதத்தால் அணுகப்படுகிற விதத்திலுள்ள உள்ள குருட்டுத்தனமான தேக்க நிலையை விளங்கிக் கொள்ளவும் இயலுமாகும்.

அனைத்தினும் முக்கியமாக நாம் உலகை அறிவது உலகை மற்றவே என்ற மாக்ஸின் கூற்றுக்கமைய நமது சமுதாயத்தின் செயற்பாட்டை நாம் சரிவர விளங்கிக் கொள்ளுவதன் மூலமே சமுதாயத்தை மாற்றலாம் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

நமது சமுதாயத்தின் இருப்பினதும் இயங்கு திசையினதும் ஒவ்வொரு சிறு பகுதியும் ஆழமாக நோக்கி அறியப்படுவது சமுதாய மாற்றத்தை கொண்டு வருவதற்கு மட்டுமன்றி வரக்கூடிய மாற்றத்தின் செல்நெறி தடம்புரளாது தவிர்க்கவும் உதவும் என்பது என் நம்பிக்கை.

இச் சிறு கட்டுரைத் தொகுதியால் ஒரு சில ஆய்வாளர்களேனும் சமூகத்தில் நிலவும் ஆதிக்கச் சிந்தனையை ஆழமாக ஆராயத் தூண்ட இயலுமாயிருப்பின் அது மிகுந்த மன நிறைவைத் தரும்.
(முற்றும்)

## ஆதிக்கச் சிந்தனையும் ஏற்றத்தாழ்வுகளும்

சமூகத்தில் எந்த வர்க்கம் ஆதிக்கத்தில் உள்ளதோ அதன் நலன் சார்ந்த சிந்தனையே ஆதிக்கத்தில் இருக்கும். அந்தச் சிந்தனையை ஆதிக்கத்திற்குட்பட்ட வர்க்கங்கள் உள்வாங்கி ஏற்பதன் விளைவாக ஆதிக்கத்தில் உள்ள வர்க்கம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க இயலுமாகிறது. இது இத்தாலிய மாக்ஸியச் சிந்தனையாளர் அன்தோனியோ கிராம்ஸ்சி மிகவும் தெளிவாக விளக்கியுள்ள விடயமாகும். நாளாந்த ஆயுத ஒடுக்குமுறையால் ஒரு மக்கள்திரளை நீண்ட காலத்திற்கு அடக்கியாள இயலாது. சமுதாய விழுமியங்கள் என்றும் அறங்கள் என்றும் சரி பிழைகள் என்றுங் கூறிச், சுரண்டற் சமுதாய முறையையும் அதன் வர்க்க அமைப்பையும் உற்பத்தி உறவுகளையும் நியாயப்படுத்துகின்ற சிந்தனைகளைத் தட்டிக்கேட்காமல் மக்களைத் தடுப்பது ஆயுத வலிமையல்ல. சிவில் சமூகம் எனப்படுவதற்குள் அதாவது அரசியல் அதிகாரத்துக்கும் அரச இயந்திரத்துடனும் நேரடி உறவற்ற சமூகத்தின் பெரும் பகுதிக்குள் ஆதிக்க வர்க்கத்தின் சிந்தனை ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நலனுக்கான சிந்தனைகள் மேலெழாமல் தடுக்கின்றதாலேயே மாற்றத்திற்கான எழுச்சிகள் மந்தமடைகின்றன.

www.padippakam.com



# மனிக் ஃபாம் அகதிகளின் அவலம்

போர் முடிந்து இரண்டரை ஆண்டுகள் கடந்தும், இன்னமும் அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்லமுடியாமல் மனிக்.'.பாம் முகாமில் அடைபட்டுக் கிடைக்கிறார்கள். இது பலருக்குத் தெரிவதில்லை. 75%க்கு மேற்பட்ட மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்ட நிலையில் மீதமுள்ள 7,500 மக்கள் பற்றிக் கவலைப்பட யாருமில்லை. இந்நிலையில், மனிக்.'.பாம் முகாமில் மட்டும் ??? பேர் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாமல் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அரசாங்கம் மீள்குடியேற அனுமதிக்கப்படாத முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக் குடியிருப்பு மேற்கு, சிவநகர், மந்துவில், மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம் ஆகிய 8.5? கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந் தவர்கள். இந்தப் பிரதேசங்கட்கு மக்கள் அனுமதிக்க ப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் கூறுகிறது. ஏன் என்று மறுத்துக் கேட்பதற்கு யாருமில்லை. முல்லைத் தீவு மக்களைப் பிரநிதித்துவப்படுத்துபவர்கள் என்று சொல்ப வர்களும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல் லிக்கொள்ப வர்களும் எங்கே போனார்கள்? இதே பகுதிக ளைச் சேர்ந்த மேலும் 31,000 அகதிகள் தங்கள் உறவினர்க ளோடு தங்கியிருக்கிறார்கள். அனுமதிக்கப்படாத 8.5 கிராம



சேவகர் பிரிவுகளில் மருதியம்பற்று பிரதேசச் செயலாளர் பிரிவைச் நேர்ந்த அம்பலவன்பொக்கணை, முள்ளிவா ய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளும் முல்லைத்தீவுக் கடலோரத்தின் 32 கிலோமீட்டர் நீளத்தை உள்ளடக்குகின்றன. இவை மீன் வளத்தை உடைய இடங்களாகும். இவற்றை மக்கள் செல்லமுடியாத இடங்களாக அறிவித்ததனால் அம் மக்க ளின் பிரதான வாழ்வாதாரத்திற்கு சங்கு ஊதியுள்ளது. அதேவேளை, மனிக்.'.பாம் முகாமில் எஞ்சியுள்ள மக்க ளைக் கோம்பாவில் பகுதியில் உள்ள இடங்களுக்கு மாற்றுவதன் மூலம் மனிக்.'.பாம் முகாமை மூடிவிட அரசு திட்டமிட்டுள்ளது. அதன் மூலம் இலங்கை அரசின் மீள்குடி யேற்றம் பூர்த்தியடையும். அகதிகளை கோம்பாவிலில் வலுக்கட்டாயமாகக் குடியமர்த்த அரசு முயல்கிறது. இதற்காக முகாமில் உள்ள மக்கள் கட்டாயப்படுத்தப்படு கிறார்கள். இப்போது மனிக்.'.பாம் முகாமுக்கான மருத்துவ சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஒக்டோபர் மாத இறுதிக்குள் முகாம் மூடப்படும், அகதிகள் கோம்பாவிலில் குடியேறலாம் அல்லது தாங்களே தங்கள் இருப்பிடங்களைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதைய நிலையில் அகதிகளுக்கு வேறு தெரிவுகள் இல்லை. சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது. பிற இடங்களுக்குச் சென்று குடியேற உறவுகளோ நிதி வசதி களோ இல்லை. இன்று யாரும் திரும்பிப்பார்க்காத மக்களாக இவ் அகதிகள் மாறியிருக்கிறார்கள்.

கோம்பாவில் கிராம சேவகர் பிரிவில் ஒரு காட்டுப்பகுதியின் நடுவே 600 ஏக்கர் மீள்குடியேற்றத்திற்காக தயார்படுத்த ப்படுகிறது. இப்பகுதி 2009இல் கடுமையான யுத்தம் நடந்த



பகுதியாகும். இங்கே இராணுவம் போருக்குத் தேவையான வகையிலான கண்ணிவெடி அகற்றலை (Battle clearnece) மட்டுமே செய்திருக்கிறது. ஆனால் தொழில்முறையான கண்ணிவெடி அகற்றல் நடைபெறவில்லை. அதனால் இப் போதும் நிலம் சுத்தப்படுத்தப்படும் போது கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால் குறித்த இடத்தில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதை உறுதிப்படுத்தி சான் றிதழ் அளிக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி த்திட்டம் (UNDP) இப்பகுதி கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதி எனச் சான்றிதழ் அளித்துள்ளது. அதே வேளை அகதிகளின் நலன்களுக்குப் பொறுப்பான ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவராண்மை (UNHCR) வாய்பொத்தி வேடிக்கை பார்க்கிறது. ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் எனத் தமிழ் மக்களிடையே கட்டமைக்கப்பட்டுள்ள புனிதங்கள் இனியாவது உடைய வேண்டும்.

# ஊழியர் சேமலாப நிதிக்கு முதலாளிமார் 66 கோடி 60 லட்சம் செலுத்தவில்லை

கணக்காய்வாளர் நாயகம் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பித்த 2009ம் ஆண்டிற்கான அறிக்கையில் ஊழியர் சேமலாப நிதியத்தன் (EPF) முகாமைத்துவ செயற்திற னின்மையால் 2009ம் ஆண்டில் வேலைகொள்வோர் (முத லாளிமார் அல்லது கம்பனி உரிமையாளர்கள்) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்க வேண்டிய பங்களிப்புத் தொகையாக 66 கோடி 60 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டி இருந்தது. இதில் எவ்வளவு இற்றைவரை அறவிட ப்பட்டதெனத் தெரியாது. ஊழியர் சேமலாப நிதியம் அரசாங்க ஊழியர் அல்லாத ஏனையோருக்கும் உரியதாக 1958ம் ஆண்டு 15ம் இலக்கச் சட்டத்தின் கீழ் உருவாக்க ப்பட்டது. இந் நாட்டில் உள்ள மிகப் பெரிய சமூகப் பாது காப்புத் திட்டம் அதுவே. அதன் சொத்து, 2008 டிசம்பரில் 65 ஆயிரத்து 300 கோடி ரூபாவாகும். இத் தொகை, இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் 15%க்கு ஈடானதென்பது குறிப்பிடத்தக்கது.

,இந் நிதியம் உரிய முறையிற் செயற்பட்டால், அதன் வருமானம் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கு வருடந்தோறும் பகிர்ந்தளிக்கப்படும். உரிய நேரத்திற் கோடிக்கணக்கான ரூபாய் வந்து சேராவிட்டால் அதன் மூலமான அனுகூலங்களை ஊழியர்கள் (அதாவது அதன் அங்கத்தவர்கள்) பெறமுடியாது போய்விடும். கணக்கா ய்வாளரின் 2009ம் ஆண்டிற்கான அறிக்கையில் வெளியிட ப்பட்ட தகவல்களிற் சில:

கண்டி வடக்கு தொழிற் காரியாலயம் வேலைகொள்வோர் நால்வரிடமிருந்து ஒரு கோடி பத்து இலட்சம் ரூபாவை அறவிடாதுள்ளது. மேலும் வேலைகொள்வோர் எட்டுப் பேர் மீது வழக்குத் தொடுத்தபோதும் அவர்களிடமிருந்து ஒரு கோடி நாற்பது இலட்சம் ரூபாய் அறவிடப்படவில்லை. மாத்தளை, கொழும்பு மத்தி, கொழும்பு மேற்கு, கொழும்பு கிழக்கு தொழிற் காரியலாயங்களுக்குட்பட்ட பகுதிகளிலு ள்ள வேலைகொள்வோரிடமிருந்து பல கோடிக்கணக்கான ரூபா வருமதியாக உள்ளது.

,இவ்வாறான நிலையில், சேமலாப நிதியத்தை மேலும் சீரழித்து அதன் இருப்பைக் குலைக்கும் நோக்கத்துட னேயே ஆறு மாதங்களுக்கு முன்பு தனியார் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த முற்பட்ட அரசாங்கம் தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பால் மூக்குடைபட்டது. சுதந்திர வர்த்தக வலயத்தின் இளம் ஊழியர் ஒருவரின் உயிரைப் பொலிஸ் துப்பாக்கி மூலம் பறித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பெரும் முதலாளிகள், கம்பனிகள், வர்த்தக, வணிக நிலையங்கள் என்பன ஊழியர்களுக்கான சேமலாப நிதிக்கு வழங்கவேண்டிய தொகையை வழங்காது களவாடி வருகின்றன என்பதையே கணக்காய் வாளர் நாயகத்தின் அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது.

ஊழியர் சேமலாக நிதி என்பது தனியார் துறையிலோ கூட்டுத்தாபனத்திலோ கூட்டுறவுத் துறையிலோ வேலை செய்வோருக்கான ஒரு வகைச் சேமிப்பு வழங்கலாகும். இச் சேமலாப நிதி ஊழியர்களின் ஓய்வு நிலைக் காலத்தில் மொத்தமாக பெறக்கூடியதொன்றாகும். அதற்கான வழங் கல் ஒருவரது அடிப்படைச் சம்பளத்தில் 12 சதவிதத்தை வேலைதருவோரும் 8 சதவீதத்தை ஊழியரு மாக மொத்தம் இருபது சதவீதத்தைச் சேமலாப நிதிக்கு மாதாமாதம் செலுத்த வேண்டும் என்பதே சட்டமாகும். வேலைதருவோர் அச் சட்டத்திற்கேற்பப் பணங் கட்டாது எமாற்றி வருவ தையே மேற்குறித்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

எந்த அரசாங்கமாயிலும் அவை முதலாளிகளின் நலன்கள் காத்து நிற்கும். அரசாங்கங்களேயாகும். இதில் இனவேறுபாடு கிடையாது முலாளித்துவச் சுரண்டலையும் அதனைக் காத்துநிற்கும் அரச அடக்குமுறைகளையும் எதிர்த்து போராடுவதே தொழிலாளர்கள் உழைப்பாளர்களு க்கு உள்ள ஒரே வழியாகும்.

****

# வீட்டுரிமை மறுக்கப்பட்ட தொழிலாளிகளின் அவலம்

இந்த நாட்டின் பொருளாதாரத்தை தம்முதுகில் சுமக்கும் மலையக தோட்ட தொழிலாளர்களின் நாடற்ற பிரச்சினை சட்ட ரீதியாக தீர்க்கப்பட்டாலும் காணி மற்றும் வீட்டு உரிமை பிரச்சினையானது தொடந்தும் இருந்து வருகிறது. சந்ததிக ளின் விருத்தியோடு நாளுக்கு நாள் இப்பிரச்சினை உக்கிர மடைந்து செல்கிறது. இந்த உரிமை மறுப்பை அன்றாட சம்பவங்கள் நமக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துகின்றன. அவ்வாறான சம்பவமொன்று கஹவத்தை பிலான்டேசனுக்கு உரித்தான காஹவத்தை பிரதேசத்தில் உள்ள ஓபாத தோட்டம் இல. 02 மேல் பிரிவில் கடந்த 15.10.2011 அன்று மாலை அரங்கேறியது. அத்தோட்டத்தின் முகாமையாளரின் உத்தரவின் பேரில் அத்தோட்டத்தின் நிரந்தர தொழிலாளி பான மு. புஸ்பவள்ளி அவர்களின் வீட்டின் ஒரு பகுதி உடை க்கப்பட்டுள்ளது. நான்கு பிள்ளைகளைக் கொண்ட இவர் வீடில்லாத நிலையில் தற்காலிக குடிசை வீடொன்றை அமைத்து கடந்த ஒரு வருடமாக வாழ்ந்து வந்தார். இந்நி லையில் இடவசதி போதாமைக் காரணமாகவும் கைக்குழந் தையின் பாதுகாப்பு கருதியும் கடன்பட்டு அமைக்கப்படிருந்த குடிசை வீட்டின் ஒரு பகுதி உடைத்து தரைமட்டமாக்கப்பட டுள்ளது. தொழிலாளி மு. புஸ்பவள்ளி இது தொடர்பாக கஹவத்தை பொலிசிடம் முறைப்பாடு செய்துள்ளார். தொழி லாளர்களின் அடிப்படை உரிமை இவ்வாறன அப்பட்டமாக மீறப்பட்டு வரும் நிலையில் மலையக அரசியல் தலைமைகள் என்போர் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பில் தொடரச்சியாக மௌனம் சாதித்து வரும் நிலையில் தொழிலாளர்கள் ஒன்றுமையாக இதற்கு எதிராக குரல் கொடுப்பதும் ஒன்றிணைந்து ஒரு வெகுஜன அமைப்பின் கீழ் போராடுவதும் தேவையாக உள்ள



படிப்பகம்

www.padippakam.com



# 9/11க்குப் பத்து ஆண்டுகளின் பின்: பாதுகாப்பற்ற உலகை நோக்கி !

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடந்து பத்து ஆண்டுகள் முடிவடைகின்றன. முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் "நீங்கள் ஒன்றில் எங்களோடு இருக்கிறீர்கள் அல்லது எதிரிகளோடு இருக்கிறீர்கள்" என்ற புகழ்பூத்த சொற்களோடு தொடங்கப்பட்ட 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' இன்னும் முடிந்தபாடாக இல்லை. உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் இலட்சக் கணக்கான மக்கள், இதுவரை பல நாடுகளில் சர்வதேசத்தாலும் நாட்டு அரசாங்களினாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தொடங்கிய ஆப்கானிஸ்தான் உலகின் மிக ஆபத்தான இடமாக மாறியிருக்கிறது. ஆப்கானின் மிகவும் பாதுகாப்பான இடமெனக் கருதப்படும் அமெரிக்கத் தூதராலயத்தின் மீதும் மற்றும் நேட்டோ-கூட்டுப்படைத் தலைமையகம் மீதும் கடந்த மாதம் தலிபான்கள் நடாத்திய தாக்குதல் மூலம் குறியீட்டளவில் பாரிய வெற்றியை தலிபான்கள் பெற்றிருக்கிறார்கள். வெல்லவே முடியாத ஒரு போரில் அமெரிக்கா பத்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஈடுபட்டுப் பல்லாயிரக்கணக்கான அப்பாவி ஆப்கானியர்களைக் கொன்று குவித்ததுதான் மிச்சம்.

ஈராக்கில் 'மக்களைக் காப்பாற்றுவது', 'ஆட்சி மாற்றம்' என்ற சொல்லாடல்களின் உதவியோடு படையெடுத்து, சதாமை தூக்கிலேற்றியதைத் தவிர வேறெதையும் அமெரிக்காவால் செய்ய முடியவில்லை. அங்கு இன்னமும் குண்டுகள் வெடிக்கின்றன, அமெரிக்கக் கூட்டுப்படைகள் அப்பாவி மக்களைக் கொல்கின்றனர். பாதுகாப்பின்மை இன்னமும் தொடர்கிறது.

மொத்தத்தில், அமெரிக்காவாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரினாலும் இன்றைய உலகம் மிகுந்த பாதுகாப்பற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது. 'கலாசாராங்களுக்கிடையிலான மோதல்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இன்று சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கிறது. ஒருவகையில் இந்தப் போர் மேற்குலகில் இஸ்லாத்துக்கு எதிரான போராகவும் இஸ்லாமியர்களுக்கெதிரான வெறுப்புணர்வாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. பெண்கள் பர்தா அணிவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் காரணம் காட்டி பிரான்ஸ் அதைத் தடைசெய்ததும் அதையே இத்தாலியும் செய்ய இருப்பதும் சகல முஸ்லிம்களும் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்படுவதும் இதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகள்.

மறுபக்கத்தில் முதலாளித்துவம் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கிறது. எனவே எண்ணெய்க்காகவும் பிற வருமானம் சார் தேவைகட்குமாகப் புதிய களங்களை தேடுகிறது. அதன் பின்னர் அதற்கான காரணங்கள் தேடப்படுகின்றன. மொத்தத்தில் புதிய போர்களைத் தொடக்குவது தவிர்க்கவியலாததாகிறது. அமெரிக்காவில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் அமெரிக்க சனத்தொகையில் 15% (46.2 மில்லியன் மக்கள்) வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஐரோப்பாவில் ஒருபுறம் உலகின் முக்கிய தர நிர்ணய நிறுவனங்களுள் ஒன்றான மூடிஸ் அண்மையில் பிரான்சின் இரு மிகப் பெரிய வங்கிகளின் தரத்தைக் குறைத்துள்ளது. இது முழு பிரான்சையும் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல நாடுகளையும் நெருக்கடிக்குள் தள்ளுகிறது. மறுபுறம் கிரேக்க நாட்டின் கடன் பிரச்சனை தலைக்கு மேல் சென்றுவிட்டது. அது கடன் அடைக்க முடியாத வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. ஆனால் கிரேக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பகுதி என்பதால் அது வங்குரோத்து ஆவதை ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிக்காது. அனுமதித்தால் முழு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் வங்குரோத்தாகும் நிலை ஏற்படும். ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவ தால் சிக்கன நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. வேலையில்லாப் பிரச்சனையும் சமூக அமைதியின்மையும் தவிர்க்கவியலாத அம்சங்களாகிவிட்டன.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தனிநாட்டு அங்கீகாரத்துக்காக போராடிவருகின்ற பலஸ்தீனத்திற்கு ஐ.நாவில் அங்கீகாரமளிப்பதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரிப்பதும் அமெரிக்கா வன்மையாக எதிர்ப்பதும் முதலாளித்தவத்திற்குள்ளான உள்முரண்பாடுகளின் தீவிரத்தை உணர்த்தும் செயல்வினையாகும். தேசங்களைப் 'பாதுகாப்பு அரசுகளாக' மாற்றி மனித உரிமைகளையே மதிக்காத வகையில் அரசுகள் செயற்பட்டுக் கடுமையான சட்டங்களை உருவாக்கியபோதும் பாதுகாப்புணர்வை நிலைநாட்ட முடியவில்லை. இதுதான் இன்றைய யதார்த்தம். உலக மக்கள் எல்லோரும் பாதுகாப்பில்லாத சூழலியே உயிர் வாழ்வதாக நினைக்கிறார்கள். மொத்தத்தில் உலகம் பாதுகாப்பற்ற இடமாக மாற்றப்பட்டிருக்கிறது.

**சேயோன்**

## அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்க மறுத்த வடபுலத்து மாணவன்!

கடந்த 20ம் திகதியன்று யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் கல்வி மேம்பாடு பற்றிய ஒரு மாநாடு நடைபெற்றுது. அதில் வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ. சந்தசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் மற்றும் அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் அதி உச்சபுள்ளிகள் பெற்ற மூன்று வடபுலத்து மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் நெத்த லியாறு தமிழ் வித்தியாலய மாணவன் ப. சேதுராகவன் (194 புள்ளிகள்) அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை மறுத்து நின்றான். ஏனைய இரு மாணவிகள் அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு செய்யுமாறு பெற்றோர்கள் வலியுறுத்திய போதிலும் அதனைச் செய்ய முடியாது எனக் கூறிவிட்டான் அம் மாணவன். இதனால் அமைச்சர் உட்பட அனைவரும் உள்ளார்ந்த அதிர்ச்சிக்கு ஆளாகினர்.



வெளியே வந்த அந்தபத்து வயது சிறுவனிடம் செய்தியாளர்கள் ஏன் அமைச்சரின் கால்களில் விழவில்லை எனக் கேட்டனர். அதற்கு அச்சிறுவன் கூறிய பதில் நான் பெற்றோர் ஆசிரியர் கால்களில் வீழ்வேனே தவிர மற்ற எவரது கால்களிலும் விழமாட்டேன் என்று கூறினான். அத்துடன் தான் யுத்தத்திற்கு மத்தியில் முகாமில் வாழ்ந்து மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் படித்த தாகவும் கூறினான். அடிமைத்தனத்திற்கு தன்னை ஆட்படுத்த மறுத்த இம் மாணவனின் நெஞ்சுரத்தை பாராட்டியே தீரவேண்டும்.

இப் பத்து வயதுச் சிறுவன் யுத்தத்தாலும் நெருக்கடிகளாலும் முகாம் வாழ் வாலும் எவ்வளவிற்கு நெஞ்சம் புண்பட்டு நின்றிருக்கிறான் என்பதன் வெளிப்பாடே அமைச்சரின் கால்களில் வீழ்ந்து அடிமைத்தனத்தை அரவணைக்க மறுத்த நிலைப்பாடாகும். ஜனநாயகமும் இயல்பு வாழ்வும் மறுக்கப்பட்டு அச்சம், அடக்குமுறை, பயப்பீதியின் மத்தியில் மௌன ஆத்திரக் கொதிப்பில் உள்ள மக்களின் மனசாட்சிக் குரலாகவே மாணவன் சேதுராகவனின் நிலைப்பாடு வெளிப் பட்டுள்ளது. இதனை அடக்கியாள்வோரும் அடிமைத் தனத்தில் உழல் வோரும் கவனத்தில் கொள்வார்களா?

## உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

### நடப்பது நன்மைக்கல்ல

தங்கள் மீது நம்பிக்கையில்லாது அந்நிய சக்திகளின் உதவியுடன் எல்லாவற்றையும் நடத்தி முடித்துவிடலாம் என்பவர்கட்கும் உலக நாடுகள் ஒரு நாட்டின் மீது அக்கறை கொள்வது அந் நாட்டு மக்களின் நன்மைக்காகவே என்று கருதுபவர்களுக்கும், உலகம் அவர்கள் சொல்வது மாதிரி இல்லை எனத் தெளிவுபடுத்த, இன்று அரபு எழுச்சியின் தொடர்ச்சியாகத் துனிசியாவிலும் எகிப்திலும் சிரியாவிலும் லிபியாவிலும் யேமனிலும் நடந்துகொண்டிருப்பவை போதுமானவை.

லிபியாவில் ஆட்சி மாற்றத்தை எதற்காக மேற்குலகம் ஆதரித்தது என்பது வெட்டவெளிச்சமாகி உள்ளது. வட ஆபிரிக்காவில் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ள ஒரே நாட்டையும் எண்ணெய்க்காக சிதைத்தாகிவிட்டது. பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவர்கள் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு புரட்சிப் படையினராக வீதிகளில் திரிவதையும் தங்கள் நாட்டுக் கட்டிடங்களின் மீது சரமாரியாகச் சுடுவதையும் வெளிநாட்டுக் கமெராக்காரர்களுக்கு முன் ஓடிவந்து குழந்தைத்தனம் மாறாது கையசைப்பதும் லிபிய விடுதலை என்று சுட்டப்படுவதன் ஒரு அடையாளம் என்றே புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இந்தப் பிஞ்சுக் கைகளில் ஆயதங்களைக் கொடுத்தது யார்? சர்வதேச சட்டங்களும் போராளிச் சிறார்கள் பற்றிய ஐ.நாவின் பட்டயங்களும் எங்கே போயின? விடுதலையின் பேரால் எவருடைய நன்மைக்காகவோ இவர்கள் பலியிடப்படுகிறார்கள். இவர்கள் இழந்த குழந்தைப் பருவத்தை இவர்கட்கு மீட்டுத் தரப்போவது யார்? இனி லிபியா முன்பு போல நிலையான அமைதியான நாடாக இருக்கப்போவதில்லை.

சொத்துச் சண்டையில் ஏற்கனவே தேசிய இடைக்கால சபைக்குள் சிக்கல்கள் அதிகரித்துச் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இது வெறும் தொடக்கமே. அதைவிட, லாபத்தைப் பங்குபோட பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா ஆகியன போட்டி போடுகின்றன. தேசிய இடைக்கால சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரங்கேறும் ஒடுக்குமுறைகளை, வன்முறைகளைக், குறிப்பாக மனித உரிமை மீறல்களை, பற்றிப் பேசுவார் யார்? இவை விடுதலைக்கு கொடுக்கின்ற விலைகளா? இது விடுதலையே அல்ல என அறிய லிபிய மக்களுக்கு நீண்டகாலமெடுக்காது.

கடாபியின் கூலிப்படைகளாக இருந்து சண்டையிடுவதாக குற்றஞ் சாட்டப்படும் கறுப்பின ஆபிரிக்கர்களைத் திட்டமிட்டுக் கொல்வதாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. அதே வேளை, நேட்டோக் கூட்டுப்படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலில் பலியானவர்களுக்குப் பதில் என்ன? மனித உரிமைகள் பற்றி இவர்கள் கவலைப்படுகிறார்களாம் என்று சொல்பவர்களை என்ன செய்வது?

துனிசியாவிலும் எகிப்திலும் சர்வாதிகாரிகளை அகற்றியதோடு புரட்சி முடிந்துவிடவில்லை என்பதை அம் மக்கள் இப்போது உணருகிறார்கள். அதனால் தான் வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியாகப் போராடுகிறார்கள். இப்போது புரட்சிகர முற்போக்கு சக்திகளினால் போராட்டம் முன்னெடுக்கப்படுவது அவசியமான முன்நிபந்தனையாகிறது.

லிபியாவில் அக்கறைப்பட்ட மேற்குலகுக்கு ப.்ரேன், யேமன், சிரியா என்பன எங்கே போயின? இப்போது போர்கள் லாபத்திற்காகவே நடக்கின்றன, யாரையும் பாதுகாக்க அல்ல. பொருளாதார நெருக்கடி முதலாளித்துவத்தை மேலும் போருக்குள்? தள்ளுகின்றது. ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா என்ற வரிசையில் அடுத்ததாக ஈரான், வெனிசுவேலா என்பன இருக்கக்கூடும்.

மத்திய கிழக்கில் ஆட்சி மாற்றத்துக்காக பொதுத்தளத்தில் போராடிய, போராடுகின்ற குழுக்களிற்கிடையிலான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. குறிப்பாக இஸ்லாமிய மதவாத மற்றும் புரட்சிகர சக்திகளிடையே வேறுபாடுகள் சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதோடு இஸ்லாமிய மதவாத சக்திகளின் நோக்கையும் கேள்விக்கு உட்படுத்துகின்றன. இவை எல்லாம் அந்நிய ஆதரவு பற்றி நாம் சிந்திக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன. ஒரு அநியாயத்தை ஆதரிக்கும் சொற்கள் எல்லா அநியாயத்தையும் ஆதரிக்கின்றன. ஒரு அநியாயத்தை எதிர்ப்பது என்பது எல்லா அநியாயத்தையும் எதிர்ப்பதை வேண்டி நிற்கின்றது. நியாயம் என்பது பொதுவானது, சந்தர்ப்பவாதமல்ல. ஆனால், பொதுப்பட, இப்போது நடப்பது எதுவும் நன்மைக்கல்ல.

படிப்பகம்

# கசகறணம் :நாவல் விமர்சனக் குறிப்பு

விமல் குழந்தைவேல், காலச்சுவடு பதிப்பகம், 2011 யூலை, ப. 248, இந்தியா. 175.00



இது பல வகைகளிலும் வித்தியாசமான ஒரு நாவல். மட்டக்களப்புத் தமிழ் மொழியிலேயே கதை கூறப் பட்டுள்ளுமையும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கலந்து வாழுகிற ஒரு பகுதியான அக்கரைப்பற்றுப் பகுதியின் அன்றாட வாழ்வை ஒரு சந்தையை மையப்படுத்திய ஒரு கதையாகக் கூறுவது ஒரு முக்கியமான பண்பு. தேசிய இனப் பிரச்சனையின் விளைவான இன ஒடுக்கல் விடுதலைப் போராட்டத்துக்கு வழியமைத்த பின்பு, ஒன்றுபட்டு நின்ற இரண்டு சமூகங்களைப் பிளவுபடுத்தி அப் பிரதேசத்தைச் சீரழித்ததைக் கூறுவது இன்னொரு முக்கியமான பண்பு. குறுகிய இனப் பார்வையைத் தாண்டித், தமிழ்-முஸ்லிம் இன முரண்பாடு எவ்வாறு தனிமனித உறவுகளில் தொற்றிப்பகை வடிவம் பெறுகிறது என்பதயும் அவ்வாறு பகையாகாமல் தடுக்கச் செயற்பட்ட நல்ல மனிதர்களையும் நாம் கதையினூடு அறிகிறோம்.

மிக முக்கியமாகக், குறிப்பாக யாரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தாமல் மனிதரது இயல்பான நடத்தைக்குரியனவாக நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளமை மெச்சத்தக்கது.

நாவல் என்ற வகையில் கனதியான கதைப்பொருளைக் கொண்டிருந்தும், சுவைபடக் கதைகூறும் ஆசிரியரின் ஆற்றல் பொதுவாகவே பல இடங்களிலும் நேர்த்தியுடன் வெளிப்பட்டபோதிலும், சில குறைபாடுகள் வாசகர்களிடம் மிகுதியான பொறுமையை வேண்டுகின்றன. முக்கியமாக, இரண்டு பாகங்களாக அமைந்துள்ள இந் நாவலின் முதற் பாகத்தில் கதையின் ஓட்டத்திற்குத் தடையாக என்று சொல்லக் கூடிய அளவுக்கு வெறுமனே சுவாரசியங் கருதித் தரப்பட்டுள்ள விவரங்களைக் கூறவேண்டும். அடுத்ததாக, முதற் பகுதியில் கதை கூறுபவரது மொழி வரன்முறை யானதெனக் கூறப்படுகின்ற மொழி வழக்குக்கும் பிரதேச உரைநடை மொழி வழக்குக்குமிடையே ஊசலாடுவதைக் கூற லாம். மட்டக்களப்பு மொழி வழக்குடன பரிச்சயமான வாசகரு க்கும் சொற்களின் அச்சு வடிவம் இடைஞ்சல் ஏற்படுத்தலாம். ஏனெனில் வாக்கியங்களின் சொற்பிரிப்பு பேச்சு மொழியின் சொற்பிரிப்புடன் சிறிது முரன்படுகின்றபோதும் வாசிப்பில் தடங்கல் ஏற்பட இடமுண்டு. பிராந்திய மொழியுடன் ஓரளவு பரிச்சயமுள்ள வாசகர், முற்பகுதியின் முற்பாதியைக் கடந்துவிட்டபின்பு வாசிப்புப் பெருமளவும் எளிதாகி விடுகிறது. எனினும், அக்கறையுள்ள ஒரு வாசகருக்குக்கூட, முற்கூறிய குறைபாடுகள் வாசிப்பைத் தொடர்வதற்கு தடையாகலாம்.

பொதுவாகவே தமிழகத்தில் உள்ள வாசர்களுக்குத் தமிழ்நாட்டுப் பிரதேச-சமூக வட்டார வழக்குகள் பிரச்சினை யாகக் கூறப்படுவது குறைவு. ஈழத்துப் படைப்பொன்றின் மொழி வழக்குச் பெருமளவும் செம்மையான மொழி வழக் கைச் சார்ந்திருக்கும் போதிலும் அதற்கு அடிக்குறிப்பு வேண் டுகின்ற சூழல் அங்குண்டு. இந்த நாவலுக்கு பின்னிணைப்பாக தரப்பட்டுள்ள பிரதேச மொழிச் சொற்களுக்கான விளக்கங்கள் 100 சொற்களை மட்டும் தெரிந்து எந்தவிதமாக தர்க்கரீதியான வரிசைப்படுத்தலும் இல்லாது (ஒரு சில தவறாகவும்) வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான குறை மிகுந்த ஒரு "அகராதி" தேவையா என்பது தான் என் மனதில் எழுந்த கேள்வி. ஒரு நல்ல படைப்பாளி தனது நூலை வெளியிடப் பிறரின் தயவை எதிர்பார்க்கிற அவலத்தின் ஒரு வருந்தத்தக்க வெளிப்பாடாகவே இதைக் கூற முடியும்.

நூலின் வெளிப்புறமும் அச்சமைப்பும் நேர்த்தியாக உளளமை மெச்சத்தக்கது. பௌசர் வழங்கிய முன்குறிப்பில் "நமது விமர்சன உலகில் உள்ள படைப்பு சார்ந்த குறைபாடுகளை மீறி... என்னை இப்படைப்பு பாதித்திருக்கின்றது" என்ற கூற்று எதைக் குறிக்கின்றது என்று விளங்கவில்லை. படைப்புச் சார்ந்த தராதரங்கள் இந்த நூலில் பாராட்டத்தக்களவுக்குப் பேணப்பட்டுள்ளன எனபதே என் எண்ணமாகும்.

எனினும் இந்த நூலை வெளிக்கொண்டுவர உதவிய பௌசருக்கு நாமும் நன்றியுடையோராவோம்.

இந்த நூல் தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றிய அக்கறையுள்ள அனைவரும் கவனத்துடன் வாசிக்கத் தகும் என்று பரிந்துரைப்பேன்.

சிவா

## ஆலோசனை

ஒரு யுகத் துயர் சுமந்து
இன்னுமும் பின்னால் வரும் - என்
சனத்தின் கண்கள் மறைத்துப்
பெரும் புரளி கிளப்பியோடுகிறது உன் நரிக்குணம்.

தேக்காட்டு மாந்தரிவர் வீசியெறிந்த
பிச்சையின் திரட்சியில் தேகம் பெருத்துக்கிடப்பவன் நீ!
எனினும் என் குலத்தாரின் குருதியுறுஞ்சுவதில்
இன்னுமிருக்கிறது வெறியுனக்கு!

வெறுமை கமழத் தேர்தல் வீதிகளில்
திருவோடு சகிதம் வாக்குப் பிச்சை கேட்டு
நீ திரிந்த விதங்கண்டு
பரிதாபங் காட்டினர் இந்தப் பாமரர்!

இராஜ சுகம் தலைக்கேறிக் கிறுகிறுக்கப்
போதையின் உச்சி நின்று
அராஜகம் பலவிழைத்தாய்
உனது ஊழித் தாண்டவங்கண்டு
செய்வதறியாதிவர் விழிக்க
அறிவு பிறழ்ந்தவானாய் ஆனந்தங் கொள்கிறாய்!

பண்ணுவதெலாம் கீழ்த்தரச் செயல்களாயும்
எண்ணுவதெலாம் பிற்போக்குத்தனங்களாயும் இருக்கப்
பெயருக்கு முன்னால் மட்டும்
பெரியதாய் இட்டுக்கொள்கிறாய்
"மாண்புமிகு" என்றதொரு மாயத்திரையை...!

எமக்குத் தெரியும்-
வேதனப் போராட்டத்தில்
வரட்டுக் குரலெடுத்தலறவும் - வீதிகளிலிறங்கி
இம்முறையும் வெறிகொண்டவாறு ஒளிரவும்
இப்போதே ஒப்பனை செய்வாயென்பது...

ஆயின்,
முன்பொரு பொழுதில்
வெற்றியின் விளிம்பு நின்று – அவர்
வீர முழக்கமிட விழைந்த நாழிகையில்
ஓடோடிச்சென்று எஜமானார் கால்கள் தேடி,
அற்ப சுகங்களுக்காய்
அவர்தம் அழுக்குப் பாதங்களை நக்கித் துடைத்து,
ஆனந்தக் கூத்தாடியதும்
அவற்றோடிவரைக் காட்டிக் கொடுத்ததையும்
யாமறிவோம்! மறவோம்!!

பெரு முதலைகள் தின்று துப்பிய
எச்சில் எலும்புகளைப் பொறுக்குமாப்போல்
கிறுக்குப் பிடித்தலையும் மக்கள் தலைவனே..!
உனக்கான உதவித் தொகை பெற்று
மீள்முடியாப் படுகுழியில்
மீண்டுமோர்முறை வீழ்வதைவிட
மாள்வது மேலன்றோ?

-மாக்ஸ் பிரபாஹர்-

# பொதுவுடைமைப் போராளி சூடாமணியுடனான அனுபவப் பகிர்வு

சை. கிங்ஸ்லி கோமஸ்

2011.10.08 தினம் வவுனியா தோணிக்கல் பிரதேசத்தில் வித்தியாசமான நிகழ்வொன்றில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. தனது 75 ஆவது வயதினை ஆரம்பிக்கும் மூத்த பொதுவுடைமை போராளி இ.கா. சூடாமணியின் பிறந்த தினத்தை முன்னிட்டு புதிய ஜனநாயக மார்க்சிய-லெனினிசக் கட்சியின் வவுனியா கிளை, தோழர் சூடாமணியின் குடும்ப உறுப்பினர்க ளுடன் இணைந்து தோழர் சூடாமணியின் அனுபவப் பகிர்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

கொள்கை நடைமுறை வாழ்வு முறை ஆகிய மூன்றை யும் இணைத்து மனித நேயத்தினை அடிநாதமாக கொண்டு மானுட விடுதலைக்கான மாக்சிச-லெனினிசப் பாதையினை வெட்டிய தோழர் சூடாமணி, சீனத்துக் கிழவன் மலைவெட்டப்போன கதையினை ஞாபகமூட்டி யதனைக் காணக்கூடியதாய் இருந்தது. கடந்த சில வாரங்கள் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த இவர் தனது தோழர்களை சந்திக்க பெரும் ஆவல் கொண்டிருந்ததன் காரணத்தால் இந்நிகழ்வு அவரது வாழ்வும் தியாகமும் இன்றைய இளம் தலை முறை யினருக்கு பெரும் படிப்பினையாக அமைந்தது.

யாழ்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சூடாமணி கடந்த 55 வருடங்களாகப் பொதுவுடைமைத் தத்துவ த்தை ஏற்றுக் கொண்டவராக மாத்திரம் வாழாது சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் கலந்து பொலிசாரினால் தாக்கப்பட்டவர் என்பது மட்டுமல்ல பலமுறை பொலிசாரின் ஒடுக்குமுறை காரணத்தினால் சிறையில் அடைக்கப்படடு விடுதலை செய்யப்பட்டவர். இன்று யாழ் நகர இந்து ஆலயங்களில் எல்லா மனிதர்க ளும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி சுதந்திரமாக ஆலய தரிசனம் செய்கின்றார்கள் இந்த ஆலய நுழைவு போராட்டங்களில் இரத்தம் சிந்தியவர் கள் பலர் இருக்கின்றார்கள் என்பதற்கு ஆதாரம் சூடா மணி என்றால் மிகையாகாது. யுத்தத்தின் போது ஒரு காலினை இழந்த தனது மனைவியின் கடினமான வாழ்க்கை: இடம் பெயர்வு: தொழில் இழப்பு வறுமை என்று பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தாலும் மிக திடமாக தான் கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் தளராமல் இன்றும் தனது கட்சிக்காக உழைத்துக் கொண்டு இருப்பதனை பெருமையாக கூறுகின்றார் தோழர் சூடாமணி சின்ன சின்ன சலுகைகளுக்காக தங்களின் கட்சியை கொள்கையை தூக்கி எறிந்தவர்கள் மத்தியில் துப்பாக்கி அச்சுறுத்தல்களுக்கு பயந்து பொது வுடமை இலட்சியத்தை காட்டிக் கொடுத்து தமிழ் தேசிய த்தினுள் புதைந்து போனவர்கள் மத்தியில் சமூகத்தில் இருந்து வரக்கூடிய விமர்சனங்கள் அதைரிய ப்படுத் தக்கூடிய கதையாடல்களை வெற்றி கொண்டு தான் மாத்திரம் இல்லாமல் தனது குடும்பத்தினரையும் வழி நடாத்தி வந்தவர் வவுனியா பிரதேசத்தில் பு.ஜ.மா.லெ.க பலரை உள்வாங்கி தனது கடமையை மிக சரியாக செய்து வந்த தோழர் மலையகத்தின் மக்கள் போராட்ட ங்கள் பலவற்றிலும் இவர் பங்கெடுத்துள்ளார் என்பதனை மலையக தோழர்கள் பலர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

தோழர்கள் நண்பர்கள் உற்றார் உறவினர்கள் வாழ்த்து கூற புரட்சிப்பாடல்கள், கவிதைகள், என நடைபெற்ற நிகழ்வின் போது ஒவ்வொரு பிறந்த தினத்தின் போதும் கட்சிக்காகவும் தேசிய கலை இலக்கிய பேரவைக்கும் தான் சேர்ந்து வழங்கும் நன்கொடையை இம்முறையும் வழங்கியது மாத்திரம் அல்லாது தனக்கு தனிப்பட கிடைத்த பணநன் கொடைகள் அனைத்தையும் ஒரு மாணவனிண் மருத்துவ செலவிற்காக அந்த மேடை யிலேயே வைத்து வழங்கியது அனைவரினதும் கண் களை கலங்க வைத்தது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மலையகம் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு சப்ரக முவ போன்ற பிரதேச தோழர்களும் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்களும் உறவினர் நண்பர்களும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்

55 வருடங்களாக தான் கொண்ட தத்துவத்தினுள் மக்களு க்காய் வாழ்ந்த வாழும் தோழர் சூடாமணி தொடர்பான நூல் தயாராகி வருவதுடன் அவர் தொடர்பான ஆவணப் படம் ஒன்றும் தயாராகி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது வாழ்வும் பகிர்வும் களப்பணியும் இளைய தலைமுறையினரின் இதயத்தில் பதிய வேண்டிய பாடங்களாகும்



மூத்த தோழர் இ.கா.சூடாமணியின் 75வது வயதினை முன்னிட்டு கட்சியும் குடும்பத்தினரும் நடாத்திய ஒன்று கூடல்

www.padippakam.com


ஒக்ரோபர 2011

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



## புரட்சிவாதி சே மக்களிடையே வாழ்ந்து வருகிறார்

**உலகின் உழைக்கும் மக்களால்,** அடக்கியொடுக்கப்படும் மக்களால் போற்றிப் புகழப்படுபவர் 'சே' என்று அன்புடன் அழைக்கப்படும் ஏனஸ்டோ சேகுவேரா ஆவார். பொலீவியாவில் அமெரிக்க சி.ஐ.ஏ உளவுப்பிரிவினரால் 1967ம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி சேகுவேரா கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட 44ம் ஆண்டு தினம் உலகம் பூராவும் நினைவு கூரப்பட்டது. வர்க்கச் சுரண்டல், சமூக கொடுமைகள், ஏற்றத்தாழ்வுகள், வறுமை, தீரா நோய்கள், கல்வியின்மை, அடக்குமுறைகள் போன்றவற்றை எதிர்த்து எழுந்த புரட்சி வீரனே சேயாவார். ஏகாதிபத்தியத்திற்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர் சே. அடக்கி ஒடுக்கப்பட்டு குரல் நசுக்கப்பட்டு இருந்த மக்களின் புரட்சிக் குரலாகப் போராட்டத் தீயாக எழுந்தவர் தோழர் சே. புரட்சிவாதியான ஒரு சேயை அழித்தது அமெரிக்கா. ஆனால் அதன் பின் பல்லாயிரம் சேக்கள் உலகம் பூராவும் உருவாகினர். அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும், ஏகாதியபத்தியத்திற்கு எதிராகவும் எழுந்த சே என்னும் மாக்சியப் புரட்சிவாதி மக்களுக்கான கடும் உழைப்பு, தியாகம், அர்ப்பணிப்பு, நம்பிக்கை, புரட்சி மீதான தாகம், புதிய உலகைப் படைக்கும் சோர்வடையா விருப்பு போன்றவற்றால் புடம்போடப்பட்டவராக வாழ்ந்து வீரமரணம் அடைந்தவர். அவரது நாமம் என்றென்றும் உலக மக்களால் நினைவுகூரப்படும். அவரது போராட்ட பயணம் தொடரும்.

## யாழ். பல். கழக மாணவத் தலைவர் மீதான அராஜகத் தாக்குதலுக்கு கண்டனம்

**வடக்குக் கிழக்கில் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக** இருந்து வந்த ஆயுதக் கலாச்சாரமும் அராஜக தாக்குதல்களும் தற்போதும் நீடித்து வருவதையே யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ் தவபாலன் (வயது 25) மீதான பட்டப்பகல் தாக்குதல் எடுத்துக் காட்டுகின்றது. கறுப்புத்துணிகளால் முகங்களை மறைத்துக் கட்டிய ஆயுததாரிகள் மோட்டார் சைக்கிள்களில் வந்து தவபாலனை வழிமறித்துத் தாக்கி படுகாயங்கள் விளைவித்துள்ளனர். இத் தாக்குதலை எவ்வகையிலும் நியாயப்படுத்தவோ மறைக்கவோ முடியாது. அரசியலில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருந்தமைக்காக பல்கலைக் கழக மாணவத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி தாக்குதலை எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அதேவேளை இத்தாக்குதலானது ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே கருத முடிகிறது. எனவே தொடரும் இது போன்ற ஆயுதம் தாங்கிய அராஜக குண்டர்களின் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என மக்களோடு இணைந்து நின்று எமது கட்சி உரத்துக் குரல் கொடுக்கின்றது. இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில், வடக்குக் கிழக்கில் ஜனநாயகம், சுதந்திரம் இயல்பு வாழ்வு, இல்லாத சூழலை அரசாங்கமே பாதுகாத்து வருகின்றது. அதன் மத்தியிலேயே பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், கொள்ளைகள் மற்றும் கொலைகளை ஆயுததாரிகள் அரங்கேற்றி வந்திருக்கிறார்கள். இன்றும் அதே நிலை தான் தொடர்கிறது. மக்கள் அச்சம் பீதியுடனேயே வாழ்ந்து வருகின்றார்கள். அதேவேளை மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களும் ஊடகவியலாளர்களும் திட்டமிட்ட வகையில் தாக்கப்பட்டு வருகின்றார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு உதயன் ஊடகவியலாளர் குகநாதன் ஆயுதக் குண்டர்களால் தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்தார். அதிலிருந்து இன்னும் அவர் பூரண குணமடைவதற்கு முன்பாகவே நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான தவபாலன் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறான தொடர் தாக்குதல்கள் மூலம் ஆயுதக் குண்டர்களை வழிநடாத்துவோர் தமக்குப் பிடிக்காதோரை பழிவாங்கிக் கொள்வதுடன் மக்கள் மத்தியில் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அச்சம் பீதியை தோற்றுவிக்கவும் முயலுகிறார்கள். இதன் மூலம் ஜனநாயகம் சுதந்திரம் இயல்பு வாழ்வு மீட்கப்படுவதைத் தடுத்து அடக்குமுறைச் சூழலை வைத்திருக்கவே விரும்புகிறார்கள். எனவே ஜனநாயக இடதுசாரி முற்போக்கு சக்திகள் பொதுக் கோரிக்கைகளின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு முன்நிற்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதை எமது கட்சி இவ்வேளை சுட்டிக் காட்டுகின்றது.

## தமிழ் நாட்டின் இன உணர்வும் சாதி வெறியும் பரமக்குடியில் ஜெயாவின் பொலிஸ் வெறியாட்டம்

கடந்த செப்ரம்பர் மாதம் 11ம் திகதியன்று தமிழ்நாட்டின் தென் மாவட்டமான பரமக்குடியில் தாழ்த்தப்பட்ட (தலித்) மக்கள் மீது பொலீஸ் வெறித்தனமாகச் சுட்டதில் ஆறுபேர் உயிரிழந்தனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் காமயமடைந்தனர். தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிவைத்து ஆதிக்க சாதி வெறியர்களும் பொலீசும் இவ்வாறான கொலைவெறித் தாக்குதலை நடாத்துவது இதுதான் முதற் தடவையல்ல. ஆனால், அண்மைய தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வெற்றிபெற்று ஜெயலலிதா பதவிக்கு வந்த பின்னர் பொலிஸ் இரத்தக் காட்டேரிகள் நடத்திய முதல் கொலைவெறியாட்டம் இதுவேயாகும். முதலமைச்சரான அம்மணிக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான இத் துப்பாக்கிச் சூடும் கொலைகளும் கண்களுக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. ஜெயலலிதா ஒரு பிராமணப் பெண்ணாவார். அவர்களது வழிகாட்டிகள் இந்துத்துவப் பிற்போக்குவாதிகள். அவரின் நெருங்கிய சகபாடி குஜராத்தின் முதலமைச்சரும் நரபலி எடுப்பதில் முன்னிற்பவருமான நரேந்திர மோடியாவார். இவற்றுக்கு மேலாக பரமக்குடியில் முக்குலத்தோர் (தேவர்,கள்ளர், அகம்பம்படியார்) எனப்படும் ஆதிக்க சாதிகளின் வாக்கு வங்கி ஜெயலலிதாவிற்கு தேவை. ஜெயலலிதாவின் அன்பு தோழி சசிகலாவும் அவரது கணவர் நடராஜனும் தேவர் சாதியை சேர்ந்தவர்கள். அவர்களுக்கெனத் தனிச் செல்வாக்கும் வாக்கு வங்கியும் உண்டு. இந்நிலையில் ஜெயலலிதா பரமக்குடியின் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எவ்வாறு பேசவோ உதவவோ முடியும்? தமிழ்நாட்டில் சாதியமும் தீண்டாமையும் இப்போதும் தலைவிரித்தாடுகின்றன. இதே சாதியத்தை முன்வைத்தே அங்கு வாக்கு வங்கிகள் கட்டியெழுப்பப்பட்டன. ஒவ்வொரு சாதிக்கும் சாதித் தலைவர்கள் உண்டு. அவர்கள் சாதியின், பெயரால் வாக்குகள் பதவிகள் பணக்குவியல்கள் நிலங்கள் சொத்துக்கள் சேர்த்துக் கொள்கிறார்கள். அரசியலும் மதமும், சினிமாவும் சாதியத்தைப் பாதுகாத்து வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமன்றி முழு இந்தியாவிலும் இதே கதைதான். இந்தியா பழம்பெருமை பேசும் போது இந்த இழிநிலையான சாதியத்தையும் சேர்த்துதான் பேசுகிறது. தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் முக்குலத்தோரின் எண்ணிக்கை அதிகமானதாகும். இவர்கள் அரசு பட்டியலில் பிற்படுத்தப்பட்டோர் வரிசையில் உள்ளனர். ஆனால் சாதியம் தீண்டாமை பார்ப்பதில் இவர்களே ஆதிக்க சாதி வெறியுடையோர். இவர்களின் தலைவரே



பசும்பொன் முத்துராமலிங்க தேவர். இவருக்கு வருடா வருடம் விழா எடுப்போர் முக்குலத்தோர். அதேபோன்று தாழ்த்தப்பட்ட (தலித்) மக்களின் தலைவராக இருந்து 1957ல் ஆதிக்க சாதிவெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட இமானுவேல் சேகரன் அவருக்கும் வருடா வருடம் தாழ்த்தப்பட்ட மக்கள் விழா எடுப்பர். இவ்வருடமும் இமானுவேல் சேகரனுக்கு விழா எடுப்பதை ஜெயாவின் பொலிஸ் படை தடுத்தது. கலவரம் வருமெனக் காரணம் காட்டியது. அதனையும் மீறிச் சுமார் முப்பதினாயிரம் மக்கள் கூடினர். இதனைப் பொறுக்கமாட்டாத நிலையிலேயே காக்கிச் சட்டை போட்ட சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கின்றார்கள். இருந்தும் காயப்பட்டும் இரத்தம் சிந்தியுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிவெறியை எதிர்த்த சாட்சியத் தியாகிகள் ஆகியுள்ளனர்.

தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியம், தமிழ் உணர்வு, தமிழன் பெருமைப் பற்றிப் பேசுவோர் இந்த மக்களுக்கு என்ன கூறுவார்கள். சீறியெழும் சீமானும், புயலாகி நிற்கும் வைக்கோவும் இனமானவரான நெடுமாறனும் மட்டுமன்றி சக்கர நாட்காலியில் "தமிழாக" வாழ்ந்துவரும் மு. கருணாநிதியும் என்ன சொல்வார்கள்? இத்தகைய தனவந்தர்கள், நிலவுடைமை மிகுந்தோர், கோடிஸ்வரர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு பொருட்டேயில்லை. வாழ்க தமிழ்நாடு! வளர்க தமிழ்! வெல்க இன உணர்வாளர்கள்! இதுதான் தமிழ்நாட்டின் தமிழர்களது தமிழ் உணர்வு என்றால் அவர்களது முகங்களில் காறித்துப்புவதே சரியானதாகும்.






ஞா. சிறீ மனோகரன் எழுதிய இஸ்ரேலின் உருவாக்கம் நூல் வெளியீடு உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற போது வசாவிளான் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஆர்.சீ.நடராஜா தலைமை தாங்குவதையும் ரீ.வி.கிருஸ்ணசாமி உரையாற்றுவதையும் நூலாசிரியர் ஏற்புரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்

படிப்பகம்